
கல்கி



KALKI 3-2-1957 4 அணா

நேரடியாக லண்டன்—நியூயார்க்



பி.ஓ.ஏ.ஸி. ஸ்தாபனத்தார் நேரடியாக லண்டன்—நியூயார்க் செல்வதற்கு முதல் வகுப்பு அல்லது டூரிஸ்ட் வகுப்புகளையுடைய உன்னதமான புதிய DC-7C விமானங்களை படிப்படியாக உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வியாபார நிமித்தமோ அல்லது உல்லாசப் பிரயாணமோ எதுவாயினும் சரி அட்லாண்டிக் மகா சமுத்திரத்தை துரிதமாக கடந்து செல்ல இந்த பி.ஓ.ஏ.ஸி. விமானம் உதவுகிறது. சௌகரியமான சீதோஷ்ண நிலைமையில் பறந்து செல்ல இந்த DC-7C விமானத்தில் நவீன ராடார் சாதனம் பொருத்தப்பட்டிருக்கிறது. இன்றே பி.ஓ.ஏ.ஸி. DC-7C விமானத்தில் பறந்து செல்லுங்கள்.

சென்னையிலிருந்து நியூயார்க் ஒரு வழிக் கட்டணம் ரூ. 4646/- போகவர ரூ. 8377/- டூரிஸ்ட் வகுப்பு ஒரு வழிக் கட்டணம் ரூ. 2866/- போகவர ரூ. 5174/- இந்த சலுகை 1957-ம் ஹு பிப்ரவரி மீ 28 உ வரை அமுலில் இருக்கும்.

விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் ட்ராவல் ஏஜெண்டையோ அல்லது பி.ஓ.ஏ.ஸி., 88/4 மவுண்ட் ரோட், மதராஸ்-2, டெலிபோன் 86994-இவர்களைக் கலந்துகொள்ளுங்கள்.

B·O·A·C PLUS DC-7C

பி. ஓ. ஏ. ஸி. DC – 7C விமானம்

சிறந்த சேவை
மேலும்
துரிதமான விமானம்

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷன்

மலர் 16 இதழ் 27

கல்கி

துன்முகி ஹு தை 21

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


V.K. BRAND
நீண்ட காலம் நன்றாக உழைக்கக்
கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களுக்கான டிரேட் மார்க்
V. K. பிராண்ட்தான்
STAINLESS STEEL
M. M. & Co.
எங்கும் கிடைக்கும்
MANUBHAI MULCHAND & CO.
Behind Mumbadevi P. O. BOMBAY-2
Gram: "MANMUL" : Tel: 71534



மலர் 16 இதழ் 27	தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*	துன்முகி௵ தைமீ 21உ

ஐ. நா. சபைக்கு அதிகாரம் ஏது?

வேலியே பயிரை மேயத் தொடங்கி யிருக்கிறது! ஐக்கிய நாடுகளின் பந்தோபஸ்து சபை அநீதிக்கு அடிகோலி யிருக்கிறது; அநீதிக்கும் உலக அமைதிக்கும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட மேற்படி ஸ்தாபனம், ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் அதில் தலையிட்டுத் தடுப்பதற்காகத் தோன்றிய சபை, காஷ்மீரில் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்கு ஊக்கம் அளித்திருக்கிறது; அமைதிக்குக் குந்தகம் ஏற்படும்படியான முறையை மேற்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு நாட்டுக்கும் தன் ஆட்சியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளப் பூர்ண உரிமை உண்டு; அந்த உரிமையில் தலையிட வேறு எந்த நாட்டுக்கும் அதிகாரமில்லை என்பது ஐக்கிய நாடுகள் சபை சாஸனத்தின் முக்கியமான அம்சமாகும். உலக நாடுகளின் அதுபோன்ற ஜீவாதார உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே, ஐ. நா. பந்தோபஸ்து சபை அமைக்கப்பட்டது. ஆனால், அந்தச் சபையை ஆட்டி வைக்கும் வல்லரசுகளே இப்போது மேற்படி சாஸனத்தைக் கிழித்தெறிய முற்பட்டு விட்டன. தங்களுடைய பந்தோபஸ்துக்கென்று உலக அமைதியை நாசஞ்செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தான், காஷ்மீர்மீது அக்கிரமமாக எதிர்பாராத முறையில் ஆக்கிரமிப்புச் செய்தது. அதன் போக்கைக் கண்டித்து ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும் என்று இந்தியா ஐ. நா. சபையிடம் முறையிட்டுக் கொண்டது. அதன் பிறகு காஷ்மீர் தான் நிம்மதியாக வாழ வழிவகைகள் தேடி அமைத்துக் கொண்டு இந்த எட்டு ஆண்டுகளாக அமைதியாக வாழ்ந்து வந்துள்ளது.

காஷ்மீர் மக்கள் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி அதன் மூலம் தங்கள் விதியைத் தங்களுடைய நன்மைக்கு ஏற்பத் தாங்களே நிர்ணயித்துக் கொண்டார்கள். காஷ்மீர் பாரத நாட்டைச் சேர்ந்த ஒரு பகுதியாக முடித்தார்கள். அச் சபையில் சட்டம் நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டத்தை இந்த வருஷம் ஜனவரி 26-ந் தேதி குடியரசு தினத்தன்று அமுலுக்குக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்தார்கள்.

தர்மநியாயமான இந்த முடிவைக் கண்டு திகிலடைந்த பாகிஸ்தான், ஐ. நா. சபையில் தன் ஆட்சேபணையைத் தெரிவித்தது. அந்த ஆட்சேபணையை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்காவும் பிரிட்டனும், அவை ஆட்டி வைக்கும் மற்ற நாடுகளும் பந்தோபஸ்து சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன. காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை அதன் எதிர்காலத்தைப் பற்றிச் செய்யும் எந்த முடிவையும் கொண்டு காஷ்மீர் பிரச்னை தீர்ந்ததாகக் கருத முடியாதாம். இதுதான் பந்தோபஸ்து சபை செய்துள்ள தீர்மானத்தின் சாரம். போதாக்குறைக்கு, இந்தியப் பிரதிநிதியின் வாதத்தை முழுதும் கேட்காமலும் ஆய்ந்தோய்ந்து பாராமலும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

அதாவது ஒரு நாட்டின் சுய நிர்ணய உரிமையில் மேற்படி சபை தலையிட்டிருப்பதுடன், இந்தியப் பிரதிநிதி தமது கட்சியை எடுத்துக் கூறுமுன்பே தயாரிக்கப்பட்ட தீர்மானத்துக்கு முத்திரை வைத்துவிட்டது! ஒரு கட்சியின் வாதத்தை முழுதும் கேட்காமல் தீர்ப்புக் கூறும் நீதிபதியைப் போல அச்சபை அநீதி செய்திருக்கிறது.

இவ் விஷயமாக ராஜாஜி ஜனவரி 29-ந் தேதியன்று விடுத்துள்ள அறிக்கையில் மிகத் தெளிவாகச் சில விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளார்:

"காஷ்மீரில் சட்டபூர்வமான சர்க்கார் அமைதியாகவும் உறுதியாகவும் ஸ்தாபிக்கப்பட்டு யாதொரு பிணக்கும் தகராறுமின்றி நிர்வாகம் நடந்து வருகிறது.

"அங்கு உள்நாட்டு அமைதிக்காவது உலக அமைதிக்காவது எவ்வித ஆபத்தும் ஏற்பட்டு விடவில்லை. அதற்கு மாறாக இந்திய சர்க்காரும் பாகிஸ்தான் சர்க்காரும் வர்த்தக சம்பந்தமான பல பரஸ்பர ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

"உலக அமைதிக்கு ஆபத்து ஏற்படும் போது மாத்திரமே ஒரு நாட்டின் விவகாரங்களில் பந்தோபஸ்து சபை அவ்விஷயமாகக் கவனம் செலுத்த வேண்டும். பந்தோபஸ்து சபை அங்கத்தினர்களின் அவ்வப்போது ஏற்பட்ட விருப்பு வெறுப்புகளின்படி தரும் வோட்டுகளின்படியோ, அல்லது வல்லரசுகளின் இராணுவ தந்திரத் தேவைகளை அனுசரித்தோ ஆதிபத்திய உரிமையை விநியோகிப்பதற்காகப் பந்தோபஸ்து சபையின் அதிகாரத்தை உபயோகிக்கக் கூடாது. ஐ. நா. சபை இருப்பது ஆக்கிரமிப்பைத் தூண்டுவதற்காக அல்ல.

"சைப்ரஸ், அல்ஜீரியா விஷயத்தில் பந்தோபஸ்து சபை தலையிட வேண்டிய அவசியத்தைக் காணாமல் காஷ்மீரில் உள்ள ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து இரண்டு ராஜ்யங்களாகப் பிளக்க அச்சபை ஏன் இவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளது என்பது வியப்பாகும்.

"காஷ்மீரில் நிலவும் அமைதியைப் புறக்கணிக்க ஐ. நா. சபைக்கு அதிகாரம் உண்டு என்றால், கானடாவைக் கூடப் பிரஞ்சுக்காரர்கள் பிரதேசமென்றும், பிரிட்டிஷ்காரர் பிரதேசமென்றும் இரண்டாகப் பிரித்து விடலாமே!"

இவ்விதம் பந்தோபஸ்து சபை செய்துள்ள அநீதியை ராஜாஜி எடுத்துக் காட்டுகிறார்.

* * *

பந்தோபஸ்துசபையின் செய்கையிலிருந்து ஓர் உண்மை ஐயத்திரிபுக்கு இடமின்றி அம்பலமாகியிருக்கிறது. "எங்கள் கட்சியில் உள்ள நாடு அநீதி செய்தாலும் நாங்கள் அதை ஆதரிப்போம்; நீதி நெறியை இலட்சியமாகக் கொண்டு நடுநிலைமை வகிக்கும் நாட்டை ஆதரிக்க மாட்டோம்" என்று பாகிஸ்தானின் இராணுவக் கூட்டாளிகளான பிரிட்டனும் அமெரிக்காவும் மறைமுகமாகப் பிரகடனப் படுத்தியிருக்கின்றன. அவ்விரு நாடுகளின் தயவை நாடும் மற்ற நாடுகளும் அதே பக்கம் சாய்ந்திருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

மேற்படி சபையின் அநீதியான தலையீட்டை ருஷ்யா தடுத்திருக்கலாம். ஆனால், ராஜாஜி தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல், சமீபத்தில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்லுறவு வளருவதற்கு நடந்த நிகழ்ச்சிகள், ருஷியா இந்தியாவைப் பற்றித் தப்பெண்ணம் கொள்ளும்படியாகச் செய்திருப்பது வருந்தத்தக்கதாகும். அதனால் தான் ருஷ்யா தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து ஐ. நா.வின் அநீதியான இச்செய்கையைத் தடுக்கவில்லை.

காஷ்மீர் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணய சபைக்கு அந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள உரிமையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, அரசியல் தர்மத்துக்கும் ஜனநாயக முறைக்கும் முற்றிலும் விரோதமாகும்.

எகிப்து விவகாரத்தில் செய்ததைக் கண்டு தனிப்பட்ட வல்லரசுகள் அநீதி இழைத்தால் ஐ. நா. சபையின் உதவியை நாடலாம் என்ற நம்பிக்கை உலக நாடுகளிடையே நிலவி வந்தது. ஆனால், ஐக்கிய நாட்டுச் சபையே அநீதிக்கு உடந்தையாக இருக்க முற்பட்டு விட்டால், பிறகு உலக நாடுகளின் கதி என்ன ஆவது?

நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்-2

சென்ற இதழின் தலையங்கத்தைப் படித்துவிட்டுப் பல அன்பர்கள் நமக்கு நன்றி தெரிவித்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.

தேர்தல் சமயம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. நாட்டில் பல கட்சிகள் தோன்றிப் போட்டி போடுகின்றன. இந்த நிலையில் சாதாரணமாக யாருக்கு வோட்டுப் போடுவது என்று தெரியாமல் தர்மசங்கடத்தில் தவித்துக் கொண்டிருந்த மக்கள் தங்களுக்கு நல்ல முறையில் வழி காட்டியமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து வருகிறார்கள்.

ஆனால் நமது தலையங்கம் சிலருடைய மனத்தில் குழப்பத்தையும் கலவரத்தையும் உண்டாக்காமலும் போகவில்லை.

"நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று சொல்லுகிறீர்களே! காங்கிரஸ்காரர்களுக்கு வோட்டுப் போடாதே என்று சொல்லுவது போல் அல்லவா இருக்கிறது? அப்படியானால் நீங்கள் காங்கிரஸை விட்டே விலகி விட்டீர்களா?" என்று சிலர் கேட்கிறார்கள்.


நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்றால் காங்கிரஸ்காரர்களுக்குப் போட வேண்டாம் என்று பொருள்படும் நிலைமை ஏற்பட்டு விட்டது. இது எவ்வளவு வருந்தத்தக்க நிலைமை! இப்படிக் கேட்பவர்கள் யார்? காந்தி மகான் வளர்த்த ஸ்தாபனமாயிற்றே என்று பக்தி செலுத்துபவர்கள். நீண்ட நாளாக யாதொரு பயனும் எதிர்பாராமல் காங்கிரஸினிடம் பற்றுக் கொண்டு வாழ்பவர்கள். கதர் அணிபவர்கள். பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் அவர்கள் கொண்டிருக்கும் உறவு காரணமாகக் காங்கிரஸின் போக்கைக் கண்டிக்கத் தயங்குபவர்கள்.

நாமும் காங்கிரஸுக்கு விரோதிகள் அல்ல. காங்கிரஸ் நல்ல நிலையில் பாரத நாட்டில் துலங்க வேண்டும் என்றே விரும்புகிறோம்.

ஆனால் அந்தக் காங்கிரஸை நிர்வகிக்கும் சென்னைத் தலைமை சரியாக இல்லை. இது நம்முடைய அபிப்பிராயம் மட்டுமல்ல, பொதுமக்களின் ஏகோபித்த அபிப்பிராயமுமாகும். இதற்குக் காரணம் என்ன? எந்தக் காங்கிரஸ் ஸ்தாபனம் தமிழகத்தில் சாதி ஒழிப்புக்குப் பாடுபட்டதோ அந்த ஸ்தாபனத்தில் இன்று சாதி பேதங்களை யொட்டி நடக்கும் அட்டூழியங்கள் கொஞ்சமல்ல.

துவேஷத்தையே வளர்க்கும் ஒரு கட்சியின் தலைவர், சாதிபேதம் பாராட்டாத காங்கிரஸ் ஸ்தாபனத்தின் தலைமைப் பீடத்தை வாயார மனமாரப் பாராட்டுகிறார். இதிலிருந்தே தமிழ்நாட்டுக் காங்கிரஸில் கறுப்புத் துவேஷம் எவ்வளவு தூரம் புகுந்து விட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

பாம்புக்குப் பால்!



உலகமே போற்றி வணங்கும் காந்திமகானை அந்தத் துவேஷக் கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டதில்லை. அவருடைய போக்கை இடைவிடாமல் எதிர்த்து வந்தார். காங்கிரஸையும் ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் இன்றைய சென்னை காங்கிரஸ் ஆட்சியின் முதல் மந்திரியைப் பாராட்டுகிறார்! காங்கிரஸ் வெற்றி பெற வேண்டும் என்று கோரவில்லை; திரு காமராஜ் ஜெயிக்க வேண்டும் என்கிறார்! இதன் பொருள் என்ன? தமது துவேஷத் திட்டங்கள் எல்லாம் சென்னையில் இந்தக் காங்கிரஸ்காரரின் தலைமை இருந்தால்தான் வெற்றிகரமாக நிறைவேறும் என்பதுதானே பொருள்?

இப்படிப்பட்ட தலைமையை எந்த உண்மை காங்கிரஸ்காரரால் ஏற்க முடியும்?

அதனால்தான் நாம் சொல்லுகிறோம்: காங்கிரஸ் ஸ்தாபனம் மிகப் புனிதமான ஸ்தாபனம். பெரிய பெரிய தலைவர்கள் பல காலம் சிறைபட்டும் மற்றும் பல அல்லல்களுக்கு உள்ளாகியும் வளர்த்த ஸ்தாபனம். அதன் புனிதத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும். அதன் சீலம் நீலை நாட்டப்பட வேண்டும்! அதற்கு ஒரே வழி, பொதுமக்கள் அந்தப் புனிதப் பணியை ஏற்றுக் கொண்டு நல்லவர்களுக்கு வோட்டைப் போடுவது தான்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனம், இப்பொழுது பொறுக்கியுள்ள அபேட்சகர்களில் பலர் வகுப்புவாதிகளும் சுயநலவாதிகளும் ஆவார்கள்.


உதாரணமாக, காரைக்குடித் தொகுதிக்குத் திரு மு.அ.முத்தையாச்செட்டியார் அவர்களுக்குக் கதர் ஆடை அணிவித்துக் காங்கிரஸ் அபேட்சகராக சென்னை காங்கிரஸ் தலைமைப் பீடம் நிறுத்தி வைத்திருக்கிறது. இவருக்கும் காங்கிரஸுக்கும் என்ன சம்பந்தம்? இவரை நிறுத்தி வைத்திருப்பதற்குக் காரணம் இவரிடம் பணம் இருக்கிறது என்பதுதானே! கோடிக் கணக்கான ஏழை மக்கள் கண்ணீர் சிந்தியும் தடியடி பட்டும் சிறைவாசம் செய்தும் எழுப்பிய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இந்தக் கோடீசுவரருக்கு என்ன ஜோலி? இதுதான் காங்கிரஸ் பிரகடனம் செய்துள்ள சோஷலிஸத்தை வளர்க்கும் முறையா?

இப்படிப்பட்ட நபர்களை அபேட்சகர்களாக நிறுத்தி வைத்திருக்கும் தலைமை தமிழ் நாட்டில் நீடிக்கக் கூடாது.

ராஜா முத்தையாச் செட்டியார் நிற்கும் தொகுதிக்குக் காங்கிரஸ்காரர்கள் ஆதிமுதல் மதித்து வரும் திரு சா. கணேசன் அவர்கள் நிற்பதாகத் தெரிய வருகிறது. அவர் ஏழை. ஆயினும் அவர் நிற்கப் போவதை அறிந்து பயந்து அவரை நிற்காமல் செய்யப் பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. காங்கிரஸின் தேர்தல் பிரகடன நோக்கமான சோஷலிஸத்தைக் காப்பாற்றுவதற்காவது காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் திரு சா. கணேசனை ஆதரிக்க வேண்டும்.

அதனால்தான் நாம் சொல்லுகிறோம், யோக்கியர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள்; நல்ல சீலம் படைத்தவர்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள். காங்கிரஸ்காரராயிருந்தாலும் பரவாயில்லை, நல்லவர்களாகத் தேர்ந்தெடுத்துச் சட்டசபைகளுக்கு அனுப்புங்கள் என்று பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்!


குடியரசுத் திருவிழா





ஜனவரி 26-ந் தேதி சனிக்கிழமை பாரத தேச மெங்கும் இந்தியக் குடியரசு தின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். சர்க்கார் காரியாலயங்களிலும், ரயில்வே நிலையங்களிலும் கண்ணைப் பறிக்கும் தீபாலங்காரங்கள் ஜகஜ்ஜோதியாக மின்னின. சென்னையிலும், தில்லியிலும் குடியரசு தின விழாவன்று கொடியேற்று வைபவமும் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளும் நடைபெற்றன. சென்னை ராஜ்யத்தின் புதிய கவர்னர் திரு ஏ. ஜே. ஜான் ஐலண்டு மைதானத்தில் அசோக சக்கரம் பொறித்த தேசியக் கொடியை ஏற்றிப் பறக்க விட்டார். பின்னர் ராணுவ அதிகாரியுடன் ஜீப் வண்டியில் ஏறிப் போலீஸ் அணிவகுப்பைப் பார்வையிட்டார். அன்று மாலை கிண்டி ராஜபவனத்தில் கவர்னர் அளித்த குடியரசு தினத் தேநீர் விருந்தில் ராஜாஜி கலந்துகொண்டு சிறப்பித்தார். மேலே: தில்லியில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பில் ஜனாதிபதி ராஜன் பாபுவும், ஜவாஹர்லால் நேருவும்.

★★★



நமது நாட்டு வைத்தியம்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எங்கு கண்டாலும் இன்புளுவன்ஸா வியாதி பரவியது. யாரைக் கேட்டாலும் இன்புளுவன்ஸா என்று சொல்லி வந்தார்கள். சிறிது நாட்களுக்குப் பிறகு அதன் காலம் ஒடுங்கியது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இரண்டு எழுத்து எங்கும் அமர்க்களப்பட்டது. 'டி.பி.' என்று எல்லோர் வாயிலும் தாண்டவமாடியது. யாருக்காகிலும் நோய் என்றால் அது டி. பி. நோயாகத்தான் இருந்தது. பிறகு இதனுடைய காலமும் ஒடுங்கியது!

வியாதிகளின் காலம் ஒடுங்கியதற்குக் காரணம் அந்த அந்த வியாதிகளைக் கண்டிக்கத் தகுந்த வன்மையான மருந்து கண்டு பிடிக்கப்பட்டது தான். இன்புளுவன்ஸாவுக்கும் டி. பி. நோய்க்கும் மிக நல்ல மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் நோயின் உபாதையிலிருந்து விடுபட்டுச் சுகமாக வாழ்ந்து வருகின்றனர். இதற்கெல்லாம் மேனாட்டு மருத்துவ ரசாயனத்துக்கு உலகமே நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

இன்று எங்கும் எல்லோருடைய வாயிலும் புழங்கி வரும் நோய் 'பிளட்பிரஷர்' என்பது. யாருக்காகிலும் நோய் என்று கேள்விப்பட்டுச் சென்றால், பிளட்பிரஷர் என்ற பெயர்தான் காதில் விழுகிறது. இப்படி இந்தக் காலம் 'பிளட்பிரஷர் — ஹைபர் டென்ஷன்' காலமாக இருக்கிறது!

இதற்கு மேனாட்டு வைத்திய நிபுணர்கள் மருந்து கண்டு பிடிக்க எவ்வளவோ முயன்றார்கள்; முடியவில்லை. கடைசியில் பாரத நாட்டிலே பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த வியாதிக்குச் "சர்ப்ப கந்தி" என்ற பச்சிலையை உபயோகித்துக் குணப்படுத்தி வந்தார்கள் என்பதைக் கண்டார்கள். இந்தச் சர்ப்ப கந்தி நல்ல பலன் அளிப்பதையும் கண்டார்கள். அதன் பயனாக இன்று என்ன நடைபெறுகிறது, தெரியுமா? நமது நாட்டிலிருந்து சர்ப்பகந்தி மேல் நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. அந்தச் சர்ப்பகந்தி மூலிகையினால் செய்யப்பட்ட மருந்துகள் பல வர்ணச் சீசாக்களில் நமக்கு மீண்டும் வந்து சேர்கின்றன! எப்படியிருக்கிறது கதை!

'பிளட் பிரஷர்—ஹைபர் டென்ஷன்' என்ற இந்த நரம்பு சம்பந்தமான, இரத்த சம்பந்தமான வியாதிகளுக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர் மருந்து கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது உள்ளத்திலே ஒரு பெருமித உணர்ச்சி பொங்குகிறது.

இம்மாதிரி எத்தனையோ அதிசயிக்கத்தக்க அற்புதங்கள் இந்திய வைத்திய சாஸ்திரத்தில் புதைந்து கிடக்கின்றன என்று மேனாட்டினர் இன்று நேற்றல்ல, பல்லாண்டுகளாகவே சொல்லி வருகின்றனர்.

இதன்பயனாக, ஐம்பதாண்டுகளுக்கு முன்பே இந்திய வைத்திய முறையை ஒழுங்காகப் பயில ஒரு கல்லூரி தேவை என்ற கிளர்ச்சி எழுந்தது. ஆம், ஆங்காங்கே வைத்திய சாஸ்திரம் அறிந்த நிபுணர்கள் இருந்தார்களே தவிர ஒழுங்காகப் பாடம்கற்பிக்கப் பள்ளிக்கூடமே இருக்கவில்லை. இந்தத் தேவையை முதன் முதலில் பூர்த்தி செய்தவர் திரு டி. கோபாலாசார்லுதான். அதே சமயத்தில் திரு வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் பாரத நாட்டு ஆயுர்வேத சாஸ்திரம் அழிந்து படாமலிருக்க வேண்டுமே என்று, வேங்கடரமண வைத்தியசாலை ஒன்றும் வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலை ஒன்றும் துவக்கினார். சென்னை சர்வகலாசாலையும் "ஆயுர்வேத சிரோமணி" என்று பட்டமளிக்கத் தீர்மானித்துப் பரீட்சைகளும் நடத்தியது! இந்த முயற்சிகள் எல்லாம் ஆயுர்வேத சாஸ்திரம் இன்றையச் சூழ்நிலையில் எப்படி வளர வேண்டுமோ, அதற்குப் போதிய அநுசரணையாக இல்லை என்று யாவரும் உணர்ந்தனர். அதன் பயனாக அன்றையச் சென்னை சர்க்கார் மகம்மது உஸ்மானைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தது.

பாரத நாட்டில் நீண்ட நெடுங் காலமாக ஆயுர்வேதமும், சித்த வைத்தியமும், யூனானி வைத்தியமும் புழங்கி வருகின்றன! பாரத

பாரத நாட்டுக்கு விஜயம் செய்துள்ள ருஷ்யப் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ் அவர்களுக்குப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு தமது இல்லத்தில் ஒரு விருந்து வைத்து உபசரித்தார். விருந்துக்குப் பிறகு மார்ஷல் ஜுகாவுடன் பிரதம மந்திரி பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



நாட்டு வைத்திய சாஸ்திரத்தை வளர்ப்பதற்காக ஏற்படுத்தப்படும் பள்ளியில் இம் மூன்று முறைகளிலும் பயிற்சியளிக்க வேண்டும். அத்துடன் தற்கால மேனாட்டு வைத்திய முறையிலும் பயிற்சியளிக்க வேண்டும் என்று உஸ்மான் கமிட்டி யோசனை கூறியது.

உஸ்மான் கமிட்டியின் யோசனைப்படி 1924-ம் வருஷம் நவம்பர் மீ 24உ "இந்திய வைத்தியப் பள்ளி" ஆரம்பிக்கப்பட்டது!

நாடு அப்போது அந்நியர் ஆதிக்கத்தில்தான் இருந்தது. எனினும் இந்திய வைத்தியப்பள்ளி வளர்ந்து கொண்டே வந்தது. இதன்வளர்ச்சியில் பெரும் பங்கு காப்டன் ஜி. சீனிவாச மூர்த்தியைச் சாரும். அவர் மேனாட்டு வைத்தியத்தைப் படித்த பிரபல டாக்டர். அவர் உண்மையினிடத்து ஆராத பற்றுதல் கொண்டிருந்தார். அதனால் ஆயுர்வேத வைத்தியப் பண்டிதர்களையும் யூனானி வைத்தியப் பண்டிதர்களையும், சித்த வைத்தியப் பண்டிதர்களையும் அணுகி அந்த வைத்திய சாஸ்திரங்களைப் பயின்றார். அதன் நுட்பங்களை உணர்ந்தார். யாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய முறையில் அரிய பாட திட்டத்தை வகுத்தார்! வைத்தியப் பள்ளிக்கூடம் நன்றாக வளர்ந்து வந்தது.

சுதந்திர நாட்டில் இந்திய வைத்திய சாஸ்திரம் இன்னும் பிரபல்யமடையும் என்று எதிர்பார்த்தது பெருந்தவறு என்று நினைக்கும் படியாகக் காரியங்கள் நடைபெற்றுவந்தன! "மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தையும் இந்திய வைத்திய சாஸ்திரத்தையும் இணைக்க வேண்டும். மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தில் சில பாடங்கள் இந்திய வைத்தியக் கல்லூரியில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று சர்க்கார் வாதித்தார்கள்.

இதில் உண்மையிருக்கிறது. மேனாட்டு வைத்தியத்தில் அனாடமி என்ற உடற் கூறு பற்றிய பகுதியும், ஸர்ஜரி எனப்படும் சஸ்திர சிகிச்சையும் எவ்வளவோ முன்னேறி யிருக்கின்றன. இம்மாதிரி இன்னும் சில வைத்தியப் பிரிவுகள் மிக விரிவாக வளர்ந்திருக்கின்றன. இவை யாவும் இந்திய வைத்தியம் கற்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆகவே இணைப்பு மிக அவசியம் என்று இந்திய வைத்தியத்தில் பற்றுதல் கொண்டவர்கள் நினைத்தார்கள். அதனால் கல்லூரி என்ற அந்தஸ்தையும் அளித்து, 'இணைப்பு' என்ற கருத்தையும் புகுத்தியவுடன் இந்திய வைத்திய சாஸ்திரத்தில் ஆர்வம் கொண்டவர்கள் அனைவருமே மகிழ்ந்தார்கள், குதூகலப்பட்டார்கள்!

ஆனால் நாளடைவில் என்னவாயிற்று? ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது! இணைப்பு வைத்தியத்துக்கு நாளுக்கு நாள் முக்கியம் அதிகரித்துச் செல்வாக்கு அதிகரித்து இந்திய வைத்தியம் அழுங்கிவருகிறது.

சென்னையிலுள்ள இந்திய வைத்திய இணைப்புக் கல்லூரியில் சமீப காலத்தில் நடைபெற்று வரும் அக்கிரமங்களைக் கேட்கும்போது நெஞ்சு கொதிக்கிறது.

கல்லூரியில் முதலில் இந்திய வைத்தியப் பகுதிக்கு 70 சதவிகித வகுப்புகளும், மேனாட்டு வைத்திய முறைக்கு 30 சதவிகித வகுப்புக்களும் ஒதுக்கப்பட்டன. இன்று நிலைமை நேர்மாறாக இருக்கிறது. இந்திய வைத்தியத்துக்கு 30 சத விகிதமும் மேனாட்டு வைத்தியத்துக்கு 70 சதவிகித வகுப்புக்களுமாக நடைபெற்று வருகின்றன.

இந்திய வைத்தியப் பகுதிகளிலிருந்த பல ஆசிரியர்களைப் பல சொல்ல முடியாத இன்னல்களுக்கு உள்ளாக்கி வெளியேற்றியிருக்கின்றனர். அத்துடன் அவர்கள் நடத்தி வந்த இந்திய வைத்தியப் பாடங்களை அவசியமில்லை என்று பாடதிட்டத்திலிருந்தே நீக்கியிருக்கின்றனர். இது என்ன அநியாயம்!

சென்னை சர்வகலாசாலைத் துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள், "இந்திய வைத்திய இணைப்புக் கல்லூரியில் இந்திய வைத்தியமும் பூரணமாக வில்லை; மேனாட்டு வைத்தியமும் இல்லையே?" என்று அங்கலாய்க்கிறார்.

ஆனால் இந்திய வைத்தியக் கல்லூரி சீர்திருந்தும் வரை பொதுமக்களைப் பொறுத்திருக்கச் சொல்ல நாம் விரும்பவில்லை.

இந்திய வைத்திய முறைகளையும், மேனாட்டு வைத்திய முறைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர் ஆசிரியர் ஸ்ரீஹரி. ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளையும் அறிந்தவர். இந்த மொழிகளில் உள்ள வைத்திய நூல்களையெல்லாம் நன்கு ஆராய்ந்தவர். அவர் இந்தியவைத்தியத்தைப் பற்றி, படித்தவர்களும் படியாதவர்களும் ஆண்களும் பெண்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதும் ஆற்றல் படைத்தவர். அவர் இந்திய வைத்திய முறையைப் பற்றி "நாட்டு வைத்தியம்" என்ற தலைப்பில் அடுத்த 'கல்கி' இதழிலிருந்து தொடர்ந்து எழுதிவருவார் என்பதை நமது வாசக நேயர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்:

கற்பனைக் கன்னிகை

மந்த மாருதம் வீசியது. காலைக் கதிரவனின் இளம் வெய்யிலில் பச்சை மரங்கள் பளபளவென்று மின்னின. அந்த அதிகாலைப் பொழுது கவிஞனின் கண்களுக்குக் கவினுறு கனவுக் காட்சியாக அமைந்தது. வாவியில் முகை விரிந்த தாமரை மலரைக் கண்டான் கவிஞன்; குளிர்ந்த வாவிநீரில் மிதந்து வரும் அன்னப் பறவையையும் கண்டான். இந்த அழகிய சூழ்நிலைக்கு ஏற்ற இன்னொரு அழகுப் பொருளையும் கவிஞனின் அகக் கண்கள் தாமாகவே காணத் தொடங்கின. கற்பனை கன வேகமாகப் பறந்தது.

முகை விரிந்த தாமரை மலரில், நகை விரிந்த நங்கையின் முகம் தெரிந்தது. தாமரை முகமும், அன்ன நடையும் கற்பனைக் கன்னியின் கவினுருவத்துடன் கலந்து விட்டன. கவிஞனின் கற்பனையில் பிறந்த கன்னிப் பெண், அன்னப் பறவை, கமல மலர் ஆகிய மூன்றுடன் கவிஞனையும் காட்டுகிறார் நமது சித்திரக்காரர் வினு.


மனம்கவர் மணம்...
டிராலி
மஸ்க் சோப்
டால்க் பவுடர்
Musk Soap
MADE IN INDIA
TALC Powder
லலிதா ராவ் B.A

ஜனவரி முப்பது

ராஜாஜி

மங்கள வாத்தியமான நாகஸ்வரத்தை எடுத்து, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை வாசிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இவ்யமான சங்கீதம் தோன்றி வானில் பரவுகிறது. மகிழ்ச்சிப் பரவசத்தில் நம்மையெல்லாம் ஆழ்த்துகிறது. திடீர் என்று கானம் நின்று விடுகிறது. ஆனந்தம் தந்த அந்தப் பொருள் இப்போது எங்கே? ஆகாய வெளியில் மறைந்து போயிற்று. பேருண்மையாகப் பாவித்து அனுபவித்த பொருள் எங்கேயோ மறைந்து போய் இல்லை என்று ஆயிற்று. வெறும் மரக் குழல்தான் இருக்கிறது. கானம் இல்லை.

இப்படியே ஒன்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு ஜனவரி முப்பதாம் தேதி மகாத்மா காந்தி மறைந்து போனார்.

ஆகாய வெளியில் கலந்து போய் விட்டார். நம் கண்ணுக்கு இனிமேல் காண முடியாத பொருளாகி விட்டார். வேறு சங்கீத வித்வான்கள் தோன்றி வீணையோ குழலோ எடுத்து மறுபடியும் வாசிக்கலாம். ஆனால் காந்தி என்கிற கானத்தை நமக்கு மறுபடியும் உண்டாக்கித் தர யாருமில்லை. படங்களும் உருவச் சிலைகளும் இருக்கின்றன. இதோ காந்தி படம், காந்தி உருவச் சிலை என்பார்கள். ஆனால் அவற்றில் உயிருமில்லை; லட்சணமுமில்லை. உடைந்து போன வீணை, பிடில், நாகஸ்வரம் அல்லது புல்லாங்குழல் போலத்தான், இந்தச் சிற்பங்களும்; படங்களும்.

நம்மிடமிருந்து மறைந்தவர்களுக்குத் திதி செய்ய வேண்டும். திதி செய்வது எப்படி? மறைந்து போனவருடைய ஆன்மா, திருப்தியடைவதற்குச் செய்வது திதி. நாம் வாழும் வாழ்க்கையும் பேசும் பேச்சும், எண்ணும் எண்ணமும் அந்த ஆன்மாவுக்குத் திருப்தி கொடுப்பதாகச் செய்தோமானால் அது அவருக்கு நாம் செய்யும் திதியாகும். அழுவதில் பயனில்லை; அழலாகாது. இத்தனை நாள் அவரை அனுபவித்தோமேஎன்று ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி விட்டு, அவருக்குத் திருப்தியளிக்கும் முறையில் மனோ வாக்கு காயங்களைச் செலுத்துவோம். அதனால் நாமும் மகிழ்ச்சியடைவோம், அவருடைய ஆன்மாவுக்கும் மகிழ்ச்சி தருவோம்.

அவர் என்ன உபதேசித்தார்? உண்மை பேசு என்றார். அதைச் செய்வோம் பொறுமை பயிலுங்கள் என்றார். ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுவோம். பொறுமை,கோபம், பேராசை இவை இடையில், வராமல் ஒருவரை ஒருவர் பொறுப்போம். அன்பு செய்யுங்கள் என்றார். அவர் உயிருடனிருந்த ஒவ்வொரு நாளும் ஆண்டவனைத் துதித்தார். மக்கள் ஒருவரையொருவர் நேசித்து வாழ வேண்டும், அதை அருள்வாயாக என்று ஆண்டவனைத் துதித்தார். தமக்காகத் துதிக்கவில்லை. நமக்காகத் துதித்தார். 'அன்பே விவேகம், அன்பே சுகமும் சந்தோஷமும்' என்பதை யறிந்து ஒருவரை ஒருவர் நேசித்து அன்பு செலுத்தி வாழ்வோமாக. அன்புக்குப் பதில் துவேஷம் வளர்த்துக் கொண்டு வாழப் பார்ப்பது மடத்தனம். தம் உயிருள்ளவரை மகாத்மா இதைப் போதித்தார். அதை ஏற்றுக் கொண்டு பரஸ்பரம் அன்பு செலுத்தி வாழ்வோம்.

காந்தியைப் புகழ்ந்துபேசுவது போதாது. உயிருடனிருந்த போதும் அவர் புகழ்ச்சிப் பேச்சை விரும்பவில்லை. உடலை நீத்த ஆன்மாவா வெறும் வாய்ப் புகழ்ச்சியைக் கேட்டுச் சந்தோஷமடையும்? அவர் சொல்லி வந்தபடி பாரத மக்கள் நடந்தோமானால் அவர் ஆன்மா திருப்தியடையும். ஜாதிமத வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல்அன்பு செலுத்துவது எப்படி, முடியுமா? என்று சந்தேகப்படலாம். முடியும் என்று அவர் எண்ணற்ற தடவை சொல்லியிருக்கிறார். பாரத நாடு சுதந்திரம் பெறும் என்று அவர் சொன்னபோது மக்கள் நம்பவில்லை. பிறகு தம் கண்ணாலேயே கண்டார்கள் நம்பாதவர்கள். அவர் சொன்னது போல் பாரதம் யுத்தமின்றிச் சுயராஜ்யம் பெற்று விட்டது. அதைப் போலவே துவேஷம் வேண்டாம், அன்பே வெல்லும் என்று அவர் சொன்னதும் உண்மை. அவர் சொன்னபடி செய்து பார்த்தோமானால் உண்மையைக் காண்போம். ஜாதி மத வேற்றுமைக்காக வெறுப்பைக் கொள்வது மகாத்மாவின் உபதேசத்துக்கும் விருப்பத்துக்கும் மாறாகும். அவர் சொன்னபடி அன்பு வழியைப் பயிற்சி செய்வோமாக.

மற்றவர்களின் குற்றங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்காமல், ஒவ்வொருவரும் தம்முடைய குற்றங்களைக் களைந்து கொண்டு தம் சீலத்தை வளர்த்தால் தாய் நாடு உன்னத நிலையடையும். உலக மெல்லாம் பாரத நாட்டின் புகழ் பரவும். அரைத்த மாவு நல்ல மாவாக இருந்தால்தான் தோசை நல்ல ருசியாகச் சுடலாம். மாவு நல்ல மாவாக இல்லாதிருந்தால் தோசை எப்படி நன்றாக இருக்கும்? நாம்தான் மாவு. தாய்நாடு தோசை. நாம் யோக்கியர்களாக இருந்தால்தான், பொய்யும் மோச

மும் இல்லாமல் . நல்லவர்களாக இருந்தால்தான் நாடு புகழும் செல்வாக்கும் அடையும். ஒருவரை யொருவர் குற்றம் காண்பதும், குறை சொல்வதும் விட்டு விட்டு அவரவர் தத்தம் குறைகளைக் களைந்து நாட்டுக்குப் பணி செய்வோமாக. தேன் கூண்டில் ஒவ்வொரு தேனீயும் தன் பணியைச் செய்வதில்தான் கவனத்தைச் செலுத்தும். பிறர் குற்றத்தைப் பற்றிப் பேசாமல் சத்தியமாக யோக்கியமாக, ஒவ்வொருவரும் வாழ்க்கையை நடத்த வேண்டும். அப்போது நாம் காந்தி அப்பனின் உண்மை மக்களாவோம்.


சுதந்திரம் பெற்றவுடன் குழந்தைகளைப் போல் நம்பினோம். உடனே சுகமும் சந்தோஷமும் பிரவாகமாக ஓடும் என்று எதிர்பார்த்தோம். ஆனந்தம் அடைந்தோம். முதல் மழை ஆவர்ந்தம். சீக்கிரமே ஈரம் உலர்ந்து போயிற்று. பிறகு என்ன இதுதானா சுயராஜ்யம் என்று கேட்கலானோம். மனித வாழ்க்கையில் சுகமும் சந்தோஷமும் மந்திரவாதியின் மாஞ்செடிபோல் உண்டாகாது. காய் காய்க்கும் மாமரம் வேண்டுமானால் நட்டுப் பயிர் செய்ய வேண்டுப. எருப் போடவேண்டும், தண்ணீர் வார்க்க வேண்டும். வெயிலுக்கும் நல்ல வேளைக்கும் காத்திருக்க வேண்டும். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்த புராணத்தை எல்லாரும் கேட்டிருக்கிறீர்கள். எத்தனை நாள் தவம் செய்தான். அவன் முன்னோர் எரிந்து போன சாம்பல் அந்த கங்கைக்காக எத்தனை காலம் காத்திருந்தது. இறங்கிய பிறகும் பரமசிவன் சடையிலிருந்து வெளிவந்து இறங்கி ஓடிய பிறகும் எத்தனை இடையூறுகள் நேர்ந்தன. இதைப்போலவே நம்முடைய சுதந்திரமும். பகீரதனுடைய தவத்தைப் படித்து நாம் பொறுமையும் தவமும் கற்க வேண்டும்.

உயிரிழந்த உடலைப் பூமியில் புதைத்து மூடிவிட்டாலும் அது மறுபடியும் மண்ணால் அதனின்று கண்களைக் கவரும் அழகான புஷ்பங்களும் அமிருதம் போன்ற காயும், பழமும் தோன்றுகின்றன. உடல்கூட அழியாதிருக்கும் போது ஆன்மா அழிந்து போகுமா? போகாது. காந்தியின் ஆன்மா காற்றில் கலந்து போய் மறைந்து விட்டாலும் அது பாரத மக்களின் உயிர்களுக்கு உரம் தந்து நாட்டுக்கு நல்ல பயிர் தரும். அந்த உரத்தை நாம் வேண்டாம் என்று தள்ளாமலிருந்தாற் போதும். அது நம் உயிருடன் சேர்ந்து தெய்விக பலத்தைத் தரும்.

காந்தியடிகளின் உயிர் நம் உள்ளத்தில் கலந்து நாம் துப்புரவு அடைவோமாக. புனிதமாக்கும் கங்கை நீர் போன்றதாகும், அவருடைய நினைவு. அதில், இன்று அவருடைய திதி தினத்தில், குளிப்போமாக.

---

* *ஜனவரி 30உ ராஜாஜி அவர்கள் சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.*



நடமாடும் தெய்வம்

அண்ணா

நடமாடும் தெய்வமாய் விளங்கும் மகா புருஷர்கள் இந்நாட்டில் எப்போதும் எந்தக் காலத்திலும் இரண்டொருவராவது வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தற்போது காஞ்சிமா நகரத்தில் காமகோடி பீடத்தின் அதிபராய் எழுந்தருளியிருக்கும் திரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் அத்தகைய சகலராம்சம் பொருந்தியமகான்களில்ஒருவர். ஆதிசங்கரரே போல் அனைவராலும் போற்றப் பெறுபவர். அவர் இந்தப் பீடத்தில் அபிஷேகம் செய்யப் பெற்று ஐம்பதாண்டுகள் ஆகின்றன. பீடாரோஹணைப் பொன் விழா பங்குனி மாதம் முதல் தேதி, வரும் மார்ச் 14-உ வருகிறது. அந்த நன்னாளைக் காஞ்சியில் மட்டுமின்றித் தென்னாடெங்கும் பக்தகோடிகள் கொண்டாட ஏற்பாடு செய்துவரும் இத்தருணத்தில், ஆசாரிய சுவாமிகளைப் பற்றியும் அவர் அலங்கரிக்கும் பீடத்தின் பெருமையைப் பற்றியும் மனமார நினைந்து போற்றுவது நமது கடமையும் வழிபாட்டு முறையுமாகும்.

ஆதி காலத்திலிருந்து அயோத்தி, வட மதுரை, ஹரித்துவாரம், காசி, காஞ்சி, உஜ்ஜயினி, துவாரகை என்னும் ஏழு க்ஷேத்திரங்களும் மோட்சத்தில் விருப்பமுள்ள மனிதர்கள் நாடி வாழும் இடங்களாகக் கருதப்பட்டுள்ளன. சந்நியாசிகள் எந்த நகரிலும் நிலைக்காமல் ஊர் ஊராகச் சென்று கொண்டிருப்பதை தவத்தின் வளர்ச்சிக்குச் சாதனமாகக் கருதுவார்கள். ஆயினும் மேற்கூறிய நகரங்களை அவ்விதிக்கு விலக்காகக் கொண்டிருக்கின்றனர். அம் முறையில் எத்தனையோ மகான்கள் காஞ்சிமாநகரை உறைவிடமாகக் கொண்டு விளங்கி யிருக்கின்றனர். அவர்களுள் முக்கியமானவர் ஆதி சங்கராச்சாரியார். 'காமகோடி' என்னும் ஸ்ரீ சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்து, எதிர் வாதங்களை வென்று அத்துவைதத்தை ஸ்தாபித்து, ஸ்ரீ சங்கராச்சாரியார் நித்தியவாசம் செய்ய ஏற்றதாகக் கொண்ட இடம் காஞ்சிமாநகரம். இந்நகரிலுள்ள ஆலயங்களெல்லாம் காமாட்சியின் கோயிலையே நோக்கி அமைந்திருப்பது போல், பல்வேறு சமயங்களும் இங்கு இடம் பெற்றுக் காமகோடிபீடத்தில் ஒற்றுமை காண்கின்றன. ஆதிசங்கரர் மற்ற இடங்களில் ஏற்படுத்திய பீடங்களில் தமது சிஷ்யர்களை இருக்கச்செய்து தாமே காமகோடி பீடத்தில் முதன் முதலாக ஆரோஹணித்துப் பின்னர் சுரேஷ்வராச்சாரியரை 'இந்திர சரஸ்வதி' என்னும் பட்டப் பெயருடன் அங்கு அமர்ந்திருக்க ஏற்பாடு செய்தார். இதனால் காமகோடி பீடத்துக்கு ஒரு தனிச் சிறப்புள்ளது.

* * *

அன்று முதல் இன்றுவரை வாழையடி வாழையாகப் பல மகான்கள் இந்தப் பீடத்தை அலங்கரித்துள்ளனர். இப்போது உள்ள திரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் அறுபத்தெட்டாவது பீடாதிபதி. இந்தப் பரம்பரை சரித்திரப் பிரசித்தமானது.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் காஞ்சியை ஆண்ட சோழ மன்னர் ஒரு கிராமத்தையும், விஜயநகர சாம்ராஜ்ய காலத்தில் ஆண்டவர்கள் செங்கல்பட்டு ஜில்லாவில் ஆறு கிராமங்களையும், மதுரை ராணி மங்கம்மாளின் புத்திரன் விஜய சொக்க நாயக்கர் திருச்சிராப்பள்ளியில் ஆறு கிராமங்களையும் மானியமாக இம் மடத்துக்கு வழங்கியதற்குச் சாஸனங்கள் இருக்கின்றன. 1710–வது ஆண்டுக்குப் பின் கர்நாடக யுத்த காலத்தில் மடாலயம் காஞ்சியை விட்டுச் செல்லவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அங்ஙனமே வெளிப்போந்து பாளையக்காரர்கள் ஆதரவில் இருந்து 1730ல் தஞ்சாவூர் அரசர் ஆதரவில் கும்பகோணம் வந்துசேர்ந்தது. திரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் கும்பகோணத்தை விட்டுப் பல ஆண்டுகள் நாடெங்கும் திக்விஜயம் செய்து, திருவானைக்காவல் அகிலாண்டேசுவரி அம்மனுக்குத் தாடங்கப்



ஆசாரிய சந்திரசேகரேந்திர சரஸ்வதி

பிரதிஷ்டை, காஞ்சியிலிருந்து தஞ்சைக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கே பூஜிக்கப் பெற்றுவரும் பங்காருகாமாட்சிக்குக் கும்பாபிஷேகம், காஞ்சி காமாட்சி ஆலயத்துக்கு மகா கும்பாபிஷேகம், காஞ்சி காமாட்சிக்கு ஸ்ரீ சக்ரரூபமான வெள்ளி ரதம் முதலிய அரும் பணிகளை யாற்றிச் சில ஆண்டுகளாக ஆதி

சங்கரரைப்போல் காஞ்சியிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமே சஞ்சாரம் செய்து வருகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன் ஜய வருஷத்தில் காஞ்சியில்தான் இவருடைய அறுபதாம் ஆண்டு பூர்த்தி விழா பக்த கோடிகளால் கொண்டாடப் பெற்றது.

இவருக்குப் பின் பீடத்தை அலங்கரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள திரு ஜயேந்திர சரஸ்வதி அவர்களும் இவர் அருகாமையிலிருந்து கொண்டு பயிற்சி பெற்று வருகிறார்.

இவர் விழுப்புரத்தில் கல்வி அதிகாரியாயிருந்த பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் மூன்றாவது புதல்வராக (1894) ஜய வருஷம் வைகாசி மாதம் அனுஷ நக்ஷத்திரத்தில் ஜனித்தவர். இவரது பிள்ளைப் பெயர் சாமிநாதன். சிறு வயதிலேயே சந்நியாஸம் பெற்று மகேந்திர மங்கலத்தில் இருந்து கொண்டு வேத சாஸ்திரங்களைக் கற்றார். இவருடைய பரமாசாரியர்களுக்கு அதிஷ்டானம் ஏற்பட்டுள்ள கலவை எனும் இடத்தில் இவருக்கு 1907ல் பட்டாபிஷேகம் நடைபெற்றது. அன்று முதல் தினந்தோறும் காலையில் விச்வரூப பூஜை, கோபூஜை, கஜ பூஜை, வேதப் பிராம்மண ஆராதனம் மூன்று வேளைகளிலும் சந்திரமௌளீச்வர பூஜை, செவ்வாய் வெள்ளிகளில் ஸுவாஸினி பூஜை, ஆண்டு தோறும் வியாச பூஜை முதலியன உலக நலத்துக்காக இவரால் இடைவிடாது அனுஷ்டிக்கப் பெற்று வருகின்றன. "எனக்கு மூவுலகிலும் செய்ய வேண்டிய காரியமோ, இது வரை அடையப் படாததாய் 'இனி அடைய வேண்டியதா'யுள்ளதோ யாதொன்றுமில்லை. எனினும் கருமங்களில் ஈடுபடுகிறேன்" என்று பகவான் கீதையில் கூறியது இவரிடம் முற்றும் பொருந்தும். ஆதிசங்கரரைப்போல் கன்னியாகுமரி முதல் காசி வரை கால் நடையாக யாத்திரை செய்திருக்கிறார். அத்வைத சபையை ஆண்டுதோறும் கூட்டி வைத்து வித்துவான்களுக்கு உற்சாகமளித்து உரிய சன்மானம் செய்து பெரிய விழாவாக நடத்தி வைக்கிறார். ஒரே மேடையில் சைவர்களையும் வைஷ்ணவர்களையும் கூட்டுவித்தும், திருப்பாவை திருவெம்பாவை ஆறக்கமாநாடுகளை ஆங்காங்கு நடைபெறச் செய்தும் மதப்பிணக்குகளை நீக்கிச் சமரசத்தை வளர்க்க வழி காட்டுகிறார். பிரம்ம வித்யா, ஆரிய தருமம், காமகோடி, தருமத்தொண்டு முதலிய பத்திரிகைகளை நடத்தியும், வேத தர்ம பரிபாலன சபையை ஆதரித்துத் தரும சாஸ்திரங்களைத் தெளிவு படப் பிரசுரிக்கச் செய்தும், அரிய பல நூல்களை வெளியிட்டும் அரும் பணியாற்றி வருகிறார். ஜம்புகேசுவரம் வேத வேதாந்தப் பாடசாலை, திருவிடைமருதூர் ரிக்-யஜுர் வேத பாடசாலை, தர்ம சாஸ்திர பாடசாலை, காஞ்சி யஜுஸ்—ஸாம வேத பாடசாலை, காசி சுகதேவ மடத்தில் வேதாந்தப் பாடசாலை ஆகியவற்றை நடத்துவதுடன் இன்னும் பல பாடசாலைகளை நடத்துவதற்கும் ஊக்கம் அளித்து வருகிறார்.

* * *

காமகோடி பீடத்தில் இவர் அமர்ந்து ஐம்பதாண்டுகள் நிறையும் நன்னாளைப் பொன் விழாவாகக் கொண்டாடுவது மேற்கூறிய திருப்பணிகளெல்லாம் இன்னும் விரிவாகத் தொடர்ந்து நடைபெற அன்பர்களின் உதவியைக் கூட்டுவிப்பதற்கும் ஆசாரிய ஸ்வாமிகளுடைய அருளைப் பெற்று அவர்கள் உய்வதற்கும் சிறந்ததொரு வாய்ப்பாகிறது. ஊர்தோறும் 1957 மார்ச்சு 13ல் ஆதிசங்கரரின் ஆராதனையும், உபந்நியாசங்களும், ஊர்வலமும், பொன் விழா நாளாகிய 14ந் தேதியன்று ஹோமம், பூஜை, அன்னதானம், உபந்நியாசங்கள், திருவுருவப் படத்துடன் ஊர்வலம் முதலியனவும் ஏற்பாடு செய்து கொண்டாட்டத்தைச் சிறப்பாக நடத்த அன்பர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான முயற்சி இரண்டு நாள் விழாவுடன் மட்டும் நின்று விடாமல் இந்து தருமத்தின் வளர்ச்சிக்குத் தற்போது அவசியமாயுள்ள பணிகளுக்கு அடிகோலுவதற்கும் அதற்கான பொருளைச் சேகரிப்பதற்கும் ஆஸ்திகர்களைத் திடசித்தத்துடன் ஒன்று சேர்த்து வைப்பதற்கும் பயன்படவேண்டும் என்பது பொன் விழாக் குழுவினரின் அவா ஆகும்.

விழாக் குழுவினர் உத்தேசத்தில் உள்ள பணிகள்: (1) காமகோடி பீடத்தின் வரலாற்றையும் பீடாதிபதிகளின் வாழ்க்கையையும் உபதேசங்களையும் புத்தக வடிவில் பொன்விழா நினைவு மலராகப் பிரசுரிப்பது (2) ஊர்தோறும் சமஸ்கிருதப் பாடசாலைகள் நிறுவ வழி தேடுவது (3) தென்னிந்தியாவுக்கென ஒரு சமஸ்கிருத சர்வகலாசாலை நிறுவ ஏற்பாடு செய்வது. ஆசாரிய ஸ்வாமிகளுடைய அனுக்கிரகமும் பக்த கோடிகளின் பரிவும் ஆதரவும் இந் நல்லெண்ணங்களைப் பூர்த்தி செய்விக்கும் என நம்புகிறோம்.

*பொன் விழாவைப் பற்றிய மற்ற விவரங்களை அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். பேராசிரியர் ப. சங்கரநாராயணன், விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை 4.

ஒரு திருத்தம்

ஜனவரி 13, 20-ந் தேதி 'கல்கி' இதழ்களில் வெளியான சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான பாங்கி லிமிடெட், விளம்பரத்தில் 4½% 25 வருட டிபெஞ்சர்கள் வெளியீடு விலை ரூ. 99—8—0 என்றிருப்பதை 4½% 20 வருஷ டிபஞ்சர்கள் வெளியீடு விலை ரூ. 99-8-0 என்று திருத்தி வாசித்துக்கொள்ளக் கோருகிறோம்.


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர். ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப் படுகிறது. ரத்தக் கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பிவிடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப் படலாம்.
தந்த வைத்தியரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது
orhan




ஈழ நாட்டுப் பிரயாணம் 4



இந்திர ஜால மகேந்திர ஜால வித்தைகளைச் செய்து காட்டும் சித்தர் ஒருவர் நம் முன்னிலையில் வருகிறார். தமது இடுப்பில் இருக்கும் விபூதி சம்புடத்தை எடுக்கிறார். அதைத் திறந்து அதிலிருந்து கொஞ்சம் திருநீற்றைக் கையில் எடுத்து நம்முடைய முகத்துக்கு நேரே ஊதி விடுகிறார். திருநீறு புகைபோல வந்து நமது கண்களில் விழுகிறது. நமது கண்ணுக்கு முன் உள்ள பொருள்கள் எல்லாம் அந்தக் கணமே மறைந்து விடுகின்றன. நாம் கால வெள்ளத்தில் பின் நோக்கிப்பிரயாணம் செய்கிறோம். ஒன்று இரண்டு பத்து நூறு என்று பல நூறு வருஷங்கள் சென்று விடுகின்றன.

இப்பொழுது நடைபெற்று வரும் அநியாயங்கள், வஞ்ச சூழல்கள், வஞ்சகங்கள், அட்டூழியங்கள், சர்வாதிகாரப் போக்குகள், தமிழ்த்திருநாட்டிலும், ஈழ நாட்டிலும் தமிழ்மக்கள் படும் அவதிகள் எல்லாம் மறைந்து விடுகின்றன.

முத்துமாலைகள், ரத்தின கிரீடங்கள், மன்னாதி மன்னர்கள், அவர்களுடைய பட்டத்து ராணிகள், தங்கச் சிம்மாசனங்கள், நடனப் பெண் மணிகள், சித்திரக் குகைகள், சிற்ப மண்டபங்கள், ரதகஜ துரகபதாதிகள், அரண்மனைகள்,



தொல் பொருள் கலை மண்டபம்

ஆலயங்கள், அவற்றில் உள்ள கலை சொட்டும் விக்கிரகங்கள், அங்கு நடக்கும் காலட்சேபங்கள், தேரோடும் வீதிகள், பெரிய வனந்தரங்கள், அவைகளில் வாழும் யானைகள், புலிகள், சிங்கங்கள், மான்கள், குரங்குகள், அவைகளுக்கு மத்தியில் வாழும் காட்டு மனிதர்கள், பலவகையான பறவைக் கூட்டங்கள் இவ்வளவும் நிறைந்த அதிசய உலகம் நம் கண் முன்னே காட்சி அளிக்கிறது.

கொழும்பு நகரில் உள்ள தொல் பொருள் கலைக் கூடத்துக்குள் சென்றதும்,—அதாவது மியூஸியத்துக்குள் புகுந்ததும் - இத்தகைய உணர்ச்சிதான் உண்டாகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கைத் தீவு நாகரிகமில்லாத வேடர்கள் வாழ்ந்த காட்டுப் பிரதேசமாக இருந்ததையும், கலையிலும், நாகரிகத்திலும், பொருள் வளத்திலும், அருள் வளத்திலும் சிறந்து விளங்கிய தமிழ் நாட்டு மன்னர்கள் இலங்கைக்குச் சென்று அங்குள்ள காட்டை அழித்து ஈழத்தைக் கலை வளத்தில் சிறந்த நாடாக்கியதையும், இடுப்பில் தழைகளைக் கட்டிக் கொண்டிருந்த காட்டு மனிதர்களை நாகரிக மாந்தர்களாக மாற்றியதையும் தொல் பொருள் கலைக்கூடங்களுக்குள் இருக்கும் சிற்பங்கள் ஆதாரம் கூறுகின்றன; சித்திரங்கள் சாட்சி சொல்கின்றன; தொல்பொருள்கள் சொல் பகருகின்றன; வெண்கல விக்கிரகங்கள் கிண்கிணி நாதத்துடன் ஆமோதிக்கின்றன.



முதலில் நேயர்களுக்கு ஒரு விஷயத்தை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு பெரிய நகரத்திலும் தொல் பொருள் கலைக்கூடங்கள் இருக்கின்றன. அவைபோன்ற கலைக்கூடம் ஒன்றுதான் கொழும்பு நகரில் இருப்பதும். இத்தக் கலைக்கூடத்துக்குள் போகும்போது, நாடகத்துக்குப் போவது போலவோ, ஸினிமாவுக்குச் செல்லுவது போலவோ போகக் கூடாது. பொழுது போகவில்லை என்பதற்காகவும் போகக் கூடாது. அப்படியெல்லாம் எண்ணிக்



கொண்டு தொல் பொருள் கலைக் கூடத்துக்குள் போவது பக்தி இல்லாமல் ஆலயத்துக்குள் செல்வதற்கு ஒப்பாகும். பல நூறு வருஷங்களின் சரித்திர வளர்ச்சியைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பக்தியுடன் .செல்ல வேண்டும்.

ஏதோ பானை ஓடுகள்தானே, களிமண் தானே, துருப் பிடித்த கத்தி கேடயங்கள் தானே, உடைந்து போன சிற்பங்கள் தானே, சிதைந்து போன சித்திரங்கள் தானே, வேண்டாத துணிகள் தானே, வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்வதற்கு உபயோகிக்கும் பாக்கு வெட்டி தானே, கற்பனையில் செய்திருக்கும் காட்டும் வாழ்க்கைகள்தானே என்றெல்லாம் அலட்சியமாக எண்ணினால் தொல்பொருள் கலைக்கூடம் வெறும் தொல்லை பிடித்த கூடமாகத்தான் காட்சியளிக்கும்.



இலங்கையின் வரலாற்றையும், அந்த நாட்டுடன் யார் யார் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்கள், யாருடைய காலத்தில் இலங்கை நாகரிகம் பெற்றது, யாருடைய ஆட்சியினால் இலங்கை இன்றுள்ள நிலைமைக்கு உயர முடிந்தது என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உண்மை வரலாற்றைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற ஆவலுடன் செல்ல வேண்டும். அவ்வாறு சென்று அங்கிருக்கும் ஒவ்வொரு பொருளையும் ஆர அமர நின்று நிதானித்துப் பார்க்க வேண்டும்.

இப்பொழுது உள்ள இலங்கை சிங்கள சர்க்கார் தங்கள் சக்தியினால் இலங்கைத் தீவின் பழைய சரித்திரத்தையே திருத்தி எழுத முடன்றாலும், மாற்றி அமைக்க முனைந்தாலும் அது முடியாத காரியம் என்பதைக் கொழும்பு தொல் பொருள் கலைக்கூடத்தில் இருக்கும் ஒவ்வொரு தொல் பொருள்களும் விவாதத்துக்கு இடமின்றிக் கூறுகின்றது.

கொழும்பு தொல்பொருள் கலைக்கூடத்துக்கு வெளியில் மிகப் பெரிய புத்தர்பிரான் சிலை இருக்கிறது. அந்தச் சிலையுடன் சேர்த்துத் தொல் பொருள் கலை மண்டபத்தைப் பார்ப்பதே அற்புதமான காட்சி! நமது முன்னோர்கள் கலைத் தெய்வத்திடம் கொண்டிருந்த பக்திக்கு அத்தாட்சியாக விளங்கும் பல பொருள்கள் இங்கு இருக்கின்றன.

கொழும்பு தொல் பொருள் கலை மண்டபத்தில் உள்ள சின்னங்கள் பல, தெய்வத் தமிழ் நாட்டின் மூலமாகத்தான் இலங்கைத் தீவு நாகரிகம் பெற்றிருக்கிறது என்னும் சரித்திர உண்மையை எடுத்துக் கூறுகின்றன. இலங்கைத் தீவு இன்பத் தமிழ்நாட்டைச் சேர்ந்த பூமியாக இருந்ததுதான் என்ற பேருண்மையை அவை விளக்கிச் சொல்கின்றன.

*** *** ***

தொல்பொருள் கலைக் கூடத்தை நெருங்கும் போதே ஒரு அற்புதமான கலைக்கோயிலை, சரித்திரத்தையும் வரலாற்றையும் எடுத்துக் கூறும் சர்வகலாசாலையை நெருங்குகிறோம் என்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது.

தொல் பொருள் கலைக் கூடத்துக்குள் நுழைந்ததுமே அதன் அமைப்பும், அங்கிருக்கும் பொருள்களும் நம்முடைய கவனத்தைக் கவர்ந்து விடுகின்றன. கத்திகளும், வாள்களும், வேல்களும், கேடயங்களும் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றுகின்றன. கலை மண்டபத்துக்குள் இருக்கும் பல புராதன சின்னங்களைப் பார்த்து வந்த பொழுது "நமது முன்னோர்கள் வீரத்துக்கும் கலைக்கும் எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள்!" என்ற வியப்பு நிச்சயம் உண்டாகும்.

பிறகு அங்குள்ள பழங்காலத்து நாணயங்களைப் பார்க்கிறோம். அந்தக் காலத்தில் மக்கள் உபயோகித்த மண் பாண்டங்களைப் பார்க்கிறோம், மரச்சாமான்களைப் பார்க்கிறோம். அவைகள் நமது தமிழ் நாகரிகத்தின் சின்னங்களாக, தமிழ் மன்னர்களின் தர்ம ஆட்சியை நமக்கு மௌனமாக எடுத்துக் கூறுகின்றன. யாரும் மறுத்துக் கூற முடியாதபடி அழுத்திச் சொல்கின்றன.

மாடிமீது ஏறிச் சென்றால் ஈழநாட்டில் இன்று எங்குமே காண முடியாத ஒரு குடும்பத்தைக் காண்கிறோம். கணவனும் மனைவியுமாக இரண்டு பேர்களைப் பார்க்கிறோம். அவர்களைப் பார்த்ததும் நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. ஆகா! எப்படிப்பட்ட இரும்பு உடல். அவர்கள் தலை மயிரும், அவர்கள் அணிந்திருக்கும் காட்டுத் தழைகளால் ஆன உடையும், நெருப்புப் போன்ற கண்களும், கையிலே இறைச்சித் துண்டும் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கின்றன. யாரோ உயர்தரக் கலைஞன் செய்த உருவங்களாக இருப்பதால் அப்படியே உயிருடன் இருப்பது போலவே தோற்றமளிக்கின்றன. ஒரு காலத்தில் அநாகரிகமாக இருந்த மக்களை, தமிழ் மன்னர்கள் இலங்கைத் தீவில் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்த பிற்பாடு எவ்வளவு நாகரிகமுள்ள மனிதர்களாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பெருமைப் படத்தான் வேண்டியிருக்கிறது.

தமிழ் மன்னர்கள் ஈழ நாட்டை எப்படி நாகரிகம் உள்ள நாடாக மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு இந்தக் கலை மண்டபத்திலேயே இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. இலங்கைத் தீவில் பாழடைந்து போன புராதன கோயில்களில் இருந்தும், பூமியை வெட்டும் போதும் கிடைத்த பல அரிய சிற்பங்களும், அற்புதமான விக்கிரகங்களும் ஏராளமாக இருக்கின்றன. அழகுக் கலை ததும்பும் நடராஜ விக்கிரகங்களும், பார்வதி பரமேசுவரர் சிலைகளும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் சிலைகளும், கண்ணகி அம்மன் விக்கிரகமும், ஆஞ்சனேயர் விக்கிரகமும், சிறியதும் பெரியதுமான பல புத்தர் சிலைகளும் இருக்கின்றன.

அந்தக் காலத்து மக்களும் மன்னர்களும் உபயோகித்த இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்களும் தமிழ் நாட்டின் கலைக்கும், பண்பாட்டுக்கும் அழியா நினைவுச் சின்னங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

யார் என்ன சொன்னாலும், இப்பொழுது சிங்களவர்கள் தங்கள் கையில் அரசாங்கம் இருப்பதை எண்ணித் தமிழ் மக்களையும், அவர்கள் மொழியையும் உதாசீனப்படுத்தினாலும் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள சரித்திரம் காண முடியாத தொடர்பை யாருமே மறுத்துக் கூற முடியாது. இலங்கைக்கும் சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தொடர்பைவிடப் பழைமையானது, தமிழ் மக்களுக்கும் ஈழத்துக்கும் உள்ள தொடர்பு என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தமிழ் மன்னர்கள் இலங்கையை எத்தனையோ நூற்றாண்டுகளாக நீதி தவறாமல் அரசாண்டிருக்கிறார்கள். இலங்கையின் கடைசி மன்னனாக வாழ்ந்த கண்டிராஜன் தமிழ் மன்னன் தான். தமிழ் அரசர்கள் பரம்பரையில் கடைசியாக வந்து சுதந்திரமாக ஆட்சி புரிந்தவனும் அவனேதான்.

அந்த மன்னருடைய பரம்பரையினர் தமிழ் நாட்டிலேதான் இருந்தார்கள்; இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சிங்கள அரசாங்கம் சமீபத்தில்தான் சுதந்திர இலங்கையின் கௌரவப் பிரஜா உரிமையைக்கூட வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

கண்டிராஜனை கடைசித் தமிழ் மன்னன் வீற்றிருந்து அரசு செலுத்திய சிம்மாசனமும் இந்தக் கலைக்கூடத்தில் இருக்கிறது. தங்கத்தினால் செய்து நவரத்தினங்கள் இழைத்துப் பளபளவென்று ஒளி வீசித் திகழும் அந்த சிம்மாசனத்தைப் பார்த்தாலே தமிழ்நாட்டின் கலைப் பண்பு நிறைந்து விளங்கிய சிம்மாசனம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்தச் சிம்மாசனத்துக்கு அருகிலேயே அந்த மன்னரின் உடைவாள், அவர் அணிந்திருந்த சித்திர விசித்திரமான ஆடைகள், நீதி தவறாமல் அரசாண்ட செங்கோல் இவை யாவும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பிரிட்டிஷார் இந்தப் பொருள்களை இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்றிருந்தார்கள். இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இவ்வாறு எடுத்துச் சென்ற பொருள்களை இங்கிலாந்தில் வைப்பதற்கு இடமில்லாமல் போகவே மீண்டும் அவைகளில் சிலவற்றை அந்தந்த நாட்டுக்கு அன்பளிப்பாக, இங்கிலாந்து மன்னரின் பரிசாகத் திருப்பிக் கொடுத்தார்கள். எப்படி இருக்கிறது கதை! யாரோ செய்த வெல்லப் பிள்ளையாரை எடுத்து வந்து அந்தப் பிள்ளையாரிலேயே கொஞ்சம் கிள்ளி அவருக்கு நைவேத்தியம் செய்த கதைதான்!

தொல்பொருள் கலை மண்டபத்தில் மிக முக்கியமான பகுதி சிற்பங்கள் சேகரித்து வைத்திருக்கும் பகுதிதான். பழைய நாளில் கருங்கல்லில் எத்தகைய ஜீவகளையைக் கொண்டுவரக்கூடிய மகா சிற்பிகள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்தப் பகுதியில் ஏராளமான சாட்சியங்கள் இருக்கின்றன.

இங்கு நமது தமிழ் மன்னர்கள் எழுதிய சாசனங்கள் இருக்கின்றன. கருங்கல்லில் தமிழில் எழுதிக் கொடுத்த சிலாசாசனங்கள் அவை. தமிழ் நாட்டில் எல்லாக் கோயில்களிலும் காணும் நந்தி, மாமல்லபுரத்துச் சிற்பக் கலை, சோழநாட்டுச் சிற்பக் கலை இந்தக் கலைப் பாணிகளைத் தழுவி உருவான பல சிற்பங்களும் இருக்கின்றன.

வரிசை வரிசையாகக் கண்ணுக்கு எட்டிய வரை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சிற்பங்களைப் பார்த்தால் பிரமிப்பும் வியப்பும் உண்டாகத்தான் செய்யும். ஆகா! இத்தனை சிற்பங்களையும் செய்வதற்கு அந்தக் காலத்தில் எத்தனை சிற்பிகள் எவ்வளவு பிரயத்தனம் செய்திருக்க வேண்டும்?

அந்தக் காலத்துப் பெருமை இருக்கட்டும்; இந்தக் காலத்தில் இந்தச் சிற்பங்களையும், இன்னும் இங்குள்ள தொல் பொருள்களையும் சேகரிப்பதற்கு எவ்வளவு மகத்தான முயற்சி எடுத்திருக்க வேண்டும். எத்தனை மனிதர்கள், எத்தனை ஆண்டுகள் கஷ்டப்பட்டு இவைகளை எல்லாம் சேகரித்தார்களோ!

தொல்பொருள் கலைக்கூடத்தினால் எப்பேர்ப்பட்ட பயன் கிடைத்து வருகிறது. எவ்வளவு அரிய உண்மைகள் உலகுக்குக் கிடைக்கின்றன என்பதைக் கலையின் அரு

மையை உணர்ந்தவர்கள், கல்வியின் பெருமையை அறிந்தவர்கள், சரித்திரம் வரலாறு முதலியவைகளின் சிறப்புக்களைப் பற்றித் தெரிந்தவர்கள், ஆராய்ச்சி நிபுணர்கள் நன்கு அறிவார்கள். இந்தத் தொல்பொருள் கலைக் கூடத்துக்குள் யாராவது நல்ல அறிவும் ஆராய்ச்சித் திறனும் நியாய புத்தியும் படைத்த சிங்களவர்கள் வரலாம். அவர்கள் தமிழ் மக்களால் இலங்கைத் தீவு பயனடைந்திருக்கும் உண்மையை உணரலாம். அதன் காரணமாக இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மைகள் செய்ய முயலலாம். இந்த ஒரு நன்மையே மனித குலத்துக்குப் பெரும் பயன் கொடுக்கும் காரியமல்லவா? இதற்காகவே எத்தனை லட்சம் ரூபாய்கள் வேண்டுமானாலும் செலவு செய்து, இதுபோன்ற கலைக்கூடங்களைக் காப்பாற்ற வேண்டியது அவசியம் அல்லவா?

தொல்பொருள் கலை மண்டபங்களைக் காப்பாற்றுவது என்பது சாமான்யமான காரியமல்ல. அதில் உள்ள பொருள்களை அடிக்கடி எடுத்துத் துடைக்க வேண்டும். ஓலைச்சுவடிகளா யிருந்தால் அதன் ஆயுளை நீடிப்பதற்கு அவ்வப்போது மருந்து எண்ணெய் தடவ வேண்டும். புத்தகங்களா யிருந்தால் அவைகள் மக்கிப் போகாமல் விஞ்ஞான முறையில் ஏதாவது வழி செய்து காப்பாற்ற வேண்டும். விலையுயர்ந்த பொருள்களை, சரித்திர முக்கியம் வாய்ந்த சாமான்களைக் களவு போகாமல் காப்பாற்ற வேண்டும். இவைகளைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வராவிட்டால் எவ்வளவோ அரும்பாடுபட்டுச் சேகரித்த பொருள்கள் எல்லாம் வீணாகிவிடும். இதனால் மனித குலத்தின் வரலாறே, சரித்திர உண்மைகளே அழிந்து போய்விடும்.

பழங்காலத்தில் நமது நாட்டில் எல்லாவற்றுக்கும் முறையான சாத்திரங்கள் இருந்திருக்கின்றன. அவைகளின் பெருமைகளை உணர்ந்து காப்பாற்றாமல் விட்டுவிட்டோமே என்று நாம் இப்பொழுது துக்கப்படவில்லையா? இது போன்ற நிலைமை இனியும் வரவிடலாமா? இதை உணர்ந்த பிறகாவது தொல் பொருள் கலைக்கூடங்களைச் சரியாகப் பேணிப் பாதுகாத்து வர வேண்டுமல்லவா?

*** *** ***

இந்தக் கலைக்கூடத்தில் முன்பெல்லாம் எல்லாப் பொருள்களுக்கும் அடியில் தமிழிலும் சிங்களத்திலும் குறிப்புகள் இருந்தனவாம். இப்பொழுது சிங்களத்தில் மட்டும்தான் இருக்கின்றன. இவற்றில் உள்ள சில சரித்திர வரலாறுகள் தமிழ் மக்களுக்குப் பெருமையளிக்கக் கூடிய வகையில் இருந்தன. அவைகளைச் சிங்களவர்கள் தங்கள் வரலாற்றுக்குப் பெருமை தரும் முறையில் மாற்றி அமைக்க முயன்று வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இது எப்படி இருக்கிறது என்றால், 'கலாசாரம்' என்ற சொல்லின் திரிபே 'கல்ச்சர்' என்று ஆங்கிலச் சொல்லாக மாறி வந்திருக்கிறது என்று கூறுவது போல்தான் முடியும். சரித்திர உண்மைகளை அப்படி மூடி மறைத்துவிட முடியாது. நெருப்புக்கோழி பூமிக்குள் தலையை மட்டும் மறைத்துக் கொண்டு உலகம் அஸ்தமித்து விட்டதாக எண்ணி மகிழுமாம். இது

போன்ற விசித்திரக் கதையாகத்தான் அவர்களுடைய அர்த்தமற்ற செய்கை முடியும்.

ஈழநாட்டுத் தமிழ் மக்கள் பழைமையில் பற்றுடையவர்கள். தமிழ் நாட்டின் பழைய பண்பாடு, பழைய இலக்கியங்கள் ஆகியவற்றில் மிக்க பக்தி கொண்டவர்கள். ஆகையால் இலங்கையில் உள்ள தொல் பொருள் கலைக்கூடத்தில் இருக்கும் அருமையான தமிழ் நாட்டின் தொடர்புடைய கலைச் செல்வங்களின் வரலாறுகளை எல்லாம் நூல்களாக எழுதித் தமிழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் வெளியிட முயலவேண்டும். இதுபோன்ற வேலைகளில் ஆன்ற தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் ஈடுபட்டால் நாட்டுக்கு எவ்வளவோ நலம் ஏற்படும்.

எத்தனையோ சரித்திர உண்மைகளை எடுத்து விளக்கிக் கொண்டிருக்கும் கொழும்பு தொல் பொருள் கலைக் கூடத்தில் இருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் வணக்கம் செலுத்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டேன்;

*** *** ***

நேயர்கள் இனிமேல் மோட்டாரிலும் பஸ்ஸிலுமாக இலங்கைத் தீவு முழுவதும் பிரயாணம் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். கடுங்குளிரிலும், கரடுமுரடான பிரதேசத்திலும், மலை உச்சியிலும், காட்டு வெளியிலும் செல்லவேண்டியிருக்கும். ஆகையால் எல்லாவற்றுக்கும் வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்.

முதலில் ஈழநாட்டின் தலைநகரான, பிரசித்திபெற்ற சிங்கள அரசாங்க மந்திரிகள் இருந்து கருணை ஆட்சி புரியும் கொழும்பு நகரத்தை ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டு மேலே நமது ஈழநாட்டுப் பிரயாணத்தைத் தொடர்வோம். (தொடரும்)

அதிசயம், ஆனால் உண்மை!

“என் பிள்ளையைக் கல்லூரியில் படிக்க வைப்பதற்குப் பணம் இல்லையே” என்று மூக்கால் அழுபவர்களைப் பார்த்திருக்கிறோம். “பள்ளிக்கூடம் படிப்பதற்கு அவனுக்கு எங்கே கொடுத்து வைத்திருக்கிறது? மனைவி மக்களுக்குச் சம்பாதித்துப் போடுவதற்கே அவனுக்குச் சரியாக இருக்கிறதே!” என்று அங்கலாய்த்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். இத்தகைய பிரச்னைகள் எல்லாம் தம் படிப்புக்கு எப்போதும் தடை செய்ததில்லை என்கிறார் ஒருவர். வெறும் வாய்ப்பேச்சு வீரர் அல்ல அவர். உண்மையிலேயே அவ்வாறு வாழ்ந்து காண்பித்திருக்கிறார். வறுமை நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர்தான். அவர்கள் குடும்ப சம்பிரதாய முறைப்படி இளமையிலேயே கல்யாணம் செய்து கொண்டவர்தான். அவருக்கு ஒரு பெண் குழந்தைகூட இருக்கிறாள். அன்றாடப் வேலை செய்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்ற நிலைமையில் தான் அவரும் இருக்கிறார். இவ்வளவு தொல்லைகளுக்கு மத்தியில் காசி இந்து சர்வகலாசாலையில் சேர்ந்து இந்தி மொழியில் எம். ஏ., பட்டம் பெற்றிருக்கும் இந்த அதிசய மனிதர் யார் தெரியுமா? காசியில் தினப் பத்திரிகை வியாபாரம் செய்து வரும் திரு இந்திர தேவ் அவர்கள்தான்!




திரு இந்திர தேவ் எம்.ஏ.,

திரு இந்திர தேவ் உத்தரப் பிரதேசத்தில் உள்ள சரன் ஜில்லாவைச் சேர்ந்த புரைனு என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். சிறு வயதில் ஆரம்பப் பாடசாலையில் படித்திருக்கிறார். வறுமை காரணமாக மேலே படிக்க முடியவில்லை. அவருக்குப் பத்து வயதாக இருக்கும்போதே அவர் பெற்றோர் அவருக்குக் கட்டாயப்படுத்தித் திருமணத்தை முடித்துவிட்டனர். குடும்பம் நடத்த முடியாமல் தம்முடைய இளம் மனைவியையும் தம் குடும்பத்தைச் சேர்ந்த இன்னும் இரண்டு பேருடனும் காசிக்கு வந்தார். காசியில் தினப் பத்திரிகை எடுத்து விற்று அதில் கிடைத்த வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்தினார். இவ்வளவுக்கு மத்தியில் இந்தி கற்க ஆரம்பித்து அதில் விசாரத் பரீட்சையில் தேறினார். பிறகு காசி வித்யாபீடத்தில் சேர்ந்து ‘சாஸ்திரி’ பட்டம் பெற்றார். பின்னர் காசி இந்து சர்வகலாசாலையில் சேர்ந்து இந்தி எம்.ஏ., பட்டமும் பெற்றார்.

எம். ஏ., பட்டதாரி ஆன பிறகும்கூட அவர் தினப் பத்திரிகை விற்கும் தம்முடைய தொழிலை விடவில்லை. இவருடைய தின வருமானம் என்ன தெரியுமா? ஒன்றேமுக்கால் ரூபாய்! இந்த ரூபாயில்தான் தம்முடைய இளம் மனைவியையும், எட்டு வயதுப் பெண்ணையும் காப்பாற்றி வருகிறார். இவருக்கு வயது இப்போது முப்பத்து மூன்று. இன்னமும் படிப்பில் ஆர்வம் காட்டி வருகிறார்.

உண்மையாகப் படிக்க வேண்டும் என்று ஆர்வம் இருந்தால், “கல்லூரியில் இடம் இல்லை; படிப்பதற்குப் பணம் இல்லை” என்று புலம்ப வேண்டியதில்லை என்பதற்குத் திரு இந்திர தேவ் எம்.ஏ., உதாரண புருஷராக நம்மிடையே வாழ்ந்து வருகிறார்.


முன்பு
"என் உடைகள் சீக்கிரமாகக் கிழிந்துவிட்டன!"
இப்போது
"என் உடைகள் சுத்தமான வாஷ்வெல் பார் சோப்பை உபயோகிப்பதால் அதிக வெண்மையாக இருப்பதுடன் அதிக நாள் நீடித்து வருகின்றன.
நூறு சத விகிதம் சுத்த எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வாஷ்வெல் பார் சோப். உடைகளில் அழுக்குகள் அடையாமல் தடுப்பதற்கு உத்தரவாதமாக இருப்பதுடன், அடிக்காமலும் கசக்காமலும் உடைகள் முற்றிலும் சுத்தமாக வெளுக்கும்படி செய்கின்றன.
எனவே, வாஷ்வெல் சோப் உங்களுடைய உடைகளை நன்றாக வெளுப்பதுடன் நீடித்த காலம் உழைக்கவும் உதவியாக இருக்கிறது.
கேரளா
வாஷ்வெல் பார் ஸோப்
WASHWELL BAR SOAP
கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு
கேரள சர்க்கார் கைத்தொழில் & வியாபார இலாக்காவின் ஒரு பகுதி

வானொலி வாரம்

சாவி

இப்போதெல்லாம் அநேகமாக, எல்லா நிலையங்களிலுமே வாரம் கொண்டாடி வருகிறார்கள். ஆண்டுதோறும் வானொலி வாரம் கொண்டாடுவது வழக்கமாகிவிட்டது.

ஜனவரி 13ஆம் புனிதப் பொங்கல் தினத்தன்று தொடங்கிய இவ்வருட வானொலி வாரத்தில் பல இன்னிசை நிகழ்ச்சிகளுடன் இன்னும் பல இனிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திருச்சி நிலையத்தார், இசை நிகழ்ச்சிகளைக் காட்டிலும் தமிழகத்தின் சரித்திர வரலாறுகள், இலக்கியச் சொற்பொழிவுகள், கிராமியக் காட்சிகள் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வானொலி வாரத்தை மிக்க கவர்ச்சிகரமாகவும் ரம்மியமாகவும் செய்திருந்தார்கள். இசை நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் நாதஸ்வரமே இடம் பெற்றிருந்தது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். அதென்னவோ தெரியவில்லை; இந்த வருஷம் நாதஸ்வர இசைக்கு ஒரு தனி யோகம் பிறந்து விட்டது! வானொலி வாரத்தில் காலைவேளைகளிலும், இரவு வேளைகளிலும் புகழ்பெற்ற பல நாதசுர வித்வான்களின் கச்சேரிகள் நடைபெற்றன. ஆகவே, 'வானொலி வாரம்' என்பதற்குப் பதிலாக 'நாதசுர வாரம்' என்று சொன்னால் கூடப் பொருத்தமாயிருக்கும்!

கர்நாடக சங்கீதத்துக்கே அஸ்திவாரம் போன்றது நாதஸ்வரக் கலை. தொன்று தொட்டு இயங்கி வரும் இந்த அபூர்வ வாத்தியத்தின் மூலம்தான் இசைக்கலையின் பூர்ண வடிவத்தையும் காணமுடியும். இசைக் கலைஞர்கள் பலரும் கேட்டு அறிந்து கொள்ளக் கூடிய பல அரிய விஷயங்கள் இந்த வாத்தியத்தில்தான் அடங்கியிருக்கின்றன. எனவே, தெய்வக் குழல் இசையையும், இந்த இசையில் புகழ் பெற்று விளங்கும் பல கலைஞர்களையும் போற்றி வளர்க்க வேண்டியது நம்முடைய கடமையாகிறது. ரேடியோ நிலையத்தார் இந்த முக்கிய பணியை அடிக்கடி செய்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

திருச்சி வானொலி நிலையத்தார் இவ்வருட வானொலி வார விழாவை நாதசுர இசைக் கலையில் புகழ்பெற்று விளங்கும் காருகுறிச்சி திரு அருணாசலத்தின் மங்கள வாத்தியக் கச்சேரியுடன் மங்களகரமாக ஆரம்பித்து வைத்தார்கள். 16-1-57 அன்று இரவு காலஞ்சென்ற திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதசுரக் கச்சேரியின் ஒலிப்பதிவு ஒன்றை ஒலிபரப்பினார்கள். இடை நாட்களில் திருவெண்காடு திரு சுப்பிரமணிய பிள்ளை, செம்பொன்னார் கோயில் திரு ஆர்.டி. முத்துக்குமாரசாமி, திரு ஆர். டி. வைத்தியநாதன் முதலிய கலைஞர்கள் நாதசுரம் இசைத்து, சக்கைப் போடாகப் போட்டு வானொலி வார விழாவைச் சிறப்பித்தார்கள்.

நாதசுரக் கச்சேரிகளைத் தவிர வானொலி வாரத்தில் இன்னும் சில விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. எல்லா நிகழ்ச்சிகளுமே கேட்டு அனுபவிக்கக்கூடிய முறையில் சிறப்பாக அமைந்திருந்தன. முக்கியமாக முதல் நாள் ஜனவரி 13ஆம் அன்று திருச்சி நிலையத்தார் நடத்திய நிகழ்ச்சிகளில் 'குமரி வந்தாள்' என்னும் வரலாற்றுச் சித்திரம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. கன்னியாகுமரி, சுசீந்திரம் பற்றிய பல விவரங்களை இந்த நிகழ்ச்சியின் மூலம் அறிந்து கொள்வது சாத்தியமாயிற்று. நிகழ்ச்சியின் அமைப்பு முறை நம்மை அந்த இடத்துக்கே நேரில் அழைத்துச் சென்று பிரத்தியட்ச தரிசனம் செய்வித்தது. மேற்படி நிகழ்ச்சியின் போது நாம் கன்னியாகுமரிப் பகுதியில் நடமாடுவது போலவும், பசுமையான இளம் பயிர்கள் தென்றலில் ஜிலு ஜிலுவென்று தலையசைத்து ஆடுவது போலவும், குமரித் தெய்வத்தின் ஆலயமணி ஓசை கேட்பது போலவும் பிரமிப்படைகிறோம். பிறகு குடியானவர்களின் குதூகல வாழ்க்கையைக் காண்கிறோம். அவர்களுடைய எக்களிப்பான வாழ்க்கையிலிருந்து வெளியாகும் நாட்டுப் பாடல்களைக் கேட்டபடியே சுசீந்திரம் ஆலயம் செல்கிறோம். அங்கே உள்ள கல் தூண்களையும் ஆலயத்தின் சிற்ப வேலைப்பாடுகளையும் பார்க்கிறோம். கல் தூண் ஒன்றை யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது. இதென்ன விந்தை! அந்தத் தூணிலிருந்து ஏழிசையும் எழுகிறது! சிற்ப அதிசயத்துடன் இசையற்புதத்தையும் இணைத்துவிட்ட விந்தைச் சிற்பியின் கலைத் திறமையைக் கண்டு வியக்கிறோம். தமிழகத்துக்கே உரிய தனிப் பெருமையல்லவா இது என்று மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுகிறோம்.

அடுத்தபடியாக 17-1-57 அன்று மாலை நடைபெற்ற சிலம்பக்கூத்து என்னும் நாட்டிய நாடகம் பாராட்டக்கூடிய அம்சமாகும். சோழ மன்னன் சபையில் மாதவி நடனம் நடைபெறுகிறது. சிலப்பதிகாரம் அளித்துள்ள இந்த அற்புதக் காட்சியைச் சிலம்பக் கூத்து என்னும் தலைப்பில் சிறப்பான முறையில் அமைத்திருந்தார்கள். சிலம்பின் இனிய ஒலி நம்மைச் சிலப்பதிகார காலத்துக்கே அழைத்துச் சென்று விடுகிறது!

குடுமியாமலை வரலாற்றுச் சித்திரம் 16-1-57ல் நடைபெற்றது. இதுவும் குடுமியாமலையிலுள்ள இசை சம்பந்தமான கல்வெட்டுகள் பற்றிய நிகழ்ச்சியேயாகும். இந்த நிகழ்ச்சியின் போது தமிழகத்துச் சிற்பக்கலையின் அருமைகளும், இசைக்கலையின் பெருமைகளும் வெளியாயின. 'கிராமம் செல்வோம்' என்ற நிகழ்ச்சியில் முசிரி கிராமத்தின் தைப்பூசத் தேர்விழாக் காட்சிகளையும், அனுபவித்து ரசிக்கக்கூடிய தெருக்கூத்து ஒன்றையும் நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்கள். 'சிங்கன் சிங்கி', பொய்க்கால் குதிரையாட்டம், கிராமப்பஞ்சாயத்தில் ஜல்லிக்கட்டு விசாரணை முதலிய ரசமான அம்சங்களும் கிராம நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றன.

இந்த நிகழ்ச்சிகளைத் தவிர தினமும் வள்ளுவர் வான்மறைக் குறள் பற்றிய சொற்பொழிவுகளையும், தமிழ் வளர்த்த நுண்கலை

பற்றிய அரிய கருத்துரைகளையும் திரு அ. சீநிவாச ராகவன், திருப்பெருந்திரு குன்றக் குடி அடிகளார், திரு பாஸ்கரத் தொண்டைமான் முதலிய தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் நமக்கு வாரி வழங்கினர்கள்.

வானொலி வாரத்தில் இலக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு இடமளித்திருந்ததைப் போலவே இசை நிகழ்ச்சிகளுக்கும் இடமளித்திருந்ததையும் குறிப்பிட வேண்டும்.

சென்னை நிலயத்தார் இந்த இடமளிக்கும் விஷயத்தில் கொஞ்சம் தாராளமாகவே முன் வந்திருந்தார்கள். மயிலாப்பூர் சாஸ்திரியார் மண்டபத்திலும், ஜார்ஜ் டவுன் அண்ணாமலை மன்றத்திலும் ரசிகர்கள் பலர் முன்னிலையில் பல நிகழ்ச்சிகளுக்கு இடமளித்திருந்த விஷயத்தைத்தான் சொல்கிறேன்! இதனால் அவ்வப்போது ரசிகர்களின் கரகோஷமும் 'ஆகா'காரமும் சேர்ந்து நிகழ்ச்சிகளுக்கு உண்மையான ஜீவனை ஊட்டின.

இசை நிகழ்ச்சிகளில் சிகரமாக அமைந்தவை, செம்மங்குடி சீனிவாசய்யர், ஆலத்தூர் சகோதரர்கள் செய்த இன்னிசைக் கச்சேரிகளும் திரு டி. என். சுவாமிநாத பிள்ளையின் புல்லாங்குழல் இசையுமாகும்.

அன்று செம்மங்குடி அவர்களின் கச்சேரியில் கானடாவும், நாட்டக்குறிஞ்சியும் அமோகமாக அமைந்தன. கானடாவில் அலைமோதுவதுபோல் கஅ....கஅ...கஅ....கஅ...என்று ஸ்வரம் பாடியபோது அந்த ராகத்தின் பூர்ணமான ஜீவனையும் தோற்றத்தையும் காண முடிந்தது. விச்ராந்தியான நாட்டக் குறிஞ்சி ராக ஆலாபனையின் போது இடையில் வெளிப்பட்ட இருமல் சத்தம் கூட சுருதி சுத்தமான நாட்டக் குறிஞ்சியிலேயே வெளிப்பட்டது!

ஆலத்தூர் சகோதரர்களின் ஷண்முகப் பிரியா ராக ஆலாபனை, தானம் பல்லவி, கண்ட ஜாதி திருபுடை தாளத்தில் 'கதிர்வடிவேலா உனது பாதம்' என்று நிரவல்செய்தது. மூன்று காலத்திலும் பாடியது எல்லாமே சாஸ்திரீயத்தை விரும்பும் சங்கீத ரசிகர்களுக்கு ஏற்ற கச்சேரியாக அமைந்தது.

அடுத்தபடியாக திரு சுவாமிநாதபிள்ளையின் புல்லாங்குழல் கச்சேரியைத்தான் சொல்ல வேண்டும். பிள்ளை அவர்களின் கச்சேரி அன்று அவ்வளவு அருமையாக அமைந்தது. லய சம்பந்தமான நோக்குடன் பார்த்தால் அந்தக் கச்சேரி ஒரே நெருப்பாக இருந்தது என்றுதான் கூறவேண்டும். அன்று அவருக்குப் பக்கவாத்தியம் வாசித்த பழனி சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பழைய பாணியைக் கையாண்டு போஷாக்குடன் வாசித்தார். திருப்புகழுக்கு அவர் வாசித்த முறை அவர் புகழுக்குத் தனி வெற்றியைத் தேடித்தந்தது. அழகநம்பியும், தட்சிணாமூர்த்தியும் ஒருங்கே சேர்ந்து பழனியாகப் பிறந்தனரோ என்று அதிசயிக்கும்படி இருந்தது. திரு கோவிந்தசாமி நாயக்கரின் வயலின் வாசிப்போ ஆரம்பம் முதல் கடைசிவரை குளிர்ந்த தென்றல் வீசுவது போல் குளுகுளுவென்று இருந்தது.

மொத்தத்தில் வானொலி வார நிகழ்ச்சிகளைக் கவர்ச்சியுடன் அமைத்து நடத்திய சென்னை நிலயத்தாரையும் திருச்சி நிலயத்தாரையும் பாராட்டி நன்றி செலுத்துகிறேன்:



நாலவல்லியின் தியாகம்

கி.ரா.கோபாலன்

ஆறும் அத்தியாயம்


அவன் யார்?

பூதுகன் கலங்கமாலவரையரை ஆறுதல் செய்வது போல் "இந்த மாறன் முத்தரையனுக்காக நீங்கள் பட்டபாட்டுக்கு அவர்கள் கொஞ்சம் கூட நன்றி செலுத்தாமல் உங்களை இந்த நிலையில் கொண்டு வந்துவிட்டது மிகவும் வருத்தமாக இருக்கிறது. பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? கொடும்பாளூர் இருக்கு வேளிர் என்றால் அவர்களுக்கு அவ்வளவு பயமாக இருக்கிறது. சாம்ராஜ்யத்தைக் கட்டியாள்வது மாத்திரம் போதாது. பிரயத்தனமும் வேண்டித்தான் இருக்கிறது. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற் போல், பல்லவர்கள் வலுத்தால் பல்லவர் பக்கத்திலும், பாண்டியர்கள் வலுத்தால் பாண்டியர்கள் பக்கத்திலும் இருந்து எவ்வளவு நாட்களுக்கு இந்தப் பேரரசைக் காப்பாற்ற முடியும்? முத்தரையர் குடும்பத்தில் எனக்கு மிகப் பற்றுதல் உண்டு. ஆனால் அவர்கள் இத்தகைய சந்தர்ப்பத்தில் உங்களைப் போன்ற சுத்த வீரர்களைக்கூட மறந்து விடுகிறார்களே என்ற வருத்தம்தான்எனக்கு" என்றான்.

கலங்கமாலவரையர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, "அவர்களைச் சொல்லுவதினால் பயன் இல்லை. கொடும்பாளூர் அரசர்கள் முத்தரையர் மீது நேராகப் படையெடுத்தால் அவர்கள் என்றும் யுத்தம் செய்யத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட ஒருவனைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னைக் கொலை செய்துவிட வேண்டும் என்பதற்காக அங்கங்கே ஒற்றர்களை வைத்துக் காரியம் செய்பவர்களை என்ன செய்ய முடியும்? ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பெரிய யுத்தத்தில் இறங்க முடியுமா? நான் செய்த உதவிக்காக மாறன் முத்தரையன் எனக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று நான் விரும்பவில்லை, பூதுகா! இப்படியெல்லாம் ஏதாவது பேசி என் மனத்தைக் கிளறாதே! என்னுடைய துறவு நிலையில் இவையெல்லாம் பேசக்கூடிய வார்த்தைகளில்லை" என்றார்.

"நீங்கள் இப்பொழுது இருக்கும் நிலையில் இதெல்லாம் பேசக் கூடிய வார்த்தைகளில்லைதான். ஆனால் அரசியல் இருக்கட்டும். மதத்துக்கு ஆபத்து ஏற்படுமானால் அதிலிருந்து மதத்தைக் காப்பாற்றுவதுதானே உங்களைப்

போன்ற துறவிகளின் கடமையாகும். 'இன்று மதத்துக்காக அரசியலா? அல்லது அரசியலுக்காக மதமா?' என்பதைத் தெளிவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. உங்களுக்கு மாத்திரம் இல்லை. எனக்கும் அத்தகைய கவலை ஏற்பட்டுள்ளது. இந்த நாடு இருண்டு கிடக்கும் இந்த நிலையிலும் வேறு மதத்தினர் ஆங்காங்கு புற்றீசல் போல் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் மதம் உயர்வடைவதற்காகச் செய்யும் சூழ்ச்சிகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. குடந்தையில் சைவ மதத்தினரான அப்பரின் சிஷ்யர்களும், வைஷ்ணவ மதத்தினரான திருமழிசை ஆழ்வாரின் சீடர்களும் செய்யும் அட்டகாசங்களுக்கு அளவேயில்லை. அவர்களுடைய அபிப்பிராயம் எல்லாம் மறுபடியும் சோழ வம்சத்தினர் பதவிக்கு வந்தால் தங்கள் மதத்துக்கு ஒரு உன்னத நிலை ஏற்படும் என்பதுதான். சோழ சாம்ராஜ்யம் நிலைபெற்றால்




வைஷ்ணவமும், சைவமும் தழைத்தோங்கும். கரிகாலனின் குலத்தில் உதித்த ஒருவன் அரசைக் கைப்பற்றுவானேயானால் தம் முன்னோர்கள் செய்ததுபோல் எண்தோள் ஈசர்க்கு நூற்றுக்கணக்கான மாடக் கோயில்களும் கூட கோபுரங்களும் கட்டுவிப்பான் என்று கனவு காணுகிறார்கள், சிவனடியார்களும் வைஷ்ணவ பக்தர்களும். மாலவரையரே! அவர்களுடைய கனவு பலிக்குமானால் உம்மைப்போன்ற சர்வம் சூன்யம் என்ற புத்தமதக் கொள்கைகளைப் பின்பற்றியவர்களும், என்னைப் போன்ற சார்வாகரின் நாஸ்திகக் கொள்கைகளைப் பின்பற்றியவர்களும் என்ன கதியை அடைவார்கள் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்! நீங்கள் பௌத்த பிக்ஷு ஆவதற்கு முன்னால் எத்தகைய சூழ்ச்சி நிறைந்த காரியங்கள் எல்லாம் செய்து சோழ பாரம்பர்யம் மறுபடியும் தலையெடுக்கா வண்ணம் செய்ய முயற்சித்திர்களோ, அதை விட இந்தக் காரியத்தில் அதிகப் பொறுப்பு இப்பொழுது நீங்கள் பௌத்த மதத்தில் சேர்ந்த பிறகு உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்'' என்றான்.

வானத்தில் சூழ்ந்திருந்த கருமேகக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து அங்கு மின்னும் நட்சத்திரங்கள் ஒளிவீசத் தொடங்கின. கீழ் வானத்தே சந்திரனும் மெதுவாக எழுந்தான். கலங்கமாலவரையர் சிறிது நேரம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தவர் போல் இருந்து விட்டு, ''பூதுகா! இவ்வளவு நாட்களும் அமைதி நிலையிலிருந்த என் மனத்தை நீ வந்து குழப்பிவிட்டாய். நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் அரசியலின் செல்வாக்கு பெற்றுத் தங்களுடைய மதத்தைப் பரப்ப வேண்டுமென்று பௌத்த பிக்ஷுக்கள் நினைப்பது பெரும் தவறு. அது ததாகதருக்கு உவப்பான காரியம் என்று எனக்குப் படவில்லை. சாம்ராஜ்ய நிகழ்ச்சிகளில் கவனம் வைத்துத் துறவு வாழ்க்கையின் புனிதத் தன்மையை நான் குலைத்துக்கொள்ள விரும்பவில்லை.....'' என்றார்.

பூதுகன் அலட்சியமாகச் சிரித்தான். ''கலங்கமாலவரையரே! துறவு வாழ்க்கையை மேற்கொண்ட பின் இவ்வளவு கோழைத்தனம் உங்கள் மனத்தில்வந்து சூழ்ந்து கொள்ளும் என நான் நினைக்கவில்லை. பாவம், மனிதன் வாழ்க்கையில் சிறிது தோல்வியுற்றாலேயே தன்னுடைய திடமான நம்பிக்கை,வீரம், மேதாவிலாசம் இவைகளை இழந்து விடுவான் போலிருக்கிறது. கருகரு வென்று வளர்ந்திருந்த உங்கள் மீசையை அகற்றியதோடு உங்களுடைய ஆண் தன்மையையும் அல்லவா சுரண்டி எறிந்து விட்டீர்கள் போலிருக்கிறது. சேனைத் தலைவராக அகன்ற மார்பிலே கவசம் தரித்து, கையில் வாளேந்திக் கடல் போல எதிர்த்து வரும் படைகளோடு வீரப் போர் புரியும் உங்கள் மார்பகத்தைச் சீவர ஆடையால் மூடிய பின் நெஞ்சில் எழும் வீர உணர்ச்சிகளையும் வேறு ஏதோ மூடி மறைத்து விட்டதுபோலிருக்கிறது. நீங்கள் ஒன்றை உணர வேண்டும். ததாகதர் கூறிய படியே இந்த மதம் இந் நாட்டில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதா என்பதை வரலாற்றின் மூலமாக நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ததாகதர் பரிநிர்வாணம் அடைந்த பல ஆண்டுகளுக்குப் பின் அசோகன் என்னும்

பேரரசன், பௌத்த உபாசகனாகி இந்த உலகெங்கும் பரவச் செய்யா விட்டால் இந்த மதத்துக்கு இன்று உலகில் இவ்வளவு பெருமை ஏற்பட்டிருக்கும் என்று கனவுகூடக் காண முடியாதே! இந்த உலகத்தில் எந்த நாட்டிலுமே மதவாதிகள் அரசியலாரின் பேராதரவைப் பெறாமல் ஒரு உன்னத நிலையை அடைந்ததில்லை. இந்தத் தமிழகத்தில் பௌத்த மதமும், ஜைன மதமும் காலூன்றியதற்கு அரசர்களின் ஆதரவே காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. மதத்தின் காரணமாகப் பேரரசுகள் அழிவதுண்டு; எழுவதும் உண்டு. 'மன்னன் வழி மக்கள்' என்பதுபோல் மன்னன் எதை விரும்புகிறானோ அந்த



வழியை மக்கள் தாங்களாகவோ அல்லது பலாத்காரமாகவோ கடைப்பிடித்து நடக்க வேண்டியிருக்கிறது. இப்படி இருக்க மதவாதிகளின் கடமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத் தாங்கள் உணராமல் இருக்க முடியாது'' என்றான்.

கலங்கமாலரையர் ஒரு நீண்ட பெருமூச்சுக்கிடையே, ''பூதுகா! நீ என் மனத்தைமிகவும் குழப்ப நிலைக்கு உள்ளாக்குகிறாய். நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் நான் எத்தகைய நிலையில் இந்தக் கோலம் பூண்டு இங்கு இருக்கிறேன் என்ற ரகசியம் உனக்குத் தெரியாது'' என்றார்.



அந்த நிலவின் ஒளியில் அவருடைய முகத்தில் வாட்டத்தின் கோடுகள் வீழ்ந்திருந்ததைப் பூதுகன் கண்டான். ''மாலரையரே! அந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். உங்கள் நிலையைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. உலகில் இந்த உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வாழ்வதற்கு வேறு வழியில்லாமல் தான் நீங்கள் இப்படித் தலையை முண்டிதம் செய்து கொண்டு சீவராடையைப் போர்த்திக் கொள்ளும்படி நேர்ந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். புத்தர் பெருமானின் ஜராவக்கத்தில் 'எலும்புகளைக் கொண்டு ஒரு வீடு கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஊனையும் உதிரத்தையும் குழைத்துச் சாந்தாகப் பூசப்பட்டிருக்கிறது. முதுமையும், மரணமும், கர்வமும் கபடமும்தான் அதில் குடிபுகுந்திருக்கின்றன. மனித வாழ்வு நிலையானதில்லை' என்று சொல்லியிருந்தாலும் எந்த மனிதனுக்கும் இந்த உயிரின் மேலுள்ள ஆசை நீங்குவதில்லை. எந்த மனிதனும் தன் கடமையைச் செய்து முடிக்கும் வரை இந்த உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறான். மாலரையரே! உங்கள் ரகசியத்தைத் தாராளமாக என்னிடம் சொல்லலாம். நாஸ்திகம் பேசுகிறவர்கள் எல்லாம் நம்பிக்கைத் துரோகம் செய்து விடுவார்கள் என்று நினைத்து விடாதீர்கள்'' என்றான் பூதுகன்.

கலங்கமாலரையர் அந்தச் சமயத்தில் மனத்தில் திகைப்பும் குழப்பமும் அடைந்தவராயிருக்கிறார் என்பது அவர் முகக் குறியிலிருந்து நன்கு தெரிந்தது. அவர் மெதுவான குரலில், ''பூதுகா! பல போராட்டங்களில் உயிருக்கு அஞ்சாமல் நின்று போராடிய நான் இன்று உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்த மார்க்கத்தில் பிரவேசிக்கவில்லை. இன்று என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை தான். நான் நினைத்த கடமை நிறைவேறும் வரையில் இந்த வேடத்தில் இருக்க வேண்டுமென்ற எண்ணம்தான் எனக்கு. என்னுடைய வீர உணர்ச்சியோ ஆண்மையோ குலைந்து விடவில்லை. நான் கோழையாகிவிடவில்லை. இன்றுள்ள நிலையை உணர்ந்து பிறருடைய இடையூறு இல்லாமல் என்னுடைய காரியத்தைச் சாதித்துக்கொள்ள இதுதான் எனக்குச் சரியான மார்க்கமாகப் படுகிறது. எனக்கு எந்த மதத்தைப் பற்றியும் கவலை இல்லை. இதுதான் எப்பொழுதும் என்னுடைய தியானம். தஞ்சையர்கோன் மாறன் முத்தரையனின் உப்பைத் தின்றதற்காக என்னுடைய கடமையைச் செலுத்த நினைக்கிறேன். அவர்களுடைய நலனுக்காகச் சோழ வம்சத்தைச் சேர்ந்த பூண்டு ஒன்று எங்கேனும் முளைத்திருந்தாலும் அதைக் கிள்ளி எறிந்து விடத்தான் இத்தனை நாட்களும் பாடுபட்டேன். இப்பொழுதும் அத்தகைய நோக்கம் தான் எனக்கு. நான் என் நன்றியைச் செலுத்தும் வகையில் முத்தரையர்களுக்காக எத்தகைய சூழ்ச்சிகளைச் செய்தாலும், வீரத்தனமான காரியத்தைச் செய்திருந்தாலும் அவர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையிலோ தங்களுடைய சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையிலோ என்னோடு ஒத்துழைப்பவர்களாகத் தெரியவில்லை. இது அவர்களுடைய அறியாமை என்று



தான் நினைக்கிறேனே தவிர அவர்களுக்கு என்னிடம் அன்பில்லையென்று நினைக்கவில்லை. இன்றைய நிலையில் அவர்கள் பாண்டியர்களுக்கு உட்பட்டோ, பல்லவர்களுக்கு உட்பட்டோ அடிமைப்பட்டுக் கிடந்து தங்களுடைய சிறு ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொண்டு உயிர் வாழ நினைக்கிறார்களே தவிர, சோழ பாரம்பர்யத்தில் வந்த கரிகாலனைப் போலவோ, நலங்கிள்ளியைப் போலவோ வீர உணர்ச்சியோடு தங்கள் சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டு சார்வ பௌமர்களாய் வாழும் ஆசையில்லை. கொடும்பாளூர் இருக்குவேளிர்களுக்குச் சோழ வம்சத்தின் ரத்த சம்பந்தம் இருப்பதனாலோ என்னவோ, வீர உணர்ச்சியில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்கள் சாம்ராஜ்யத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லா விட்டாலும் மறுபடியும் இங்கே சோழ சாம்ராஜ்யத்தை நிறுவ வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். அவர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டிவிட நினைக்கும் என்னை ஒழித்து விட வேண்டும் என்று அவர்கள் நினைப்பதும் சகஜம் தானே? பூதி விக்கிரம கேசரியின் புதல்வர்களான ஆதித்திய இருக்குவேளானும் பராந்தக இருக்குவேளானும் என்னைப் பழி வாங்க உளவு பார்த்துத் திரிகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பழையாறையை ஆண்ட குமாராங்குசனுடைய மகனைத் தஞ்சை அரியணையில் ஏற்றப் பார்க்கிறார்கள் கொடும்பை இருக்குவேளிர்கள். அதற்கு அனுகூலமாக அவருடைய சகோதரி அனுபமாவையும் சோழ வம்சத்தில் யாருக்கேனும் மணம் முடிக்க வேண்டும் என்ற ஆசையும் அவர்களுக்கு இருக்கிறது. இதை அறிந்துகொண்டு, பழையாறையிலுள்ள சங்கமாதேவியையும் அவளுடைய குமாரனையும் ஒழித்துவிட முயற்சி செய்தேன். ஆனால் இந்த ரகசியத்தை எப்படியோ அறிந்து கொண்ட கொடும்பாளூரார்கள் என்னை ஒழித்து விடத் திட்டமிட்டுவிட்டார்கள். தஞ்சையர்கோன் மாறன் முத்தரையனின் குமாரன் இளங்கோதரையன் கொடும்பாளூர் அரசகுமாரியான அனுபமாவின் அழகில் மயங்கி அவளை மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசையில் உழன்று கொண்டிருக்கிறான். இது நடக்குமா? அவனுடைய சபல புத்தியை அறிந்த கொடும்பாளூர் மன்னர்களின் குமாரர்களாகிய ஆதித்தனும், பராந்தகனும் இளங்கோதரையனிடம் நட்புரிமை பாராட்டி, ஆசை வார்த்தைகள் காட்டிப் பேசி வருகின்றனர். இந்த நிலையில் என்னுடைய அந்தரங்கமான காரியங்களையெல்லாம் கூட அவர்கள் தெரிந்து கொண்டு விட முடிகிறது. அரச குடும்பத்தினர் இருக்கும் நிலையில் நான் ஏதேனும் ஆபத்தான நிலையைச் சுட்டிக் காட்டினாலும் கூட அவர்கள் மனத்தில் ஏறுவதில்லை. இளங்கோதரையன் கொடும்பாளூர் இளவரசி அனுபமாவின் மோகத்தில் சிக்கித் தவிக்கிறான். இந்த நிலையில் நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய காரியங்களெல்லாம் கொடும்பாளூர் இருக்குவேளிர்களுக்குப் புரிந்து விட்டதனால் நட்புரிமை கொண்டே என்னைக் கவிழ்க்கச் சதித் திட்டம் போட்டு விட்டார்கள். இத்தருணத்தில் நான் தஞ்சைமாநகரிலிருந்து ஆபத்துக்கிடையே என்னுடைய காரியங்களைக் கவனிப்பதை விட இத்தகைய துறவு வேடத்தில் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் இந்தப் பூம்புகாருக்கு வந்துவிட்டேன். நான் ஒவ்வொன்றையும் விவரமாகச் சொல்லுவதற்கு இது சமயமில்லை. எல்லாம் உனக்குப் பின்னால் ஒரு சமயம் தெரிவிக்கிறேன்.''



''இவ்வளவு தூரம் நீங்களும் நானும் மனம் விட்டுப் பேசி ஒரு காரியத்தில் இறங்கிய பின் நீங்கள் என்னிடம் எதையும் சொல்லாமலா இருக்கப் போகிறீர்கள்? இப்பொழுது நீங்கள் சொன்ன வரையிலேயே அநேக விஷயங்கள் விளங்கி விட்டன. கவலைப் படாதீர்கள்! பழையாறையிலிருக்கும் சோழன் மனைவி கங்கமா தேவியையும் அவன் மகனையும் ஒழிக்க எவ்வளவு நேர

மாகும்? கோடீச்சுவரத்தில் சந்தகன் என்னும் சோதிடன் இருக்கிறான். அவன் சாக்த மதத்தைச் சேர்ந்தவன். மந்திர தந்திரங்களில் நிபுணன். பக்ஷத்திற்கு பக்ஷம் மாகாளிக்கு நரபலி கொடுப்பதென்று விரதம் எடுத்திருக்கிறான். அவனிடம் சொன்னால் போதும். ஒரு பக்ஷத்தில் கங்கமா தேவியின் புத்திரனையும், ஒருபக்ஷத்தில் அவள் புத்திரியையும் மாகாளி தேவிக்கு நிவேதனம் செய்து விடுவான். நினைத்தால் அம் மூவரையும் ஒரே பக்ஷத்தில் பலி இட்டாலும் இட்டு விடுவான். மாய தந்திரங்களில் மிகவும் வல்லவனாகிய அவன் எனக்கு ஆருயிர் நண்பன். நான் சொன்னால் எதையும் தட்டமாட்டான்'' என்றான்.



''கோடீச்சுவரத்துச் சந்தகனா? அவனைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். சார்வாக சமயத்தைச் சேர்ந்த நாஸ்திகனான உனக்கு இந்த மந்திர தந்திரங்களில் எல்லாம் நம்பிக்கை உண்டா?'' என்றார்.

பூதுகன் சிரித்தான். ''எனக்கு மந்திரத்தில் நம்பிக்கை இல்லை. தந்திரத்தில் எனக்கு எப்பொழுதுமே அழியாத நம்பிக்கை யுண்டு. எப்படி இருந்தால் என்ன? இப்பொழுது நம்முடைய நோக்கம்தானே நமக்குப் பெரிது. போகட்டும், இன்று இந்த விஹாரத்தில் பூசை நடக்கும்போது ஒரு சிறு கலவரம் ஏற்பட்டதல்லவா? யாரோ ஒரு பிக்ஷுணி மீது ஒரு பிக்ஷு ஏதோ குற்றம் இருப்பதாகச் சொல்லிப் பழி சுமத்த முற்பட்டாரல்லவா? அதன் ரகசியம் உங்களுக்கு ஏதேனும் தெரியுமா? அந்தப் பிக்ஷுணியைப் பார்த்தால் எனக்குச் சிறிது சந்தேகமாகவே இருக்கிறது. நல்ல அழகி, இளம் வயது, இப்படிப்பட்ட பெண் ஏன் பிக்ஷுணிக் கோலம் தாங்க வேண்டும் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அந்தப் பிக்ஷு அவள் மீது ஏதோ குற்றம் இருப்பதை உண்மையாகவே உணர்ந்திருக்க வேண்டும்; அவர் மிகவும் ஆத்திரம் அடைந்திருக்கவேண்டும் என்பதை அவருடைய முகபாவனையிலிருந்து நான் தெரிந்து கொண்டேன். மாலவரையரே! இந்த ரகசியம் இந்தப் பிக்ஷுக்களின் கூட்டத்தில் ஊடாடும் உங்களுக்குக் கொஞ்சமாவது தெரிந்திருக்கலாம். அதன் விவரத்தைக் கேட்க வேண்டும் என்ற துடிப்பு எனக்கு'' என்றான்.

''அதன் விவரம் எனக்கு ஒன்றும் தெரியாது. இனிமேல்தான் அதைப் பற்றி நானும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. பூதுகா! புத்தபெருமானிடமும் அவருடைய உபதேச மொழிகளிலும் எனக்கு அளவற்ற பிரேமை உண்டு. நான் ஒரு புத்த பிக்ஷுவாக வேண்டும் என்று கனவில்கூட ஆசைப் பட்டதில்லை. அரச சேவையில் ஈடுபட்டு ராஜ தந்திர நோக்கங்களிலேயே எப்பொழுதும் சிந்தனையைச் செலுத்திக் கொண்டு வரும் எனக்கும் இந்தத் துறவு வாழ்க்கைக்கும் எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்? எப்படியோ மனப் பக்குவம் வராவிட்டாலும் நான் ஒரு பௌத்த பிக்ஷு ஆக வேண்டிய விதி ஏற்பட்டுவிட்டது. நான் உண்மையாகவே மனப் பக்குவத்தோடு பிக்ஷுவாகிச் சங்கத்தில் சேர்ந்திருந்தாலும் இங்கு இருக்கும் நிலையில் நான் வெறுப்படைந்து வேறு வழியில் செல்லும் உத்தேசம் தான் ஏற்பட்டிருக்கும். பூதுகா! புத்த பெருமானின் வாழ்க்கை அவருடைய கனவு, அவருடைய உபதேசங்கள் எல்லாம் பரிசுத்தமானவை. ஆனால் இங்கு இருக்கும் பௌத்த பிக்ஷுக்களின் நோக்கம் வாழ்க்கை நடைமுறையில் இவை எல்லாம் வேறு. எல்லாம் மதப் பிரசார நோக்கத்தில்தான் நடக்கின்றனவே தவிர, எதுவும் துறவு வாழ்க்கைக்குள்ள கொள்கையோடு நடப்பதில்லை. எப்படியோ இங்குள்ளவர்கள் துறவு வாழ்வை மேற் கொண்டவர்கள் போலிருப்பினும் உலக நடைமுறையில் ஓரளவு பற்றுக் கொண்டவர்கள்தான். அவர்கள் ஓரளவு உலக வியவகாரங்களிலும் கவனம் செலுத்துவது என்னைப் போன்றவனுக்கும் ஓரளவு பயனளிக்கக் கூடியதாய்த்தான் இருக்கிறது. இன்றைய நிலையில் அவர்கள் எப்படி இருப்பினும் அவர்களும் சிதைந்துபோன சோழ சாம்ராஜ்யத்தின் பெருமைகளை அடிக்கடி பேசுகிறார்கள் என்ற வருத்தம்தான்

எனக்கு. மறுபடியும் சோழசாம்ராஜ்யத்தினர் ஆளுகைக்கு நாடு உட்பட்டாலும் அவர்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும் போல்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் சோழ மன்னர்கள் வேறு சமயத்தவர்களாயினும் புத்த பிக்ஷுக்களின் துறவு வாழ்க்கைக்கு மதிப்பு வைத்து அவர்களுக்குப் புத்த விஹாரங்களும் பள்ளிகளும் அமைத்துக் கொடுத்ததே காரணமாகும். இன்று இக் காவிரிப் பூம்பட்டினத்தையும் அதைச் சுற்றியுள்ள சில இடங்களையும் புத்த மதத்தைச் சேர்ந்தவனும் களப்பிரகுல திலகனுமான அக்கூட விகந்தனின் வம்சத்தினர் அரசாட்சி செய்வதில்கூட இந்தப் புத்தபிக்ஷுக்களுக்குத் திருப்தி கிடையாது'' என்று கலங்கமாலரையர் சொல்லிக் கொண்டு வரும்போது, அந்தப் புத்த விஹாரத்திலிருந்து யாரோ வெளியே வருவது போல் தெரியவே சட்டென்று இருவரும் அந்த மரத்துக்குப் பின்புறம் சென்று தலைமறைவாக ஒதுங்கி நின்றனர். அந்த விஹாரத்திலிருந்து வெளியே வந்தது யாரென்று அவர்களுக்கு விளங்கி விட்டது. அவள் ஒரு பௌத்த பிக்ஷுணி. ஆம், இன்று பூசை வேளையில் எந்தப் பிக்ஷுணியின்மீது ஒரு புத்தபிக்ஷு குற்றம் சுமத்தினரோ அதே இளம் வயதுடைய புத்தபிக்ஷுணிதான். பௌத்த விகாரத்திலிருந்து வெளிவந்த அந்தப் பெண் அந்த அழகான சோலையைத் தாண்டிக் கடற்கரையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். கலங்கமாலரையர் வியப்புக் குரலில், ''பூதுகா, பார்த்தாயா அவளை? இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது'' என்றார்.

பூதுகன் அலட்சியம்நிறைந்த குரலில், ''இதில் என்ன ரகசியம் இருக்கப் போகிறது? சாதாரணமாகப் பெண்களின் இதயத்தை அறிவதே மிகக் கடினம். அதிலும் இளம் வயதுடைய அழகான பெண்ணின் மனத் துடிப்புகளையும், ரகசியங்களையும் நடத்தைகளையும் அறிந்து கொள்வது மகா கடினம். பருவத்தின் விபரீத விளையாட்டுக்களையெல்லாம் இந்த விஹாரத்தில் உள்ள துறவிகள் எவ்வளவு தூரம் அறிந்திருக்கப் போகிறார்கள்? இந்தப் பருவத்தில் துவராடை யணிந்து பிக்ஷுணியாகிவிட்டால், மன ஆசைகள் எல்லாம் போய் விடுமா? இந்த இன்பகரமான நிலவு வேளையில் யார், எங்கு அவளை எதிர் நோக்கிக் காத்திருக்கிறானோ? இந்த ரகசியத்தை நாம் அறிந்து கொள்வது மிகக் கடினமா?'' என்றான். (தொடரும்)



தோழியின் கடிதம்

எது நாகரீகம்?

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

சென்ற வாரம் பெண்களுக்குக் கர்வம் கூடாதென்று எழுதியிருந்தேனல்லவா? அதை ஒட்டி வேறு சில பண்பாட்டுக் குறைவான வழக்கங்களையும் குறிப்பிடுகிறேன்.

அற்ப விஷயமானாலும் பிறர் மனம் சிறிதும் நோகாமல் நடந்து கொள்ள முயலுவதுதான் உண்மையான நாகரிகம்.

எனக்குத் தெரிந்த நாகரிகப் பழக்கமுடைய ஒரு அம்மாள் எங்கேயாவது கல்யாணங்கள், கூட்டங்களுக்கு வந்தால் அர்த்தமில்லாமல் இடீரென்று சிரிப்பார். உடனே பெண்களும் ஒரு மாதிரியாகச் சிரிப்பார்கள். சற்றுக் கவனித்துப் பார்த்தால் குரூபியாக யாராவது வந்திருப்பார்கள். அல்லது கவனக்குறைவாக அலங்காரம் செய்து கொண்டிருப்பார்கள். இதையாவது ஓரளவு பொறுக்கலாம். அங்க ஹீனமடைந்தவர்களையும் நோயுற்றவர்களையும் கண்டு சிலர் சிரிக்கிறார்கள். என்ன அவிவேகம்? பிறரைக் கண்டு நகைக்கும் இந்தக் கெட்ட வழக்கம் ஒழிய வேண்டும்.

சில சமயம் யாராவது கால்தவறிக் கீழே விழுந்தால் பார்க்கிறவர்கள் தங்களை அறியாமல் சிரித்து விடுகிறார்கள். அந்த வழக்கமும் கண்டிக்கப்பட வேண்டியதுதான். அவர்களுக்கு உடனே உதவி செய்து அநுதாபம் தெரிவிப்பதுதான் சிறந்த வழக்கம்.

சிலர் தங்கள் வீட்டில் சாதாரணமாகச் சாப்பிடுவார்கள். பிறருடைய வீட்டுக்கு வந்தால் பெண்களுக்குச் சமிக்ஞை காட்டி நகைப்பார்கள். பார்க்கப்போனால் விஷயம் பிரமாதமாக இராது. சமையலில் சில குற்றங்கள், ருசி பேதங்கள் இருக்கலாம். நமக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அவர்கள் மன மகிழ்ச்சிதான் முக்கியம். அதற்கு ஏற்பப் பேசுவதுதான் சரியாகும். ஒன்றிரண்டு வேளையாவது நாக்கின் ருசிக்கு அடிமையாக ஆகாமல் பண்புடன் நடந்து கொள்ளலாம் அல்லவா? இன்னொருவருடைய வீட்டில் விருந்தாளியாக இருக்க நேரிடுகிறது. 'என் வீட்டில் சாப்பிடுவதுபோல் இல்லை', 'என் வீட்டில் தூக்கம் வருவது போல் வரவில்லை' என்றெல்லாம் பேசி முள்ளின் மேல் இருப்பதுபோல் இருக்கிறார்கள். நாம் வந்திருப்பது அவர்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது. அவர்கள் சொந்த வேலைகளைப் பார்த்துக் கொள்ள அவகாசம் கொடுக்க வேண்டும். நமக்கு உபகாரம் செய்வதே நாள் முழுதும் அவர்கள் வேலையாக இருந்தால் அவர்களுக்கு அலுத்துப்போய்விடும். அவர்களுடைய தினசரி வாழ்க்கையைப் பற்றி ஆராயும் மனப்பான்மையோடு கழுகுக் கண்களுடன் உலாவக் கூடாது. நமக்குத் தெரியாமல் சாமான்கள் வாங்குவார்கள். அதை யெல்லாம் கண்டு கொள்வது அநாகரிகம். முக்கியமாக வீட்டுக்காரர்கள் தம்பதிகளாக இருந்தால் நாமிருக்கும் காரணமாகப் பிரியவிடக் கூடாது. நாம் இன்னும் இரண்டு நாட்கள் தங்கக்கூடாதா என்று அவர்களுக்குத் தோன்றும்படி அநுசரணையுடன் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு அநாவசியக் கர்வத்தை ஒழித்துப் பெருந்தன்மையை வளர்க்க முயற்சி செய்தால் போதுமானது. சுலபம்தான்.

சிலரிடம் இன்னொரு கெட்ட வழக்கமுண்டு. அவர்கள் வீட்டுக்கு யாராகிலும் வந்திருப்பார்கள். அவர்கள் எதிரில் ரகசிய பாஷைகள் பேசுவார்கள். வந்தவர்கள் சில மணி நேரம் நம்முடன் தங்கலாம். அதற்குள் அந்த இரகசியப் பேச்சு அவசியமில்லையே! வேறு எதைப் பற்றியாவது பேசினால் கூடத் தங்களைப் பற்றித்தான் ரகசியமாகப் பேசுகிறார்கள் என்று வந்தவர்கள் வருந்த இடமளிக்குமல்லவா?

தமிழ் நன்றாகப் பேசத் தெரிந்த நம்முடைய உறவினர்கள், சிநேகிதிகள் இவர்களுடன் அநாவசியமாக ஆங்கிலத்தில் பேசுவது உசிதமா? மொழி தெரியாதவர்களிடம் ஆங்கிலம் பேசுவது சரியாகும். ஆங்கிலம் பேசினால்தான் படித்தவள் என்று தெரியுமென்ற கருத்தாக இருக்கலாம். அந்தச் சிறு வழக்கம்கூட மாறினால் அழகாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நடுவில் ஆங்கிலம் தெரியாதவர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒரு மாதிரியாக ஆகிவிடுகிறது.

வடநாட்டுச் சகோதரிகள் கூடியவரை தங்களுக்கிடையே ஆங்கிலம் பேசுவதில்லை. அவர்களுக்கு இருக்கும் தாய்மொழிப் பற்று நம்முடைய தமிழ் நாட்டுச் சகோதரிகளுக்கும் அவசியம் இருக்க வேண்டும்.



எவ்வளவு பதவியைப் பெற்றாலும், செல்வத்தை அடைந்தாலும் கர்வமாகப் பேசுவது ஒரு சில நாட்களுக்குச் சந்தோஷத்தையும் குதூகலத்தையும் அளிக்க முடியும். ஆனால் அது நீடித்த நல்ல பலனைக் கொடுப்பதில்லை. மனிதனுடைய வாழ்க்கை என்றும் ஒன்றுபோல இருப்பதில்லை. இரவும் பகலும் போல் கஷ்டம் சுகம் எல்லோருக்கும் வாழ்க்கையில் மாறிமாறி வருகின்றன. கர்வமாக நடந்து கொண்டவர்களுக்குக் கஷ்ட காலத்தில் மற்றவர்களுடைய அநுதாபம் ஒரு சிறிதும் கிடைப்பதில்லை.

சுஜாதா! பண்பட்ட பழக்க வழக்கங்களை வளர்க்க முயற்சி செய்யத்தான் இதை வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

இப்படிக்கு,
பூமாதேவி

இலக்கியச் செல்வம் (7)

சிதைத்திடாதே

பேராசிரியர்: அ. சீநிவாசராகவன்

கட்டிய மணல் வீட்டின் பக்கத்தில் எப்போதும் இருந்து விளையாட முடியவில்லையே என்று சிறுமியர் வருந்துகிறார்கள். இந்த மணல் வீட்டை எங்கிருந்தோ வரும் காற்று அழித்து விடுகிறதே என்பதும் அவர்கள் கவலை. மணல் வீட்டை, பொருளற்ற அற்பமாக, வெறும் விளையாட்டுச் சாதனமாகச் சிறுமியர் எண்ணுவதில்லை. எப்படி எண்ண முடியும்? விளையாட்டே அவர்கள் வாழ்வாக இருக்கும்போது, 'இது விளையாட்டுத்தானே' என்ற எண்ணம் அவர்களுக்கு எங்கிருந்து வரும்?

நாமும் ஒருவகையிலே இந்தச் சிறுமியரைப் போலத்தான். இந்த உலகத்து வாழ்க்கையில் நாம் தோய்ந்திருக்கிறோம். தோயாமல் என்ன செய்வது? இந்த வாழ்க்கையைத் தவிர வேறு நமக்குத் தெரிந்ததுதான் என்ன? இதுவுங்கூட முழுவதும் தெரிந்தபாடில்லையே! இந்த நிலையில் இந்த வாழ்க்கையை அற்ப மணல் வீடாக எண்ணி, அதை ஒதுக்குவதற்கு நம்மால் முடிவதில்லை. ஆனால், நம்மில் ஒரு சிலர், வாழ்க்கை என்பதை மணல் வீடாகக் கருதுகிறார்கள். மெய் வீட்டை நோக்கிப் புறப்படுகிறார்கள். நெடுந்தூரம் போகவும் போகிறார்கள். ஆனால் அவர்கள் பிரயாணம் எல்லாம் இருந்த இடத்தில் இருந்தே நடைபெறுகிறது. பிரயாணம் செய்வது அவர்கள் உள்ளம் மட்டுமே. உடம்பு இங்கேதான் இருக்கிறது. சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் பதித்த இந்த நீல விதானத்தின் கீழே இந்தப் புழுதிப் படலத்தில் தான் அவர்களும் நிற்கிறார்கள். அவர்களைச் சுற்றி மனித வாழ்க்கையின் ஓயாத சஞ்சலம் சுழல்கிறது. அவர்களுக்கும் அதிலே பங்கு உண்டு. ஒன்றுமில்லாவிட்டாலும், உணவும், உடையும், தண்ணீரும், காற்றும் இந்த மண்ணிலிருந்துதான் அவர்களுக்கு வருகிறது. அதற்கான அளவுக்காவது, அவர்களும் மணல் வீடு கட்டுகிறார்கள். உள்ளம் மட்டும் சத்தியத்தை நாடி, இந்த மணல் வீட்டின் உட்பொருளைத் தேடிச் செல்கிறது. கடைசியில், அந்தச் சத்தியத்தின் அருகே நெருங்குகிறது.

அப்போது, இந்த உலகம் சுழன்று விழத் தலைப்படுகிறது. அவர்களுடைய மணல் வீடு உதிர்ந்து சிதறத் தொடங்குகிறது. மனித வாழ்க்கையின் கடைசி எல்லைக் கோடுகள் மறைகின்றன. மறைய வேண்டியதுதான். ஆனாலும், பேதைஉள்ளம் கேட்கிறதா? 'இறைவா, உன்னைத் தேடியே வந்தேன். நீயே சத்தியம். நான் உன் அடிமைதான். உன்னைத் தவிர வேறொரு பொருளும் எனக்குப் பொருளன்று. ஆனாலும் எவ்வளவு பாடுபட்டு வளர்த்தது இந்த உலக வாழ்க்கை? இதை விட மனமில்லையே. எப்படி விடுவேன்? நான் கட்டிய இச்சிறு மணல் வீட்டை அழித்து விடாதே. உனக்குப் புண்ணியம் உண்டு. அழித்து விட்டால் என்னால் தாங்க முடியாது' என்று மனித உள்ளத்தின் கடைசி மூச்சு பேசுகிறது.

இந்த அனுபவத்தைத் தருகின்ற கவிதையைப் பல இலக்கியங்களிலும் காணலாம். என்றாலும், 'சிற்றில் சிதையேல்,' 'சிறு வீட்டை அழிக்காதே' என்று மணல் வீடு கட்டி விளையாடும் சிறு பெண்கள் பேசுவதுபோல அமைந்த இலக்கிய வழி ஒன்றையே இதற்கென்று தமிழ்க் கவிஞர்கள் அமைத்துவிட்டார்கள்.



ஆண்டாள் என்ற பக்திக் கவிஞர் அருளிய 'நாச்சியார் திருமொழி' என்ற தொகுப்பிலே வரும் ஒன்பது பாடல்கள், தமிழில் முதலில் இந்த வழியை அமைத்துக் காட்டின. இப்பாடல்கள் நம்மைக் கண்ணபிரான் வளர்ந்த நந்த கோகுலத்துக்கு அழைத்துச்


செல்கின்றன. அங்கே ஆயர் சிறுமியர் தெருவில் சிறு வீடு கட்டி விளையாடுகிறார்கள்.

பங்குனி மாதம். ஊரில் காமன் திருவிழா. அவன் வருகிறான் என்று தெருவைக் கோலமிட்டு அலங்கரிக்கிறார்கள். அவனை வரவேற்கும் முறையில், சிறுமியர் மணற்கொட்டகம் அமைத்து விளையாடுகிறார்கள்.

காமன் போதரு காலம் என்று
பங்குனி நாள் கடை பார்த்தோம் ·

[போதரு-வருகின்ற; கடை-வழி; பார்த்தோம்-அலங்கரித்தோம்]

பங்குனி மாதத்தில் மட்டுமா காமன் வருகிறான்? ஆயர்பாடித் தெருவில் மட்டுமா? எங்குந்தான் வருகிறான், எப்பொழுதுந்தான் வருகிறான். இளங்கோவடிகள் என்ற துறவி பேசுவது உங்களுக்கு ஞாபகம் இருக்குமே! காமனைப் பற்றிப் பேசுகிறார். காமனுக்கு மாரன் என்ற பெயர் உண்டு, மன்மதன் என்றும் அழைக்கிறோம். இந்த மாரன் எங்கே ஆட்சி புரிகிறான்? அவன் தலைநகர் எது? 'சொல்கிறேன்' என்கிறார் இளங்கோ அடிகள்: 'நெடியோனாகிய திருமால் கோயில் கொண்டுள்ள வேங்கடம் என்ற குன்றம், அங்கே அரசு வீற்றிருக்கிறான் இந்த மாரன். அங்கிருந்து புறப்பட்டு, இவன் காற்றுக் கூட வேண்டாம் என்று ஒதுங்கி, நெடுந்தூரம் போகிறோம். நீலத் திரைக் கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்கிறாளே குமரி, அந்தத் தென் கடற்கரைக்கே போய் விடுகிறோம். அங்கும் மாரன் கொலு வீற்றிருக்கிறான். இதென்னடா இது? வடக்கெல்லை ஆயிற்று, தெற்கெல்லை ஆயிற்று, தமிழ் நாட்டின் உள்ளே எங்காவது போய் இந்த மாரனிடமிருந்து தப்பலாமா என்று பார்த்தால்,



மதுரையா, உறையூரா, சேரன் தலைநகரான வஞ்சியா, காவிரியும் கடலும் கலந்து ஒலிக்கின்ற புகாரா, எங்கே போனால் என்ன, அங்கே மாரனுடைய ஆட்சி நடைபெறுகிறது.

நெடியோன் குன்றமும் தொடியோள்
பௌவமும்
தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு
மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலி கெழு வஞ்சியும் ஒலி புனல் புகாரும்
அரைச வீற்றிருந்த உரை சால் சிறப்பின்
மன்னன் மாரன்

[நெடியோன்-மகாவிஷ்ணு; தொடியோள்-குமரி; பௌவம்-கடல்; வரம்பு அறுத்த-வரம்புக்கு உட்பட்ட; பீடு ஆர்-பெருமை பொருந்திய; உறந்தை-உறையூர்; கலிகெழு-வலிமை மிகுந்த; புகார்-காவிரிப்பூம் பட்டினம்; அரைச-அரசு.]

எங்கே சென்றாலும் மாரன்தான் அரசு புரிகிறான். மனித குலத்தின் ஆயிரம் ஆயிரம் ஆசைகள் அவனால் விளைகின்றன. அவனால் நிறைவேறி நிறைவேறி, நிறைவேறாமல், புதுப்புது வடிவங்களில் தலை தூக்குகின்றன. அவன் அருளைப் பெற-அதாவது உலக இன்பங்களைப் பெற-நாமும் ஓயாமல் முயல்கிறோம். அவன் வருகிறான் என்று தெருவை அலங்கரித்து மணல் வீடுகள் கட்டுகிறோம். உலகில் என்றும் பங்குனிதான், எங்கும் காமனுடைய ஆட்சிதான், பார்க்குமிடமெல்லாம் இந்த ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் சமைக்கின்ற சிறு வீடுதான்.

இதை எண்ணித்தான் ஞானி கடவுளை நாடினான். பெருவீடு வருகிறபோது, சிறு வீட்டை விட வேண்டியதுதானே? அப்படி விடப் பழகியே, ஞானியால் பேரின்ப வீட்டை நெருங்க முடிகிறது. இவ்வுலக பாசம் முடிவடைந்தது என்றால், உயிர் மோட்சத்தை அடைந்து விடுகிறது.

அற்றது பற்று எனில்
உற்றது வீடு உயிர்

[பற்று-பாசம்; உற்றது-அடைந்தது.]

என்ற நம்மாழ்வார் வாக்கு இதைச் சுருக்கமாகச் சொல்லுகிறது. அப்படி இந்த உலகப் பற்றை விடுவதற்கு, வேறொரு பற்றை—இறைவனிடத்தில் தளராத நம்பிக்கை என்ற பற்றை—விடாமல் பிடித்துக் கொள்ளவும் வேண்டி இருக்கிறது. இதைத் திருவள்ளுவர் அழுத்தமாகக் கூறினார்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

[பற்று அற்றான்-பற்று ஒன்றும் இல்லாத இறைவன்; பற்றுக-பிடித்துக் கொள்; பற்று விடற்கு-உலக பாசத்தையும் உறவையும் விடுவதற்கு.]

ஆனால் இந்த ஆயர்பாடிச் சிறுமியர் சொல்வதைக் கேட்டீர்களா? பரம் பொருளாகிய கண்ணனைப் பெற வேண்டும் என்பதுதான் அவர்களுக்கு இலட்சியம். இப்போது கண்ணனே அவர்களிடம் வருகிறான். உடனே அவர்களுக்குப் பயம். எங்கேயாவது தாங்கள் அமைத்த மணற் குவியலை அவன் சிதைத்து விட்டால்? சொல்லுகிறார்கள்:

'எவ்வளவு பாடுபட்டோம் தெரியுமா? இன்று முழுவதும் ஓயாமல் உழைத்தோம். முதுகு நோவுகிறது. எங்கள் வீட்டை வேண்டுமானால் நன்றாகப் பார். எங்கள் ஆர்வம் அப்போது தணியும். மாட்டாயா? எங்கள் பாவம், உனக்கு எங்களிடத்தில் இரக்கம் இல்லை. ஆனால் இரக்கமற்றவன்தானே நீ. உலகங்களை எல்லாம் உண்டு விட்டு, ஒன்றும் தெரியாத பாலகனைப் போல ஆலிலையின் மேல் கண் வளர்ந்தவன் தானே? உனக்கு இரக்கம் ஏது?'

இன்று முற்றும் முதுகுநோவ இருந்து
இழைத்த இச் சிற்றிலை
நன்று கண்ணுற நோக்கி நாம் கொளும்
ஆர்வந்தன்னைத் தணிகிடாய்
அன்று பாலகனாகி ஆலிலை மேல் துயின்ற
எம் ஆதியாய்,
என்றும் உன்றனுக்கு எங்கள் மேல்
இரக்கம் எழாதது எம் பாவமே.

எல்லையற்ற பெருங் கருணையினால், உலக பந்தத்திலிருந்து நம்மை மீட்க வரும் பரமனைப் பார்த்து, உயிர் இப்படிப் பேசுகிறது. இதற்கு பக்தி இல்லையா? இருக்கிறது. இல்லாவிட்டால் இறைவனை அணுகும் இந்தப் பாக்கியம் கிட்டி இருக்குமா? அவனுடைய பெருமையை எண்ணி எண்ணி, மையல் ஏறி, தீராப் பெருங் காதலில் மயங்கித்தான் கிடக்கிறது. நந்தகோகுலத்துக் கண்ணனாக அவனைக் கண்டு, அவனுடைய சௌந்தர்யத்தில் கரைந்து போகும் நிலையில்தான் இருக்கிறது.

இருந்தாலும், இறைவனுடைய பேரழகிலே கரைந்து போய் விட்டால், இந்த உலகம், இதுவரை நமக்குப் பொருளாய் இருந்த இந்த இன்ப துன்பக் கூடு, இது போய் விடுமே! 'அவ்வளவு பக்குவம் வரவில்லை அப்பா, நாங்கள் சிறு பிள்ளைகள். உன்னை நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. நீ நல்லவனாயிற்றே, அருள்மொழியும் தாமரைக் கண்ணனாயிற்றே, எங்கே, எங்களை விட்டுவிடு. எங்கள் மணல் வீட்டை வந்து—இங்கே நீவந்து—அழிக்க வேண்டுமா? வேண்டாம், வேண்டாம்' என்று ஆயர் சிறுமியர்—அவன் அழகிலே மயங்கி நின்றும் தங்கள் சிற்றிலைப் பிடித்துக் கொண்டு அதை விடுவதற்குக்கலங்கும் உயிர்கள்—பேசுவது இதோ காதில் விழுகிறது:

பெய்யுமா முகில் போல் வண்ணா உன்றன்
பேச்சும் செய்கையும் எங்களை
மையல் ஏற்றி மயக்க உன் முகம் மாய
மந்திரந் தான்கொலோ?
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு உன்னை
நோவ நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய் எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே.

[நொய்யர் - வலிமையற்றவர், அற்பமானவர்; நோவ - நோகும்படியாக; உரைக்கிலோம் - சொல்லவில்லை; செய்ய-சிவந்த]

இப்படிப் பேசுகிறார்களே ஆயர் சிறுமியர், இவர்கள் சிற்றிலைக் கண்ணன் அழித்து விட்டால், இவர்கள் என்ன செய்வார்களாம்? சொல்லுகிறார்கள்: 'என்ன செய்வோம்? எங்களால் என்ன செய்ய முடியும்? உன்னிடத்தில்தான் நாங்கள் மயங்கி நிற்கிறோமே, நாங்கள் எப்படி உன்னிடம் விரோதம் கொள்ள முடியும்? வெள்ளை மணலைத் தெள்ளி எடுத்து, விசித்திர விசித்திரமான சிற்றில், வீதியெங்கும் இழைத்திருக்கிறோம். அதை நீ அழித்தால் எங்கள் நெஞ்சு உடைந்து உருகும். அவ்வளவுதான்; சொல்லி விட்டோம். நீ என்ன செய்தாலும் உன்னை எப்படி எங்களால் கோபிக்க முடியும்?'

வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில்
விசித்திரப்பட வீதிவாய்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
அழித்தியாகிலும் உன்றன் மேல்
உள்ளம் ஓடி உருகல் அல்லால் உரோடம்
ஒன்றும் இலோம் கண்டாய்

[வீதிவாய்-வீதியில்; உரோடம்-கோபம்]

'அப்படித்தான் எங்கள் சிற்றிலை அழித்தால், அதனால் உனக்கு ஏதாவது பயன் உண்டா?' என்றும் கேட்கிறார்கள்.

ஏன் இல்லை? உயிர்களைத் தன்னிடத்தில் முழுவதும் திருப்புவதுதானே அவனுடைய நோக்கம்? அது நிறைவேறுவதற்காகத்தானே அவன் சிற்றிலைச் சிதைக்க வந்தான்? 'சிதைத்திடாதே' என்று இந்த மண்ணுலகப் பிடிப்பு எவ்வளவுதான் கதறினாலும் அவன் கேட்கவா போகிறான்? கேட்காமல் இருப்பதுதானே அவன் கருணை! (தொடரும்)

1-2-57 வெள்ளி முதல் மகத்தான ஆரம்பம்

சென்னை அசோக் & ராஜகுமாரி

தியேட்டர்களில்

தினசரி மூன்று காட்சிகள்: மாலை 3; 6-15; 9-30 மணிக்கு

இன்பமும் மகிழ்ச்சியுமளிக்கும் அற்புதமான கதை; குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள்; இனிமையான சங்கீதம்; உள்ளத்தை உருக்கும் பாடல்கள்



பில்மிஸ்தானின்

ஹம் ஸப் சோர் ஹைன்


(நாம் எல்லோரும் திருடர்கள்)

* * *

நடிகர்கள்: நளினி ஜயவந்த் ★ ஷம்மி கபூர்
ஐ. எஸ். ஜோஹர் ★ மஜ்னு ★ அமிதா & பிரான்

டைரக்ஷன்: I.S. ஜோஹர்: சங்கீதம்: O.P. நய்யார்: பாடல்கள்: மஜ்ரூஹ் சுல்தான்புரி

பாலர் மலர்





இத்தாலி தேசத்தில் உள்ள நேப்பிள் நகரத்தின் மான்டேநூவோ என்ற 460 அடி உயரமுள்ள மலை 1528 செப்டம்பர் மாதம் 28-ம் தேதி ஏற்பட்ட பூகம்பத்தினால் ஒரு ஏரியின் அடியிலிருந்து தோன்றியது.



சிட்டுக்குருவி

சிட்டே சிட்டே ஓடிவா
சிறகடித்துப் பறந்துவா
பட்டுப் போலுன் மேனியைப்
பஞ்சுபோலத் தூக்கிவா

சாலை யோர மரத்திலே
தாவிடக் கொம்பி லிருந்துநீ
காலை நேர வேளையில்
கத்திக் கத்திக் கரைவதேன்?

இரை கிடைக்க வில்லையா?
இரவில் துன்பம் நேர்ந்ததா?
மறை வில்லாமல் சொல்லிடு
மாற்றும் வழியைக் கூறுவேன்!

ராசா வீட்டுத் தோட்டத்தில்
ரோசாப் பூக்கள் இருக்கு [தாம்

கூசாமல் நீ சென்றிடு
கொய்து வந்து [கொடுத்திடு


—ஏ. ந. கணபதி




குட்டிக்கதை



ஒரு குளத்தின் மத்தியில் கொக்கு ஒன்று நீந்திக் கொண்டிருந்த மீன்களை ஒவ்வொன்றாகக் கொத்தி எடுத்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு சமயமும் மீனைத் தண்ணீரிலிருந்து கொத்தி எடுக்கும் போதும் அங்கு ஒளிந்து கொண்டிருந்த காக்கை சட்டென்று பறந்து வந்து கொக்கின் மீனைத் தட்டிச் சென்றது. மீன்கள் பறி போவதைக் குறித்துக் கொஞ்சமேனும் துக்கப்படாமல் திரும்பித் திரும்பி மீன்களைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் கொண்டே இருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு எலி கொக்கிடம், ''ஆமாம்! அந்தப் பொல்லாத காக்கை உங்கள் மீன்களைத் தட்டிக் கொண்டு போகிறது. நீங்கள் கொஞ்சமாவது கலங்கவில்லையே, ஏன்?'' என்றது. அதற்கு அந்தக் கொக்கு, 'பாவம், என்னைப் போல் அந்தக் காக்கையினால் தண்ணீரில் மூழ்கி மீன் பிடித்துப் பசியைத் தீர்த்துக் கொள்ள முடியாது. அதனால்தான் நான் கொஞ்சம் மீன்களை எடுத்துப் போக அதற்கு வசதி செய்து கொடுக்கிறேன். பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் தியாக புத்தி இருந்தால்தான் ஏற்படும்'' என்று சொல்லி முடித்தது.




சித்திரத் தொடர்
2
மல்யுத்தப் போட்டியில் தோல்வி அடைந்த இளவரசன் ஆத்திரமடைந்து தேவிதத்தனைக் கொன்றுவிட முடிவு செய்தான்.
இளவரசனின் இந்தக் கொடூர எண்ணத்தை அறிந்த தேவிதத்தன் பீதியடைந்து தன் தோழர்களுடன் அந்த இடத்தைவிட்டு அகன்றான்.
போதும் வழியில் கங்கைக் கரையில் தேவியைப் போன் அழகான பெண் ஒருத்தியை வெள்ளம் அடித்துச் செல் வதைப் பார்த்தான்.
தோழர்களை விட்டு விட்டுத் தேவிதத்தன் ஓடிப்போய் அவளைக் காப்பாற்றும் பொருட்டுத் தண்ணீரில் பாய்ந்தான்.
அந்தப் பெண்ணின் தலைமயிரைப் பிடித்து இழுக்க முயற்சி செய்தான். அதற்குள் அவள் மூழ்கி விட்டாள். தேவிதத்தன் மேலும் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.
பாதாளத்தில் அந்தப் பெண் எங்கேயோ மறைந்து விட்டாள். ஆனால் அங்கே ஒரு சிவாலயம் தென்பட்டது.
தேவிதத்தன்


① அவன் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்ததில் சலித்துப் போனபின் சிவபிரானை வணங்கி வழிபட்டான்.
அன்று இரவு ஆலயத்தைச் சேர்ந்த அழகிய நந்தவனத்தில் படுத்துத் தூங்கினான். ②
③ காலையில் எழுந்தவுடன் தேவிதத்தன், முந்திய நாள் தண்ணீரில் மூழ்கிப் போன பெண் அழகே உருவாக நின்று சிவபிரானை வணங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.
அந்த அழகு சுந்தரி தனது வீட்டுக்குச் செல்லுகையில் தேவிதத்தனும், அவளைப் பின் தொடர்ந்து சென்றான். ④
அவளுடைய வீடு சொர்க்கலோகம் மாதிரி ஒளியுடன் விளங்கியது. அந்த மமதை கொண்ட பெண்ணும் வேகமாக உள்ளே சென்றாள்.
அலட்சிய பாவத்துடன் தேவிதத்தனைப் பார்க்காதது போல் ஒரு சோபாவில் அமர்ந்தாள். (தொடரும்) ⑤
அழகு சுந்தரி



வியாபாரியின் மகன்

1. எலியும் சிட்டுக் குருவியும்

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் நிலத்தில் அந்த வருஷம் ஏராளமாக நெல் விளைந்தது. விளைந்த நெல்லையெல்லாம் போரடித்துத் தன் களஞ்சியங்களுக்குக் கொண்டு போய் நிரப்பிக் கொண்டான். அப்படியும் நெல் மிஞ்சிக் கிடந்தது. அதையும் வீட்டிலிருக்கிற பானைகளிலும் அண்டாக்களிலும் நிரப்பி முடித்தான். ஒரு மணி நெல்லை வெளியில் விடவில்லை. இப்போது அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

"இனி இந்த உலகில் எந்தவிதக் கவலையுமின்றிச் சுகமாக வாழலாம்!" என்று தன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டு நிம்மதியாக வாழத் தொடங்கினான்.

அதே ஊரில் ஒரு சுண்டெலியும் ஒரு சிட்டுக் குருவியும் மிக நேசமாக வாழ்ந்து வந்தன. இவை யிரண்டும் இந்த விவசாயியின் நெற் களஞ்சியத்துக்கு வரத் தொடங்கின. இவை ஒரு நாளைக்கு ஐந்து தடவையாகிலும் வரும். வந்து களஞ்சியத்திலுள்ள நெல்லை வயிறு முட்டத் தின்று விட்டுப் போகும். ஆம், எலி தன் வளைக்கு ஓடிவிடும்; சிட்டுக் குருவி தன் கூண்டுக்குப் பறந்து விடும். இப்படி மூன்று வருஷங்கள் நடந்தது. இந்த மூன்று வருஷங்களும் அவை ரொம்பவும் நெருங்கிய சிநேகமாக இருந்தன. மூன்றுவது வருஷம் முடியும் தறுவாயில் இவை யிரண்டினிடையிலும் மனஸ்தாபம் ஏற்படலாயிற்று. காரணம், களஞ்சியத்திலிருந்த தானியம் காலியாகத் தொடங்கியதுதான். கொஞ்சம் தான் மீதியிருந்தது. இதைப் பார்த்தது சுண்டெலி. 'மிச்சம் இருக்கிற இந்தச் சொற்ப நெல்லைச் சிட்டுக்குருவிக்கு விட்டு வைக்கக்கூடாது. நாமே திருடிக் கொண்டு போய்விட வேண்டும்' என்று தீர்மானித்தது. ஒரு நாள் இரவு தரையில் துளை போட்டுக் களஞ்சியத்துக்கும் தன் வளைக்கும் வழி செய்து கொண்டது. பிறகு மிச்சம் மீதியிருந்த எல்லா நெல்லையும் தனது வளைக்குக் கொண்டு போய் விட்டது சுண்டெலி.

மறுநாள் காலை, ஆகாரத்துக்குச் சிட்டுக் குருவி நெற்களஞ்சியத்துக்கு வந்தது. பாவம்! அதற்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. பெயருக்கு ஒரு



மணி நெல் கூட இல்லை. என்ன செய்யும் பாவம்? சிட்டுக் குருவி மிகுந்த கோபத்தோடு பறந்து போயிற்று.

"இந்தப் பழிகாரச் சுண்டெலி என்னை ஏமாற்றி விட்டதல்லவா? அதன் அரசனாகிய சிங்கராஜனிடம் பறந்து சென்று நடந்த விஷயத்தையெல்லாம் சொல்லுகிறேன். சிங்கம் சுண்டெலியைத் தண்டிக்கும். சிங்கம் நேர்மையான ராஜா. அது நிச்சயம் நியாயம் வழங்கும்."

இப்படி நினைத்துச் சிட்டுக் குருவி சிங்க ராஜாவிடம் போயிற்று. எலி தன்னை ஏமாற்றிய விவரத்தைக் கூறி நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டது. சிங்கத்துக்குத் தன் பிரஜையாகிய எலியின் மேல் குருவி கோள் சொன்னவுடன் கோபம் வந்துவிட்டது.

"ஓ! அப்படியா? போ, உன் கழுகரசனிடமே போய்ச் சொல்லிக் கொள்! அங்கேயே உன் குறைக்குப் பரிகாரம் தேடிக் கொள்" என்றது சிங்கம்.

இதைக் கேட்டதும் சிட்டுக் குருவி தனது கழுகரசனிடம் பறந்து போயிற்று. எலி தன்னை ஏமாற்றியது. சிங்கராஜா தன்னை அலட்சியப் படுத்தியது எல்லா விவரங்களையும் கூறியது.

இதைக் கேட்டதும் கழுகரசனுக்கு அளவு கடந்த கோபம் வந்து விட்டது. சிங்க ராஜாவைப் போருக்கு வரும்படி ஒரு தூதனையே அனுப்பி விட்டது.

இதைக்கேட்ட சிங்கராஜா போர்க் கர்ஜனை செய்தது. எல்லா மிருகங்களையும் திரட்டியது. நூற்றுக்கணக்காக மிருகங்கள் வந்து சேர்ந்தன. கழுகரசன் குறிப்பிட்ட மைதானத்துக்கு மிருகங்கள் வந்ததும், பறவை இனங்கள் எல்லாம் அப்படியே ஓரே கூட்டமாக மேகம் படிந்தாற்போல் மிருகங்களின்மீது பாய்ந்தன. அவ்வளவு தான்; பெருத்த யுத்தம் மூண்டது. அந்தச் சண்டை மூன்று மணி நேரம் மூன்று நிமிஷம் நடைபெற்றது.

யுத்தத்தில் கழுகரசன்தான் வெற்றி பெற்றது. ஆனால் யுத்தம் பிரமாதமாக நடைபெற்றதால் கழுகுக்கு உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன. தேகத்திலுள்ள ரத்தம் வெளியேறி மிகவும் சோர்ந்து விட்டது. நாம் இனி பழைய பலத்தை எப்பொழுது, எப்படிப் பெறப் போகிறோம் என்ற கவலையோடு பறக்க முடியாமல் பறந்து போய் ஒரு பெரிய மரத்தின் மீது அமர்ந்தது.

இதெல்லாம் வெகு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்தது. அந்த நாளில் அங்கே ஒரு வியாபாரி தன் மனைவியுடன் வசித்து வந்தார். ஆனால் வீட்டில் தவழ்ந்து விளையாடி அவர்களைக் களிப்பூட்டுவதற்கு ஒரு குழந்தை கிடையாது.

ஒரு நாள் காலை அந்த வியாபாரி தன் மனைவியை அழைத்து, "நான் ஒரு கெட்ட சொப்பனம் கண்டேன். ஒரு பெரிய பறவை நம் ஊர் காட்டுக்குப் பறந்து வந்திருப்பது போலவும், அது ஒரு முழு எருதையும் ஒரு தொட்டித் தண்ணீரையும் ஒரே மடக்கில் விழுங்கிவிட்டாற் போலவும் கனவு கண்டேன். இந்தப் பயங்கரப் பறவையை அடித்து விரட்ட முடியாமல் அதற்கு ஆகாரம் போட நாம் இணங்கி விட்டாற் போலவும் கனவு கண்டேன். அப்படியொரு பறவை நிஜமாகவே வந்திருக்கிறதா என்று காட்டுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். சிறிது நேரம் காட்டில் உலாவிவிட்டு வந்தால் கொஞ்சம் உற்சாகமாகக் கூட இருக்கும். அதனால் நான் போய் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

கழுகரசன் படுத்துக் கிடந்த மரத்தினிடம் வந்து சேர்ந்தான். மரத்தின் மேலிருந்த பிரும்மாண்டமான பறவையைப் பார்த்ததும் தனது துப்பாக்கியை எடுத்துக் குறி பார்த்தான்.

கழுகு மனிதக் குரலில் பேசியது. "ஐயா, நீங்கள் ரொம்பவும் நல்லவராயிற்றே! என்னைச் சுடாதீர்கள். என்



ளைக் கொல்லாதீர்கள். என்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று மூன்று வருஷம், மூன்று மாதம், மூன்று நாட்கள் என்னைக் காப்பாற்றுங்கள். நான் என் பழைய பலத்தைப் பெற்றுவிடுவேன். பிறகு உங்களுக்குத் தக்க சன்மானங்களும் பரிசுகளும் வழங்குகிறேன்'' என்றது.

'இந்தக் கழுகு எனக்கு என்ன பிரமாதமாகப் பரிசளித்து விடப் போகிறது?' என்று நினைத்து மீண்டும் அதைத் துப்பாக்கியால் சுடக் குறி பார்த்தான் வியாபாரி. கழுகு மீண்டும் கெஞ்சியது.

இவ்வாறு அந்த வியாபாரி மூன்று முறை சுட எத்தனித்தான். கழுகு மூன்று முறையும் உயிர்ப்பிச்சை அளிக்குமாறு கெஞ்சியது. கடைசியாக வியாபாரி மனம் இளகிக் கழுகை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டில் பெரிய தொட்டி நிறைய ஆகாரத்தை நிரப்பிக் கழுகுக்கு வைத்தான் வியாபாரி. அவ்வளவுதான்; கழுகின் ஒரு வாய்க்குப் போதவில்லை! 'ஐயோ! இப்படி இதற்கு ஆகாரம் போடுவதானால் நான் ஒரு சில நாட்களிலேயே ஆண்டியாகப் போய் விடுவேனே!' என்று கவலைப் பட்டான். அவனுடைய கவலை கழுகுக்குத் தெரிந்து விட்டது. ஐயா! நீர் இப்படிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. அதோ அங்கே ஒரு பெரிய மைதானம் இருக்கிறது. அந்த மைதானத்தில் ஏராளமான மிருகங்கள் இறந்து கிடக்கின்றன. அவற்றின் தோல்களையெல்லாம் பட்டணத்துக் கடைத் தெருவில் விற்றால் ஏராளமாகப் பணம் கிடைக்கும். அந்தப் பணத்தில், நாம் வருஷக் கணக்காகச் சந்தோஷமாகச் சாப்பிட்டுக் கொண்டு வாழலாம்'' என்று கூறியது கழுகு.

இப்படி மூன்று ஆண்டுகள் மூன்று மாதங்கள், மூன்று நாட்கள் கழிந்தன. இப்பொழுது கழுகு, ''என்னை என் பழைய இடத்துக்குக் கொண்டு போ!'' என்றது.

அப்படியே வியாபாரி கழுகைக் காட்டுக்கு வண்டியில் கொண்டு போனான். கழுகு பறக்கத் தொடங்கியது. முன்னை விட மிக உயரத்தில் பறந்தது. பறந்து, திடீர் என்று கீழே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தப் பிரும்மாண்டமான மரத்தைத் தாக்கியது. மரம் முடி முதல் அடி ஆணி வேர் வரை அப்படியே தகர்ந்து பொடிப் பொடியாக விழுந்தது. அது மட்டுமா? அந்தக் காடே நடுங்கியது.

இதைப் பார்த்ததும் கழுகுக்குச் சந்தோஷம் உண்டாகிவிட்டது. வியாபாரியைப் பார்த்து ''ஐயா! என் பழைய தேக வலிமையெல்லாம் பெற்று விட்டேன். இனி நீங்கள் உங்கள் குதிரை வண்டியை விட்டு இறங்கி வந்து என் முதுகின்மேல் ஏறிக் கொள்ளுங்கள். நீங்கள் செய்துள்ள மகத்தான உதவிக்கு உங்களை எங்கள் வீட்டுக்கு அழைத்துப் போய்த் தக்க சன்மானங்களும் பரிசுகளும் அளிக்க வேண்டும். வாருங்கள், என் முதுகின்மீது ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றது.

வியாபாரிக்குச் சன்மானம் என்றவுடன் சபலம் தட்டி விட்டது. கழுகின் முதுகின் மேல் ஏறிக் கொண்டான். கழுகு பறந்து சமுத்திரக் கரையை அடைந்தது. பிறகு கடலின்மேல், வானத்தின் மேலே மேலே மிக உயரத்தில் பறந்தது. கொஞ்சம் உயரம் போனவுடன் கழுகு வியாபாரியைப் பார்த்து, ''ஐயா! கீழே நீலக் கடலைப் பாருங்கள். பெரிதாக இருக்கிறதா?'' என்று கேட்டது.

''இல்லையே! ஒரு வண்டிச் சக்கரம் அளவு தான் இருக்கிறது!'' என்றான் வியாபாரி.

உடனே கழுகு வியாபாரியைத் தன் முதுகை விட்டுத் தள்ளி விட்டது. வியாபாரி 'நாம் தொலைந்தோம்!' என்று தீர்மானித்தான். ஆனால் கடலுக்குள் விழுவதற்குள் கழுகு கீழே பறந்து வந்து வியாபாரியை முதுகில் தாங்கிக் கொண்டு, மேலே பறந்தது.

இந்தத் தடவை முன்னைவிட அதிக உயரத்தில் பறந்து இப்பொழுது வியாபாரியை அழைத்து, ''இப்பொழுது சமுத்திரம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது?'' என்று கேட்டது.

''கோழி முட்டை அளவு இருக்கிறது.''

இந்தத் தடவையும் வியாபாரியைத் தன் முதுகை விட்டுத் தள்ளி, மீண்டும் ஏந்திக் கொண்டு விண்ணிலே பறந்தது. மூன்றாவது தடவை முந்திய இரு தடவைகளையும் விட மிக உயரத்தில் பறந்துவிட்டு, ''இப்பொழுது எப்படியிருக்கிறது கடல்?'' என்று கேட்டது.

''இப்பொழுது மொச்சைப் பருப்பளவு இருக்கிறது!'' என்றான் வியாபாரி.

மூன்றாவது தடவையாக வியாபாரியைத் தன் முதுகை விட்டுக் கீழே தள்ளி, அவன் கடலுக்குள் மூழ்குவதற்கு முந்தித் தன் முதுகின்மீது ஏற்றிக் கொண்டு பின் வருமாறு கேட்டது: ''ஐயா, வியாபாரி! இப்பொழுது சாவு என்றால் எவ்வளவு பயங்கரமானது என்று தெரிந்ததா?''

''ஆகா! நன்றாகத் தெரிந்து விட்டது. ஏன் நான் இறந்து போய் விட்டதாகவே தீர்மானித்து விட்டேன்!'' என்றான்.

''எனக்கும் அப்படித்தான் இருந்தது. நீங்கள் என்னைப் பார்த்துத் துப்பாக்கியைத் தூக்கிக் குறி பார்த்தபோது!'' என்றது கழுகு.

இதற்குப் பிறகு கழுகு எந்தவித வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொள்ளாமல் வியாபாரியைத் தூக்கிக் கொண்டு பறந்து தாமிர உலகத்தை அடைந்தது. (தொடரும்)

மக்ளீன்ஸ் இப்போது பற்களை முன்னைவிட அதி வெண்மையாக சுத்தம் செய்கிறது!

மகத்தான ஓர் செய்தி! மக்ளீன்ஸ் தயாரிப்பில் இப்போது வியக்கத் தக்கதோர் புதிய பொருள் சேர்க்கப்படுவதால் அதை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யும் பொழுது பற்கள் முன்னைவிட அதி வெண்மையாகவும் சுத்தமாகவும் விளங்குவதுடன் நல்ல ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. நீங்களும் மக்ளீன்ஸ் பற்பசையை உபயோகித்து உங்கள் பற்கள் எவ்வளவு வெண்மையாக விளங்குகின்றன என்று கவனியுங்கள்.



மக்ளீனால் வெண்மையாக்கப்பட்ட பற்கள்

ஆரோக்கியமானதுமட்டுமல்லாமல் பற் சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன.

மக்ளீன்ஸ் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யுங்கள். முதலில் குளுமையும் புதுமை மணம் கமழுவதையும் உணர்வீர்கள். பின்பு பற்கள் முன்னைவிட அதி வெண்மையாக சுத்தம் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது.

உங்களுடைய பற்களின்மேல் படர்ந்திருக்கும் வழுவழுப்பான அகத்தத்தில் 'ஃபைலிம்' என்று கூறப்படும் அசுத்தம் கலந்திருக்கிறது. இந்த 'ஃபைலிம்' முறையே சரிவர அகற்றப்படாவிட்டால் அமிலங்கள் பற்களின் இனாமலை அரித்து, பற்கள் சிதைவடைகின்றன. 'ஃபைலிம்'மை அறவே அகற்ற, இதை கரையச் செய்வதுதான் சரியான வழி. மக்ளீன்ஸ் பற்பசை ஒன்றில் மட்டுமே 'ஃபைலிம்'மை கரைக்கக்கூடிய விசேஷ பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது 'ஃபைலிம்'மை மிருதுவாக, அபாயமின்றி, சீக்கிரத்தில் கரைத்து அப்புறப்படுத்துகிறது. இதுவே பற்சிதைவினின்றும் பற்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த மார்க்கம்.


சுத்தமான, வெண்ணிற, ஆரோக்கிய பற்களை அடைய தினந்தோறும் காலையிலும் இரவிலும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யுங்கள்.



மக்ளீன்ஸ் பற்களை அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது.

MTY 43 TAM.

மக்ளீன்ஸ் ரிக்கி சிம் ஷோ—சினிமா உலகத்தில் சமீபத்திய செய்திகளும் சங்கீதமும் சேர்ந்த நிகழ்ச்சியைப் பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ரேடியோ சிலோன் 41 மீட்டர்களில் கேளுங்கள்.

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

64

ஹிம்சையில்லாமல் உயிரைக் காப்பாற்றவே முடியாது. உடலும் உயிரும் கூடியிருப்பதற்கு ஏதாவதொரு ஹிம்சை செய்யாமல் முடியாது. உயிர்கள் எல்லாம் ஒன்றையொன்று ஹிம்சித்தே ஜீவித்து வருகின்றன. சரீரமும் உயிரும் பிரியாமல் நிற்பதற்கு ஹிம்சை இன்றியமையாததாகிறது. ஆகையினால் தான் அஹிம்சையை உபாசிப்பவன் இந்த உடல் பாரத்தை நீக்குவதற்கு ஆசைப்படுகிறான். முக்தி என்பது அதுவே. மறுபடியும் ஜன்மம் எடுத்துச் சரீரபாரம் அடையாமல் இருக்க வேண்டும் என்று கோருகிறான். உயிர் வாழ்க்கை என்பது எப்போதும் ஹிம்சையோடு கலந்தே நிற்கிறது. மறு பிறப்பில்லாமல் முக்தியடைவதே எல்லா சமயங்களின் நோக்கமும்.

[யங் இந்தியா, 4—10—28]

அஹிம்சைக் கொள்கையானது என்னுடைய உயிரேயாகும். அஹிம்சையும் சத்தியமும் இந்த இரண்டு தருமங்கள் எனக்கு இரண்டு சுவாசப் பைகளைப் போலாகும். அவையின்றி நான் உயிர் வைத்திருக்க முடியாது. அப்படியாயினும் அஹிம்சையினுடைய பெருமையையும் கூடவே மனிதனுடைய சிறுமையையும் தெளிவாகக் காண்கிறேன். ஒவ்வொரு விஷயத்திலும் இதைக் காண்கிறேன். வனவாசம் செய்யும் முனிவனும் கூட, களங்கமற்ற கருணை உள்ளம் படைத்த ரிஷியுங்கூட, ஓரளவு ஹிம்சையின்றி ஜீவ யாத்திரை நடத்த முடியாது. சுவாசம் கொள்வதும் விடுவதுமே ஹிம்சையாகும். மனிதனுடைய உடலே ஒரு கசாப்புக் களம். எவ்வளவு உயிர்களை ஜீரணித்து சரீரம் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறது. ஆனபடியால் நாம் இறப்பும் பிறப்பும் வேண்டாம் என்று பிரார்த்தனை செய்கிறோம். உடலைக் கொண்டு அனுபவிக்கும் சுகங்கள் எல்லாம் நிலையற்றவை. உடலினின்று விடுபடுவதே விடுதலையும் ஆனந்தமும். அதுவரையில் ஹிம்சை என்கிற விஷபானத்தைத் தினசரி உட்கொண்டே தீர வேண்டும்.

[யங் இந்தியா 21-10-26]

சரீர யாத்திரை ஹிம்சையில்லாமல் நடத்த முடியாது. இந்த உண்மையை நான் கண்டதனாலேதான் என்னுடைய சரீர நிலையைப் பற்றி வர வர அக்கறை எனக்குக் குறைந்து வருகிறது. மூச்சு விட்டாலுங்கூட எவ்வளவோ உயிர்களை, கண்ணுக்குத் தெரியாத உயிர்களைக் கொலை செய்கிறோம். இது தெரிந்தே மூச்சும் விடுகிறேன். சைவ உணவிலும் ஹிம்சையில்லையா? கறிகாய்களிலும் பழங்களிலும் உயிர் உண்டு என்பதை அறிவேன். ஆயினும் அவற்றை விட்டு விட்டேனா? இல்லை. மருந்துகள் உபயோகித்துக் கொசுக்களைக் கொன்று விட்டுத் தான் படுக்கிறேன். அதுவும் ஹிம்சை தான். ஆசிரமத்தில் கண்ட விஷப் பாம்புகளைக் கொல்லாமல் விடுகிறார்களா? அந்த ஹிம்சையையும் சகித்துத் தான் வருகிறேன். ஆசிரமத்தில் வேலை செய்யும் மாடுகளை அடித்துத்தான் ஓட்டுகிறார்கள். இவ்வகையான எத்தனையோ ஹிம்சைகளுக்கு நான் பொறுப்பாளிதான். அஹிம்சா முறையில் என்னுடைய குறைகளுக்குக் கணக்கே இல்லை. அவற்றை மறைக்கவும் நான் விரும்பவில்லை. ஆனால் இதற்காகக் கொள்கையை முற்றிலும் விட்டுவிட முடியுமா? பூரண அஹிம்சையை நான் கடைப் பிடிக்க முடியவில்லை என்று முற்றிலும் அந்தக் தர்மத்தை விட்டு விட முடியுமா? நான் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதெல்லாம் இவ்வளவே; அஹிம்சா தத்துவத்தின் உண்மையை உணர்ந்து உள்ளம், உரை, செயல் இவற்றில் அந்தக் தர்மத்தைக் கடைப்பிடிக்க முயன்று வருகிறேன் என்பதே. விடாமுயற்சியுடனும் கவனத்துடனும் இந்தத் தருமத்தைக் காப்பாற்ற என்னாலானதைச் செய்து வருகிறேன். இந்த முயற்சி பயனற்றுப் போகவில்லை. ஆயினும் வெற்றி வெகு தூரத்தில் நிற்பதையும் காண்கிறேன்.

[யங் இந்தியா 1—11—28]

மூன்றாவது ஆட்டம்



குருக்ஷேத்திரப் போர் தொடங்குவதற்கு இன்னும் இருபது இருபத்தைந்துநாட்கள்தான் இருந்தன.

பொழுது புலர்ந்து அதிக நேரம் ஆகவில்லை. குளுகுளுவென்று காலைக் காற்று வெகு சுகமாக வீசிக் கொண்டிருந்தது. இளங் கதிரவன் தன் பொன்னிறக் கிரணங்களைப் பரப்பிப் பாரெங்கும் பொன் முலாம் பூசிக் கொண்டிருந்தான்.

யுதிஷ்டிர மகாராஜா தமது கூடாரத்தில் அமர்ந்திருந்தார். அவரது அரியணைக் கருகே நின்ற வண்ணம் சகதேவன் போருக்கென்று சேகரிக்கப்பட்டிருந்த பொருள்களின் விவரமான ஜாபிதாவைப் படித்துக் கொண்டிருந்தான்.

அர்ஜுனன் அப்பொழுது பாஞ்சால வீரர்களின் கூடாரத்திலே நடந்து கொண்டிருந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்தான்.

நகுலன் தனது கட்சிப் படைகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

பீமன் தனக்கென்று பிரத்தியேகமாக நூறு கதைகளுக்கு 'ஆர்டர்' கொடுத்திருந்தான். கெடு தவறாமல் சொன்ன சமயத்தில் அவை வந்து சேர்ந்திருந்தன. அவற்றைப் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு கதையையும் கையில் எடுத்துச் சுழற்றிப் பார்ப்பான். இந்தக் கதை திருதராஷ்டிரருடைய எந்தப் பிள்ளையின் தலையைப் பதம் பார்க்கத் தகுதியுள்ளதாயிருக்கும் என்று ஒவ்வொன்றையும் பற்றி மனத்துக்குள்ளேயே கற்பனை செய்து பார்த்துக் கொள்வான். இப்படிக் கற்பனை செய்து பார்த்துக் கொள்வதில் அவனுக்கு ஒரு அலாதி மகிழ்ச்சி.

வந்திருந்த கதைகளில் தொண்ணூற்று ஒன்பது வைரம் பாய்ந்த தேக்கு மரத்தினால் ஆனவை. ஒன்றே ஒன்று மட்டும் துணியினால் செய்யப்பட்டிருந்தது. அதனால் துரியோதனனது பதினெட்டாவது சகோதரனான விகர்ணனைக் கொல்லுவது என்று பீமன் முடிவு செய்தான். திருதராஷ்டிரரின் குமாரர்களிலே அவன் ஒருவன்தான் சிறிது நாகரிகம் வாய்ந்தவன், உள்ளம் என்று ஒன்று உள்ளவன் என்று சொல்லக் கூடியவனாக இருந்தான். திரௌபதியின் துயில் உரிபடலத்தில் அவன் ஒருவன் தான் ஆட்சேபக் குரல் கொடுத்தவன். எனவேதான் பீமனது உள்ளத்திலே அந்த இரக்கக்கசிவு உண்டாகியிருந்தது.

சகதேவன் படித்துக் கொண்டே போனான்: ''கோதுமை மாவு ஆயிரத்து இருநூறு மணங்கு, அரிசி மாவு ஐம்பத்தெட்டாயிரம் மணங்கு, கடலை மாவு எட்டு லக்ஷம் மணங்கு, கொண்டைக் கடலை ஐம்பது லக்ஷம் மணங்கு...''

யுதிஷ்டிரரால் இந்தப் புள்ளி விவரக் கணக்கைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை. பொறுமை இழந்து விட்டார்.

காலையில் எழுந்ததும் எழுந்திருக்காததுமாக இந்தக் கணக்கைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருக்க வேண்டும் என்றால், யாருக்குத்தான் பொறுமை இருக்கும்? அதைக் கேட்டு அவருக்குக் காதே கொப்புளித்து விட்டது. ஆயினும் அரசர் என்று சொல்லக்கூடிய அவர், அறிந்துகொள்ள



வேண்டும் என்ற ஆவலைக் காட்டாமல், அலட்சியப் படுத்தினார் என்றால், காரியம் என்ன ஆவது? அப்புறம் யாருக்குமே அல்லவா அலட்சியம் கொடுத்து விடும்? அதற்கு அவர் இடங்கொடுத்தால் நன்றாயிருக்குமா? இப்படி அவர் திண்டாடித் தடுமாறிக் கொண்டிருந்த பொழுது, அவருக்குக் கை கொடுத்து உதவுபவனே போல் வாயிற்காப்போன் உள்ளே நுழைந்தான்.

''மன்னர் யுதிஷ்டிரருக்கு வெற்றி இட்டுவதாக! மன்னரைப் பேட்டி காண்பதற்காக ஒரு கூனர் வந்திருக்கிறார். தனிமையில் ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கிறது என்று மட்டுமே கூறுகிறார்!'' என்று விண்ணப்பித்துக் கொண்டான் காவலன்.

பூசை வேளையில் கரடி புகுந்த கதையாகக் காவலன் குறுக்கிட்டது சகதேவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''மன்னர் இப்பொழுது முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார். இன்னொரு சமயம் வந்தால் பார்க்கலாம் என்று சொல்லி இப்பொழுது அவரை அனுப்பி விடு!'' என்று யுதிஷ்டிரரை முந்திக் கொண்டு கூறினான் சகதேவன்.

யுதிஷ்டிரருக்கோ தொல்லை பிடித்த இந்தக் கணக்கு வழக்கிலிருந்து எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்று உள்ளூற எண்ணம். எனவே, அவர் கிடைத்த தருணத்தைக் கைநழுவ விட விரும்பவில்லை. புறப்பட்டுக் கொண்டிருந்த காவலனைத் தடுத்து நிறுத்தி, ''வேண்டாம், வேண்டாம்! அவரைத் தக்க மரியாதையோடு உள்ளே அழைத்து வா!'' என்று எதிர் உத்தரவு போட்டு விட்டார். அதற்குப் பிறகு தமையன் யுதிஷ்டிரரை மீறிச் சகதேவனால் என்ன சொல்ல முடியும்?

சிறிது நேரத்துக்கெல்லாம் நடுத்தர வயதுள்ள மனிதர் ஒருவர் உள்ளே பிரவேசித்தார். கோணல் மாணலான உடல். ஒட்டி உலர்ந்த முகம். தலையில் பெரிய தலைப்பாகை. கழுத்தில் நீல நிறமான ரத்னஹாரம். இரு கைகளையும் கூப்பி அவர் வணங்கினார். ''தர்மராஜாவான யுதிஷ்டிரருக்குச் சர்வ மங்களமும் உண்டாகட்டும்!'' என்று வாழ்த்தினார்.

யுதிஷ்டிரர் அவர் மீது உன்னிப்பாகத் தமது பார்வையைச் செலுத்தி, ''பெரியவரான தாங்கள் யாரோ?'' என்று மிகப் பணிவாகக் கேட்டார்.

''எனது அதிகப்பிரசங்கித்தனத்தை மன்னித்தருள வேண்டும்!'' என்ற பூர்வ பீடிகையுடன் வந்தவர் தொடர்ந்தார்: ''நான் தங்களிடம் தெரிவித்துக் கொள்ள வந்திருக்கும் விஷயங்கள் பரம ரகசியமானவை. அதனால்...''

யுதிஷ்டிரர் அவரது அபிப்பிராயத்தைப் புரிந்து கொண்டு விட்டார். எனவே, மேற்கொண்டு அவர் வாய்மொழியாக அதைத் தெளிவுப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. சகதேவனைத் திரும்பிப் பார்த்து உத்தரவிட்டார்: ''சகதேவா! நீ இப்பொழுது போகலாம். வந்திருக்கும் கடலை மூட்டைகளையெல்லாம் அவிழ்த்துப் பார், பூச்சி நீச்சி வராமல் இருக்கின்றனவா, உளுத்துக் கிளுத்துப் போகாமல் இருக்கின்றனவா என்று?''

சகதேவனுக்கோ கோபம் குமுறிக் கொண்டு வந்தது. வந்திருந்தவரை எரித்து விடுபவனைப்போல அனல்கக்கும் பார்வையோடு பார்த்துக் கொண்டே அறையிலிருந்து வெளியேறினான். வந்தவர் ஒருமுறை நாற்புறமும் தம் பார்வையைச் சுழற்றிப் பார்த்துக் கொண்டார்; 'நாம் தனிமையில்தான் இருக்கிறோம். நம் பேச்சை உற்றுக் கேட்க யாரும் அருகில் இல்லை' என்று ஊர்ஜிதம் செய்து கொண்டார். பிறகு மிகவும் மெதுவான குரலில், ''மகாராஜா! நான் சுபலரது மகன் மத்குனி. சகுனி எனக்கு ஒன்று விட்ட சகோதரனாக வேண்டும். அதாவது நாங்கள் இருவரும் மாற்றாந்தாய்ப் பிள்ளைகள்!'' என்றார்.

''என்ன சொல்கிறீர்கள் தாங்கள்?'' என்று கேட்ட தர்மராஜர் எல்லையற்ற வியப்பில் ஆழ்ந்தார். பிறகு, ''அப்படியா? அப்படியானால் தாங்கள் எனது மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய மாமாவாக ஆகிறீர்கள். அடியேன் தங்களது தாளடி பணிகிறேன். வாருங்கள்! இப்படி இந்த அரியாசனத்தில் வந்து அமருங்கள்!'' என்றார்.

''வேண்டாம், மகாராஜா! தங்களது இத்தகைய மரியாதைக்கு நான் அருகதையற்றவன். என் ஆசனம் கீழேயே தான் இருக்க வேண்டும். அதுதான்



தருமம். நான் விசுவ கர்மாவின் குலத்தைச் சேர்ந்தவன்!'' என்றார் மத்குனி.

''அப்படியானால் தாங்கள் நரித்தோலால் நிர்மாணிக்கப்பட்ட அந்த ஆசனத்தில் அமருங்கள். என்ன நோக்கத்தோடு தாங்கள் இங்கே விஜயம் செய்துள்ளீர்கள் என்பதைக் கருணை கூர்ந்து கூறலாம் அல்லவா? இதோடு ஆச்சரியத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால், இதுகாறும் நான் தங்களைப் பார்த்ததே யில்லை!'' என்றார் தர்மராஜாவான யுதிஷ்டிரர்.

மத்குனி தலையசைத்து, ''தாங்கள் என்னை எப்படிப் பார்த்திருக்க முடியும்? நான்தான் யாரும் அறியாத பாதாளக் குகையில் வாழ்பவனாயிற்றே! அதோடு கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக அயல் நாட்டில் இருந்தேன். கூனனாகப் பிறந்து விட்டமையினால், என்னால் க்ஷத்திரிய தர்மத்தைச் சரிவர அனுஷ்டிக்க முடியவில்லை. எனவே, மந்திர தந்திரங்களில் சித்தி பெற்று என் வாழ்நாளைக் கழித்து வருகிறேன். விசுவகர்மா எனக்கு வரன் கூடக் கொடுத்திருக்கிறார்..மகாராஜா! சொக்கட்டான் ஆடுவதிலே தாங்கள் அசாதாரண மேதை என்று கேள்விப்பட்டேனே!'' என்றார்.



யுதிஷ்டிரர் விரக்தியோடு தலையசைத்து, ''ஜனங்கள் அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்!'' என்று ஒருவிதமாக ஒப்புக் கொண்டார்.

''அத்தகைய மேதையாக இருந்தும் தாங்கள் சகுனியிடம் ஏன் தோற்றுப்போய் விட்டீர்கள், தெரியுமா?'' என்று கேட்டார் மத்குனி.

தர்மராஜரின் புருவங்கள் நெரிந்தன. ''சகுனி தர்மவிரோதமான சூதாட்டம் ஆடி அதன் பலத்தைக் கொண்டு என்னைத் தோற்கடித்து விட்டார். சகுனியின் காய்க்குள் தங்கத் தகடு பொருத்தி யிருக்க வேண்டும் என்பது ஜனங்களின் அபிப்பிராயம். அதன் கனத்தின் காரணமாக, காய் ஒரே மாதிரி உருண்டதாகவும் பெருமளவு எண்ணிக்கை விழுந்ததாகவும் பேசிக் கொள்ளுகிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ, ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்!'' என்றார்.

மத்குனி இடையே குறுக்கிட்டு, ''இந்தப் பேச்சுக்களில் எல்லாம் சாரம் ஒன்றும் இல்லை, மன்னர் மன்னவா! தங்கமோ, பாதரசமோ பதிக்கப்பட்டிருக்கும் காய்களை வைத்துக் கொண்டு விளையாடுபவர்கள் எப்பொழுதுமே வெற்றி பெற்று விடுவதில்லை. இரண்டொரு தடவையாவது அவர்களுக்குத் தோல்வி கட்டாயம் கிட்டியே தீரும். நீங்கள் எத்தனையோ தடவை பந்தயம் வைத்திருக்கிறீர்களே. ஒரு தடவையாவது நீங்கள் வெற்றி பெற்றீர்களா?'' என்று கேட்டார்.


நீண்ட பெருமூச்சு விட்டு யுதிஷ்டிரர் தலைகுனிந்து கொண்டார். ''இல்லை. ஒரு தடவைகூட வெற்றி பெறவில்லை. ஆனால்...ஆனால்...இனி அந்தப் பழைய குப்பைகளைக் கிளறி என்ன பயன்? போருக்கு இன்னும் சில நாட்களே பாக்கி யிருக்கின்றன. எனக்குச் சொக்கட்டான் ஆடப் பொழுதும் இல்லை. பொழுது இருந்தாலும் அந்த ஆட்டத்தில் சகுனியை வெற்றி கொள்ள என்னால் ஆகாது. அப்படி யிருக்கும் பொழுது....'' என்றார்.

''நம்பிக்கை இழக்காதீர்கள், பாண்டவர்களில் முதல்வரே!'' என்று கூறிய மத்குனி மிகவும் அமைதியான குரலில் சொல்லலானார்:

''நான் இத்தனை நேரம் பீடிகை மட்டுமே போட்டேன். உண்மையான ரகசியத்தைத் தங்களிடம் கூறவில்லை. தயை கூர்ந்து கவனமாகக் கேளுங்கள். சகுனிக்குக் காய் தயாரித்துக் கொடுத்தவன் நான் தான். அவரது காய்க்குள்ளே மந்திர சித்தி வாய்ந்த யந்திரம் இருக்கிறது. அதனால் தான் அவர் வைத்த பந்தயம் எதுவுமே சோடை போகவில்லை. எனது இந்த உதவிக்குப் பிரதியாக அவர் என்ன வாக்களித்திருந்தார், தெரியுமா? பாண்டவர்களாகிய நீங்கள் ஐந்து பேரும் நாடு கடத்தப்பட்டுக் காடு சென்று விடுவீர்கள். துரியோதனனிடம் சொல்லி உனக்கு இந்திரப்பிரஸ்தத்தை வாங்கித் தந்து விடுகிறேன் என்று சொல்லி யிருந்தார். நானும் முழுசாக அவரை நம்பி விட்டேன். யந்திரத்தின்



எங்கள் புதிய தயாரிப்பு
உகந்த முறையில் உன்னத சுகந்தம்
TSR
கோகுல் மாலா பத்திகள்
கோகுல மாலா பத்தி TSR & Co GOKUL MALA BATHIS
டி.எஸ்.ஆர் & கம்பெனி, கும்பகோணம்.
சென்னை நகருக்கு டிஸ்ட்ரிபுட்டர்கள்: ... 18, ராயப்பேட்டை ஹைரோடு ★ கோயமுத்தூர்
... (ஸ்தாபிதம் 1932) ... தெரு, கோயமுத்தூர்
மதுரை ஏஜண்டு: ... 4, ... தெரு, மதுரை




எல்லா விளையாட்டுகளுக்கும்
தெம்புடன் இருங்கள்
அடிபட்ட இடங்கள் காயங்கள், சுளுக்குகள், தலைவலிகள், மறத்துப் போதல் முதலியவற்றின் சிகிச்சைக்கும், மற்றும் எவ்வித மான ஒத்தடத்திற்கும் உகந்தது.
PHILIPS
பிலிப்ஸ்
இன்பிராபில்
எல்லா பிலிப்ஸ் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
பிலிப்ஸின் விற்பனையும் சேவையும் கை கோர்த்து ஒருங்கே செல்லுகின்றன
ரூ 55 -ஸிகரம்
(உள்ளூர் வரிகள் தனி)
PSPH 210

சுலேகா

[illegible]

பேனாக்கள்

திருப்திகரமான சேவைக்கு



Sole Distributors :

PENMAN'S INDUSTRIAL SERVICES

KANDIVLI, BOMBAY (S. D.)

ஜல தோஷத்தையும் சீதளத்தையும் நிறுத்த

பெப்ஸ்



உபயோகியுங்கள்

ஜலதோஷம், சீதளம், இருமல், தொண்டைப் புண், இன்ப்ளுயன்ஸா, ப்ராங்கைடிஸ் இவை ஏற்படும் ஆரம்பத்திலேயே பெப்ஸ் உட்கொள்ளுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும், மருந்து சத்துகள். ஈரல், சுவாசப்பை இவற்றுள் ஊடுருவிச் சென்று, தீங்கிழைக்கும் கிருமிகளை உடனே நாசம் செய்கின்றன. ரணங்களுக்கு நிவாரணமளிப்பதுடன், எரிச்சலை சமனப்படுத்துகிறது. டாக்டர்கள் பெப்ஸை சிபாரிசு செய்கின்றனர். குழந்தைகளும், வயோதிகர்களும் உபயோகிக்கலாம், தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதிலில்லை.

PEPS



பெப்ஸ் தொண்டை மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-41-TAM

ஸோல் ஏஜண்டுகள் :

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக்கன் தெரு

சென்னை - 3

சைபால்

CIBOL

வெட்டுக்காயம், சொறி சிரங்கு, வேனல் கட்டி தீப்பட்ட புண், முகப்பரு கரப்பான், சேத்துப் புண் முதலிய வியாதிகளைப் போக்குவதில் கைகண்ட களிம்பு

★

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி

மதுரை

களவு-நெளிவுகளைத் தெரிந்து கொண்ட பின். தீய நோக்கம் படைத்த சகுனி என்னை மோசம் செய்து விட்டார்; நன்றாகக் குழைத்து நாமம் போட்டு விட்டார். நீங்கள் எல்லோரும் காட்டுக்குப் போனபின், நான் துரியோதனிடம் சென்று சகுனி எனக்கு வாக்களித்திருந்த விஷயத்தைச் சொன்னேன். 'எனக்கு ஒன்றும் தெரியாது. என் மாமாவையே கேட்டுக் கொள்' என்று கூறிவிட்டான். சகுனியிடம் போனேன். 'நான் இதுவிஷயமாக ஒன்றும் செய்வதற்கில்லை. நீ துரியோதனனையேபார்!' என்று கையை விரித்து விட்டார். பொத்தல் பூசணிக்காய் கதையாக நான் இரண்டு பேருக்கும் இடையே சிக்கிக் கொண்டு அவஸ்தைப் பட்டது தான் மிச்சம். அதோடு விட்டிருந்தாலாவது தேவலையே! கடைசியில் அந்த இரண்டு பாவிகளுமாகச் சேர்ந்து ஒரு சதித் திட்டம் வகுத்து என்னை வால்விகத் தீவிலுள்ள இருட்டு அறையில் அடைத்து விட்டார்கள். பதின்மூன்று வருஷங்கள் அதில் அடைந்து கிடந்தேன். கடவுள் புண்ணியத்திலே இப்பொழுது எப்படியோ தப்பி ஓடி வந்திருக்கிறேன். தாங்கள்தான் அடைக்கலம் அளித்து என்னைக் காத்தருள வேண்டும்!''



மத்குனியின் இந்தக் கதையைக் கேட்கக் கேட்க யுதிஷ்டிரரின் முகபாவம் கடுமையாக மாறியது. கம்பீரமான குரலில், ''ஹூம். இப்பொழுது என்னைச் சொக்கட்டான் காயாக ஆக்கித் தாங்கள் ராஜ்யத்தை அடைய விரும்புகிறீர்கள். அப்படித்தானே?'' என்று கேட்டார்.

''தர்மபுத்திரரே! எனது முந்திய குற்றங்களை மன்னித்து விடுங்கள். இப்பொழுது நான்—தங்கள் நண்பன். குள்ளன் சந்திரனைப் பிடிக்க முயற்சிப்பது போல், நான்-சக்தி ஏதும் அற்ற நான்-இந்திரப் பிரஸ்தத்தை அடைய ஆசை கொண்டேன்; முயற்சியும் செய்தேன். அதன் பலனை அநுபவித்தும் விட்டேன். தாங்கள் என்மேல் கோபித்துக் கொள்ளாதீர்கள். என்னை நம்புங்கள். இத்தடவை ஆடும் சொக்கட்டான் ஆட்டத்தில் தாங்கள் கட்டாயம் வெற்றி பெறுவீர்கள். சகுனியைச் சாவின் கையில் ஒப்படைத்துவிட்டு, எனக்குக் காந்தார ராஜ்யத்தை அளியுங்கள். அதுவே எனக்குப் போதுமானது!'' என்றார் மத்குனி.

யுதிஷ்டிரரின் முகத்திலே தாண்டவமாடிய கடுமை சிறிதும் குறையவில்லை. ''ஏன்? நீங்கள் சகுனிக்குச் செய்து கொடுத்த காய் என்னை ஒழித்துக் கட்டுவதற்குக் காரணமாயிருந்தது என்பதற்காகவா?'' என்று கேட்டார்.

''மன்னிக்க வேண்டும், மகாராஜா!'' என்று ஆரம்பித்த மத்குனியின் குரலில் அச்சம் தொனித்தது. ''கடந்துபோன விஷயங்களை மறந்து விடுங்கள்! கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன். நான் இப்பொழுது உங்கள் நலனுக்கான விஷயத்தைத்தான் பேசுகிறேன். திருதராஷ்டிரரின் உத்தரவு பெற்றுச் சஞ்சயர் தங்களைக் காண இப்பொழுதே வரப் போகிறார் என்னும் நம்பகமான செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. துரியோதனன் சகுனி இருவரது ஆலோசனையின் பேரில் திருதராஷ்டிரர் மறுபடியும் தங்களைச் சொக்கட்டான் ஆட அழைக்கப் போகிறார். நான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். கிடைக்கப் போகும் இந்தப் பொன்னான தருணத்தை எந்த விதத்திலும் கை நழுவவிடாதீர்கள்!'' என்றார்.

தர்மராஜர் ஏதோ சொல்ல வாய் எடுப்பதற்கு முன்பாகவே, வெளியே ரதத்தின் சக்கரங்கள் எழுப்பும் கர கர வென்ற தொனி கேட்டது.

மத்குனி துணுக்குற்றார். ''மகாராஜா! சஞ்சயர் வந்து விட்டார்! அவர்கள் அழைப்பை மறுத்துவிடாதீர்கள். மறுபடியும் வேண்டிக் கொள்கிறேன். சஞ்சயர் ஏதாவது கேட்டால், யோசித்துப் பதில் அனுப்புவதாகச் சொல்லுங்கள்! சஞ்சயர் போன பிறகு, நான் எல்லாவற்றையும் விவரமாகத் தங்களுக்கு விளக்குகிறேன். அதுவரை பக்கத்து அறையில் நான் ஒளிந்து கொள்கிறேன். மகாராஜாவின் கருணை வேண்டும்!'' என்று கூறிவிட்டு அவசரம் அவசரமாகப் பக்கத்து அறைக்குள் நுழைந்தார். (அடுத்த இதழில் முடியும்)

அசகாய சூரர்கள்

விசுவாமித்ரா

நாங்கள் குடியிருந்தது சேலத்தை அடுத்த அழகாபுரம் என்னும் சிறிய கிராமம். பெரும்பாலும் அந்தக் கிராமத்தில் கூரை வேய்ந்த வீடுகள் தான். கிராமத்தின் தெற்கிலும், மேற்கிலும் பெரிய சாலைகள். பகலிலேயே இருபுறமும் வளர்ந்திருந்த ஆல மரங்களால் இருள் மூடித்தோன்றும். வடக்கிலும் கிழக்கிலும் வயற் காடுகள்.

எங்கள் பக்கத்துக் குடிசையில், ஜில்லா கலெக்டர் ஆபீசில், ஸப் மாஜிஸ்திரேட் வேலையை எட்டிப் பார்க்கும் ஒரு உயர்தரக் குமாஸ்தா இருந்தார். அவர் பெயர் ஆத்மநாதன். மேல் உத்தியோகத்திலிருந்த முரட்டுத் துரைமார்களுடன் பழகிப் பழகி, அவர் மற்றவரை மறுத்துப் பேசுவதையே மறந்து விட்டார். எவருடனும் ஒத்துப் போவார். எதற்கும் தலையாட்டி விடுவார். மற்றவர் சிரித்தால் அவர் சிரிப்பார். தூங்கும் வேளையைத் தவிர மற்றெல்லா வேளைகளிலும் ஆபீஸ் காகிதங்களைப் பார்ப்பதுதான் அவர் வேலை. அவர் வீட்டுக்கு வருவதும், போவதும் யாருக்குமே தெரியாது.

அடுத்த குடிசையில் இருந்தவர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர். பெயர் கோபால அவதானி. முலகி நாட்டு வகுப்பைச் சேர்ந்த ஆந்திரர். வயது முப்பத்தைந்து இருக்கும். காலில் போட்டிருக்கும் செருப்பும், தலையில் அணிந்திருக்கும் தலைப்பாகையும் சேர்ந்து அவரை ஐந்தடி உயரமாகக் காட்டும். கழுத்து ரச ஸயச்செம்பு. சிவந்த மேனி. நெற்றியில் வெண்ணீறு; அதன் நடுவில் ஒரு குங்குமப் பொட்டு. தமிழ் மீது ''கரைகாணாக் காதல்'' கொண்டவர். 'தமிழிலோ தேன் உண்மை' என்ற முறையில் அவரது பேச்சு இருந்தாலும் தமிழுக்காக அவரைப் போல் போர் புரிபவரை வேறு எங்கும் காணமுடியாது.

எங்கள் வீட்டுத் தர்மராஜனுக்கும், பண்டிதருக்கும் ஒருநாள் வாக்குவாதம். தர்மராஜன், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர்; சைவாசி. வெறும் வாயை மெல்லுபவருக்கு அவல் கிடைத்தது போல், அவருக்குப் பண்டிதர் கிடைத்திருந்தார்.



''ஓய், அவதானி, உம்மைப் படைத்தது யார், ஐயா?''

''என்னைப் படைத்தது பிரம்மதேவன்.''

''பிரம்மன் பேசினது தமிழா, சமஸ் கிருதமா?''

இவ்விடத்தில் அவதானிக்குச் சிறிது சந்தேகம். ஆனாலும் அவர் அதை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

''சிவனே வந்து தமிழைச் சீர் செய்திருக்கிறார் என்றால், பின் பிரம்மாவாவது?''

''சிவன் இருப்பது இமயமலை, அவர் எங்கே ஐயா வந்தார் தெற்கே?''

''முத்தமிழ் செல்வம் திகழ்கின்ற தென்னாட்டில், தமிழைப் பழிப்பது, அன்னமிடும் அன்னையை அவதூறு ஆற்றுவதற்கொப்பாகும்.''



''ஏன், பண்டிதரே! சுவாஸம் போனாலும், பிராஸம் போகவே போகாது போலிருக்கிறதே உமக்கு!''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் தறுவாயில், மாலை வெய்யில் மஞ்சளாக மாறித்தன் பொன் மேனியை மேற்கே சிறிது மிச்சம் வைத்து விட்டு மறைந்து கொண்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஆகாயம் சாம்பல் பூசிக்கொண்டு மங்கி நின்றது. இருளுடன் ஆத்மநாதனும் வீடடைந்தார். உள்ளே சென்று உத்தியோக உடுப்பை உதறி விட்டு, வெளியே வந்து பண்டிதருடன் கலந்து கொண்டார். மூன்று பேர்களும் சாலையில் நடக்கலாயினர்.

அவர்கள் நடந்து கொண்டிருந்தது, சேலத்திலிருந்து சூரமங்கலம் போகும் பெரிய ரஸ்தா. வலது பக்கத்தில் சுமார் ஒரு மைல் தூரத்தில் சிறிய மலை ஒன்று தெரிந்தது. வடக்கே வெகு தூரத்துக்குப் பின், சேர்வராயன் மலையின் அடிவாரம். சேர்வராயன் மலை மீது ஏற்காடு என்ற சிறிய ஊர் இருக்கிறது. நிலத்துக்கு மேல் நாலாயிரம் அடி உயரத்தில் இருப்பதால் ஏற்காடு எப்பொழுதும் குளுமையாக இருக்கும்.

பண்டிதரும், ஆத்மநாதனும், தர்மராஜனும் நடந்து சென்று கொண்டிருந்த சாலைக்கு வடகிழக்குத் திசையிலிருந்து, ஏற்காட்டின் விளக்குகள், மின்மினிப் பூச்சிகள் போல் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. இது அவர்கள் தினந்தோறும் காணும் தோற்றம் தான். ஆனால் அன்று சிறிய மலையிலும் ஒரு வெளிச்சம் தெரிந்தது. அதை முதலில் கவனித்தவர் பண்டிதர்தான். ஏதோ பேசிக் கொண்டே நடந்து கொண்டிருந்தவர் சட்டென்று நின்றார். பிறகு தர்மராஜனையும்,

ஆத்மநாதனையும் தம் அருகில் அழைத்து ஒரு விரலால் சிறு மலையின் உச்சியைச் சுட்டிக் காட்டி, ''பாருங்கள்'' என்றார். இருவரும் மலையை நோக்கினர். மலையின் மேல் ஒரு சிறியவெளிச்சம் தெரிந்தது. சிறிது தெரிவதும், சிறிது மறைவதுமாக இருந்தது. மூவரும் கூர்ந்து கவனித்தார்கள். ஒவ்வொருவர் மனத்திலும், ஒவ்வொரு எண்ணம் எழுந்தது. ஆத்மநாதன் மெதுவாகத் தம்முடைய எண்ணத்தைத் தெரிவித்தார்.



'யாரோ ஒருவர் விளக்கை வைத்துக் கொண்டு சைகை காட்டுவது போல் இல்லை?'' என்று கேட்டார். பிறகு தர்மராஜனைப் பார்த்து, ''உமக்கென்ன தோன்றுகிறது. சொல்லுங்கள்'' என்றார். தர்மராஜனுக்கு ஒருபுறம் அவர் சொல்லுவது சரியென்று தோன்றியது. மற்றொருபுறம் வைத்தியக் காரப் பட்டம் பெற்று விடுவோமா என்று பயமாகவும் இருந்தது. அவர் பண்டிதரைப் பார்த்து, ''நீங்கள் சொல்லுங்கள்!'' என்றார்.

பண்டிதர் மூக்கைத் திருப்பவும் செருத்திப் பார்த்தார். 'எனக்கும் ஐயமாகத் தான் இருக்கிறது. ஆனால் மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய். இல்லாததை உருவாக்கி மிகையாகப் பெருக்குவது பேதைமை'' என்று கூறினார்.

தர்மராஜனுக்குச் சிறிது கோபம் வந்தது. ''செந்தமிழ் ஒரு பக்கம் இருக்கட்டும். என்றுமில்லாமல் மலைமேல் இன்று ஏன் விளக்கு வந்தது? அதற்குக் காரணம் சொல்லும்'' என்று அதட்டுப்போல் கேட்டார்.

''எனக்கு என்னமோ, விளக்கை வைத்துக் கொண்டு எங்காவது இருக்கும் எதிரிகளுக்கு யாரோ சைகைச் செய்தி அனுப்புகிறார்களோ என்று சந்தேகமாக இருக்கிறது'' என்றார் ஆத்மநாதன்.

''ஏன் சந்தேகம்? யுத்தகாலத்தில் இதெல்லாம் நடக்கக்கூடியதுதானே?''

அது உலக மகா யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலம். எனவே, மூவருமே அப்படித்தான் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பினர்.

பண்டிதருக்குச் சந்தர்ப்பம் நன்றாக வாய்த்தது. ''பெரும்போர் நடைபெறும் பொழுது பெருதவி செய்வதே மக்களுக்கு மகிமை. அணிலும் மணலைக் கொடுத்த தென்றுரை இது. கலிங்கத்துப் பரணியிலே ஜயங்கொண்டார் இதைப் பற்றிச் சொல்லுகையில்..'' என்று ஆரம்பித்து விட்டார்.

''ஐயா, பண்டிதரே! பரணி கார்த்திகை எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்வோம். இப்பொழுது என்ன செய்ய வேண்டும். அதை முதலில் கவனிப்போம்'' என்றார் தர்மராஜன்.

'இப்படிச் சத்தம் போட்டே மகிழ்ச்சி கொள்ளுகிறீர்களே தவிர, யோசனை செய்ய மாட்டேன் என்கிறீர்களே! பத்துப் பன்னிரண்டு பேராகப் போகலாம். ஆனால் ஆசாமி சத்தடியைக் கேட்டு ஓடிவிடமாட்டானா? அதோடு அவனிடம் துப்பாக்கி கிப்பாக்கி ஏதாவது இருந்தால் நம் கதி என்ன ஆவது?''

பண்டிதர் இதை முழுவதும் கேட்கவில்லை. அவர் சோழனுக்கும், பாண்டியனுக்கும், நடந்த போரில் உலாவிக் கொண்டிருந்தார். ஆனால் ஆத்மநாதனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. சைகை செய்பவன் எதிரியின் ஒற்றனாகத்தான் இருக்க வேண்டும். எதிர்காட்டிலிருக்கும் எதிரிகளுக்கு ஏதோ செய்தி அனுப்புகிறான். அவனைப் பிடித்தால், அரசாங்கத்தார் இன்னமாக நம்மை மேல் உத்தியோகத்தில் அமர்த்தி விடுவார்கள் என்று எண்ணமிட்டார். எனவே அநுகூலமான நிலையைக் கை நழுவவிட விரும்பாமல், ''நம்மோடு இன்னும் இரண்டு பேரை அழைத்துக் கொள்வோம். அதிகம் தேவையில்லை. ஒற்றர்கள் கூட்டமாக வருவதில்லை. தனியாகவேதான் வருவார்கள். புத்திரக் கவுண்டனையும் அவன் மகனையும் அழைத்துக் கொள்வோம்!'' என்றார்.

ஆத்மநாதன் சொன்னது சரியென்று தர்மராஜனுக்குப் பட்டது. மலைமீது ஏறுவதற்கு ஒரு ஒற்றையடிப் பாதைதான் இருந்தது. அவருக்கோ, பண்டிதருக்கோ, ஆத்மநாதனுக்கோ அந்தப் பாதை நன்றாகத் தெரியாது. அவர்கள் போகும் வேலையோ மிகவும் ரகசியமானது. விளக்கை எடுத்துக்கொண்டு போக முடியாது. புத்திரக் கவுண்டனும், அவன் மகனும் பாதை தெரிந்தவர்கள். தர்மராஜன் நேரே அவர்களிடம் சென்றார். புத்திரக் கவுண்டனிடம், ''கவுண்டரே!



''என்னங்க!, பாக்கர ஐயா! மாட்டுப் பொங்கலுக்கு உங்கள் மாட்டுக்குச் சலங்கை கட்ட வேணும்னு வாங்கிக் கொண்டு போய்த் திரும்பித் தரவே இல்லையே! என் பெண் தாட்டியத்துக்குச் சலங்கை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறாள்!''

அவசரமாக மலை ஏறவேண்டும், கயிறும் அரிவாளும் எடுத்து வாருங்கள், உங்கள் மகனையும் கூட அழைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறினார்.

புத்திரக் கவுண்டனுக்கோ அப்பொழுது வேலை ஒன்றும் இல்லை. எனவே மறு பேச்சுப் பேசாமல் தன் மகன் ஏழுமலையை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

ஐவரும் மெதுவாகக் கிளம்பினார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் வெவ்வேறு எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. ஆத்மநாதன் ஆத்தூர் டெப்-மாஜிஸ்திரேட் வேலைக்கு ஒரு குறுக்கு வழி கிடைத்து விட்டதாகத் தீர்மானித்துக் கொண்டார்.

பண்டிதரோ எதுகை, மோனை வைத்துக் கவிகள் படைப்பதும், அழிப்பதுமாக இருந்தார். மலை என்று தொடங்கினார். தலை, கொலை என்று உடனே கற்பனைகள் எழுந்தன. 'சீ,சீ, என்ன அபசகுனம்!' என்று சற்று உரக்கவே கூறித் தலையை ஆட்டிக் கொண்டு செய்யுளைத் தள்ளி விட்டார்.

அதைக் கவனித்த ஏழுமலைக்குப் பண்டிதர் பயப்படுகிறார் போல் தோன்றியது. ''நீங்க சும்மா நடவுங்க, ஐயா! புலி வந்தால்கூட அடிச்சுப் போட்டிடுவேன்!'' என்று தேற்றினான் அவன்.

தர்மராஜனுக்கோ எதிரி ஒற்றனை எப்படிப் பிடிப்பது என்று யோசனை. பண்டிதரையும் ஆத்மநாதனையும் காவலுக்கென்று தள்ளி நிறுத்திவிட வேண்டும். ஆத்மநாதன் பயந்தவர். பண்டிதர் ஒற்றனைப் பிடித்தாலும் பிடிப்பார்; பாட்டைப் படித்தாலும் படிப்பார். நம்ப முடியாது. கடைசியில் தாமும் புத்திரக் கவுண்டனும் ஏழுமலையும்தான் காரியத்தை முடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார். முதலில் புத்திரக் கவுண்டன் பின்னாலிருந்து தாவி ஆளை அமுக்கிவிட வேண்டும். உடனே அவரும் ஏழுமலையும் கயிற்றினால் ஒற்றனைக் கட்டி விட வேண்டும். இதுதான் அவர் திட்டம்.

இப்படியாக இவர்கள் மெல்ல மெல்ல மலையேறிச் செல்லும் பொழுது மலை மேலிருந்த விளக்கு இவர்களுக்குத் தெரிவதும் மறைவதுமாக இருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் மலை உச்சியின் ஒரு பக்கத்தை அடைந்து விட்டார்கள். அனைவரையும் நிற்கும்படி தர்மராஜன் எச்சரிக்கை செய்தார்.


அப்பொழுது ஏதோ ஒரு குரல் கேட்டது. தங்களுக்குத் தெரியாத மொழியில் ஒருவன் தானாகப் பேசிக் கொள்வது அவர்கள் காதில் விழுந்தது. தர்மராஜன் புத்திரக்கவுண்டனைத் தம் அருகில் அழைத்து, ''இந்த ஒற்றன் பலே கைகாரன். நீ சரேலென்று பாய்ந்து பிடித்துக் கொள். நானும் ஏழுமலையும் அவனைக் கயிற்றினால் கட்டி விடுகிறோம்'' என்றார்.

புத்திரக் கவுண்டனும், ஏழுமலையும் சரி என்று தலையை அசைத்தார்கள். பண்டிதரையும் ஆத்மநாதனையும் பின்தொடரச் சொல்லி விட்டு, மூவரும் முன் சென்றனர். சிறிது நேரத்துக்கெல்லாம் உச்சியின் மேல் பாகத்தை அடைந்தார்கள். எதிரே ஒரு பெரிய மரம் தெரிந்தது. விளக்கு நன்றாகத் தெரியவில்லை. ஆனால் மரத்தின் அடியில் ஒரு மனிதன் இருந்தான். அரை வேஷ்டி மட்டும் கட்டிக் கொண்டிருந்தான். உட்கார்ந்து கையினால் ஏதோ செய்து கொண்டிருந்தான். தர்மராஜன் புத்திரக்கவுண்டனிடமிருந்து கயிற்றை வாங்கிக் கொண்டார். ஒரு நுனியைத் தம் கையில் பிடித்துக் கொண்டு, மற்றொரு நுனியை ஏழுமலையிடம் கொடுத்தார். முன்னால் புத்திரக் கவுண்டன் போகப் பின்னால் இவ்விருவரும் தயாராகக் கயிற்றுடன் சென்றார்கள். மரத்துக்குப் பின்னிருந்து புத்திரக் கவுண்டன் புலி போல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அங்கு உட்கார்ந்திருந்த உருவத்தின் மீது விழுந்தான். 'ஐயோ!' என்று கூக்குரல் கேட்டது. தர்மராஜனும் ஏழுமலையும் கயிற்றுடன் ஓடினார்கள். ''வெற்றி, வெற்றி!'' என்று உரக்கக் கூவிக் கொண்டு பண்டிதரும் பின் தொடர்ந்தார்.


அரசமரத்தின் அடியில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. எதிரே கல்லினால் அமைத்த ஒரு அம்மன் சிலை இருந்தது. சிலையின் முன் ஒருவர் வீற்றிருந்தார். குங்குமம் வைத்த நெற்றியுடன் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார். ''இவர் நம் குரமங்கலத்துப் பூசாரிங்க. மாசம் ஒரு நாள் வந்து இங்கே பூசைசெய்வாரே, தெரியாதுங்களா?'' என்றான் அவரைப் பிடித்துவிட்ட புத்திரக் கவுண்டன்.

பண்டிதருடைய பாட்டுக்கள் பறந்தோட, ஆத்மநாதனின் ஆனந்தம் அழிந்து போக, தர்மராஜனுடைய வீரம் வீணாக ஒருவரை ஒருவர் நிராசையுடன் நோக்கினர்.





B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1957 பிப்ரவரி 10	1957 பிப்ரவரி 11

பிரயாணத்துக்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு "பங்க்" வசதியுள்ள டிக்கட்டுகளையும், "பர்த் வசதியற்ற டிக்கட்டுகளையும், "சாப்பாட்டுடனோ" அல்லது "சாப்பாடின்றியோ" எங்கள் கம்பெனியின் ஏஜெண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

'ரஜுலா' கப்பல் சமீபத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. பங்க் வசதி பெற்றுள்ள பிரயாணிகளும் பர்த் வசதியற்ற பிரயாணிகளும் இப்பொழுது நிறைய விளக்கு வசதிகளையும், அதிகப்படியான பங்காக்களையும், புதுக் காற்று புளோயர்களையும், ஷவர், வாட்டர்கூலர் ஆகிய வசதிகளையும் சைவ உணவுக்காரர்களுக்குத் தனி வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய சாப்பாடு அறையும் பெறலாம். எல்லா பிரயாணிகளும் தமிழ் மற்றும் ஹிந்தி சினிமா படங்களையும் பார்க்கலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும் சிங்கப்பூரில் கப்பல் மாற்றிப் பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்



பானுவின் காதலன்

ராஜம் கிருஷ்ணன்

12. புரட்சி!

மூனியன் நாலு மணி அடிப்பதற்கு முன்னரே பால் கறந்துகொண்டு வந்தான். பானு காப்பி போட்டு எடுத்து வந்தான். சுந்தரியம்மாள் படுக்கையில் உட்கார்ந்தபடி வாயைக் கொப்புளித்து விட்டுக் காப்பியை வாங்கிக் கொண்டாள். அவள் பட்டணத்தில் எவரையோ பற்றி வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தாள். மார்க்கபந்து வந்தால் அவர் குரலே வெளியில் கேட்காது. அவர் திணறும்படி அவள்தான் கீச்சுக் குரலிலே தன் உடல் நிலையைப் பற்றி வருணிக்கத் தொடங்கி விடுவாளே? ஆனால் ஆச்சரியம், ராஜாவுக்கு முன் அவள் குரலே அபூர்வமாகக் கேட்டது. அன்று பகலெல்லாம்கூட ராஜாதான் பேசினான். அவளுக்குச்சந்தர்ப்பமே அளிக்கவில்லை!

மாலை நான்குமணி இருக்கும். மார்க்கபந்து வந்தார்.

மகனை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை போலும்! அவனைக் கண்டதுமே அவருடைய முகம் கோணி, மாறிவிட்டார் போல்தோன்றியது பானுவுக்கு. "ஒரே பையன். அம்மா 'குழந்தை! குழந்தை!' என்று உயிரை விடுகிறாள். இவருக்குப் பிடித்தம் இருக்காதோ? ஏன்?" என்று பானு தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான். அவனுக்கு எல்லாமே புதுமையாக இருந்தது அன்று.

இரவு வெகு நேரம் வரையில் மார்க்கபந்து மகனுடன் பேசிக் கொண்டிருந்தார். பேச்சு என்று சொல்ல முடியாது. இருவருடைய குரல்களும் அவ்வளவு உக்கிரமாக ஒலித்தன. 'அப்பாவும் பிள்ளையும் சண்டை போட்டுக் கொள்வார்களா என்ன? எதற்கு?....' என்ற அச்சத்துடன் பின்கட்டு ஜன்னலில் நின்றபடியே பானு கூடத்தையே பார்த்தான். பேச்சுப் போர் என்று அதைச் சொல்ல வேண்டும். பானுவுக்கு அவர்களுடைய ஆங்கிலம் கலந்த பேச்சு தெளிவாகத் துலங்கவில்லை. என்றாலும், மொத்தத்தில் அது வீட்டுச் சண்டையோ, மனஸ்தாபமோ இல்லை என்பது மட்டும் புரிந்தது.

"நேர்வழி, புரட்சி......கெஞ்சல், சாத்வீகம் எல்லாம் பலன் கொடுக்காது அப்பா...!" என்று மகன் அடிக்கொரு முறை தன் நாற்காலிக் கைப்பிடியைப் போட்டு அடித்தான். மார்க்கபந்துவும் சளைக்காமல், 'அது உதவாது. அது தேசத்துக்கு நாசத்தைத் தருவது' என்று தம் நாற்காலிப் பிடியைப் போட்டு அறைந்தார்.

பானுவுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றவே, எங்கு படுத்துக் கொள்ளலாம் என்று சிறிதுநேரம் யோசித்தான். பிறகு சாப்பிடும் பின் கூடத்திலேயே பாயை விரித்து அவன் படுத்துக் கொண்டு விட்டான்.

மறுநாள் அதிகாலையில் பானு சுந்தரியம்மாளுக்குக் காப்பி கொண்டு போனபோது, மார்க்கபந்து அவள் அருகிலே உட்கார்ந்திருந்தார். சுந்தரி அம்மாள் சிறு குழந்தை போல விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

"அழுது என்னபிரயோசனம்? சேசே, கண்ணீரைத் துடைத்துக் கொள். என்ன செய்வது?...இந்தா, முகத்தைக் கழுவிக் கொண்டு காப்பியைக் குடி. மண்டையிடி வந்துவிடும். அப்புறம்..." என்று தேற்றினார் மார்க்கபந்து.

பானுவுக்குச் சந்தேகமும் சங்கடமும் குழப்பின. இப்படி ஏன் சுந்தரியம்மாள் அழ வேண்டும்? பையன்தான் அவள் விசேசத்துக்குக் காரணம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அப்பேர்ப்பட்ட குற்றமா செய்கிறான்? தாயின் மனதை இவ்வளவு வருத்த வேண்டுமானால் என்ன செய்திருப்பான்?

பானு அங்கே இவ்விதக் குழப்பத்துடன் நிற்பதைக்கூட அறியாமல் சுந்தரியம்மாள் பேசினாள். "உங்கள் உத்தியோகத்துக்கும் கூட ஆபத்துத்தானா அதனாலே?" என்று கேட்டாள். குரலில் பயம், நடுக்கம் தோன்றின.

மார்க்கபந்து வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார். "எது வந்தால்தான் நாம் என்ன செய்யப்போகிறோம்?

நீ மனசைத் திடமாக வைத்துக்கொள்ள வேண்டும், சுந்தரி! என்னைப் பொறுத்த வரை நான் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடப்பேன். என் வேலையைப் பொறுப்பாகச் செய்வேன். பின் என்ன?'' என்றார்.

சுந்தரியம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒருநிமிஷம் மௌனமாக யோசனை செய்தாள்.

''ஒரு கல்யாணத்தைச் செய்து வைப்போமே? அவனுக்கு ஆகாததும் போகாததும் மனசை விட்டுப் போகாதா?'' என்று கேட்டாள் நம்பிக்கையுடன்.

அவர் சிரித்தார். ''போடி, பைத்தியக்காரி! நாம் சொன்னால் இப்போது அவன் கல்யாணம் செய்துகொள்வானா? இல்லை, பலவந்தமாகத்தான் பிடித்துக் கட்ட முடியுமா?'' என்றார்.

''கேட்டுப் பார்க்கிறது; சொல்லிப் பார்க்கிறது. கனகாவின் நாத்தனார் பெண்ணே இருக்கிறது. ஒரே பெண். பத்து வேலிக் குடித்தனம். கடல் போல் மாயவரத்தில் வீடு இருக்கிறது. பென்ஷனே அவர் நானூறு ரூபாய் வாங்குகிறார்....''

அவளுடைய ஆசையை உணர்ந்து அவர் இன்னும் பலமாகச் சிரித்தார்.


''அசடு! அவன் இப்படி இருக்கிறான் என்று தெரிந்தால் அவர் பெண்ணைக் கொடுப்பாரா? ஒழுங்காக ஏதோ படித்த படிப்புக்குத் தக்க வேலையில் ஊன்றிக் கடமையைச் செய்தால், அவனுக்கும் நல்லது; ஊருக்கும் நல்லது; உலகத்துக்கும் நலம். பசையும் பணமும் வைத்துக் கொண்டிருப்பவனை அடிப்பதாவது, உதைப்பதாவது?...ம், இந்த யுகத்துப் பையன்களைப் பிடித்து விட்ட தொத்துநோய் போலிருக்கிறது, இது!...'' என்று பெருமூச்சுவிட்டார்.

''அப்போதே அவன் பட்டணத்துக் கல்லூரியில் சேருகிறேன் என்றான். சிவனே என்று நான் போய்க் குடித்தனம் போட்டிருப்பேன். இங்கே அவனைத் தனியாக விட்டதே தப்பு. ஆகாத சிநேகிதமெல்லாம் இப்படி மனசைக் கெடுத்து விட்டது...ஏதோ ஹாஸ்டலில் குடும்பமில்லாமல் இருந்தான், கெட்டுப் போனான் என்று அந்த மாதிரியில் சொல்வார்கள். என் வயிற்றுக் கொடுமை இப்படி எல்லாமா வரும்? எனக்கு அவன் பேச்சா வார்த்தையா என்ன புரிகிறது?'' என்று கூறி விட்டு மறுபடியும் சுந்தரி அம்மாள் அழத் தொடங்கினாள்.

''அதெல்லாம் ஒரு தப்புமில்லை. போதாத காலம். இந்தா, அழாதே, சுந்தரி! காப்பியைக் குடி'' என்று அந்தப் பேச்சை நிறுத்தப் பார்த்தார் மார்க்கபந்து.

அழுத அதிர்ச்சியோ, கவலையோ சுந்தரியம்மாளுக்கு அன்று காய்ச்சல் அனல் பறந்தது. கண்களையே விழிக்காமல் பகலெல்லாம் படுத்துக் கிடந்தாள். மைந்தன் அன்று முழுவதுமே வீட்டில் தங்கியிருக்கவில்லை. காலையில் எழுந்து காப்பி குடித்துவிட்டு வெளியே சென்றவன்தான்; மாலை டாக்டர் வந்து சுந்தரியம்மாளைப் பரிசோதனை செய்து கொண்டிருந்த சமயம் தான் வெளியிலிருந்து திரும்பினான். கூடத்தில் டாக்டரும் மார்க்கபந்துவும் சுந்தரியம்மாளின் உடல் நிலை குறித்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு சிரித்தான். பானுவுக்கு நெஞ்சில் உறுத்தியது. ''உம.... நடக்கட்டும்!'' என்று பானுவைப் பார்த்துக் கூறியபடியே அவன் மாடிக்கு ஏறினான். காலியாகக் கிடந்த மாடி அறையை அவன் இரண்டு நாட்களாகத் தனதாக்கிக் கொண்டிருந்தான்.

இரவு அன்று மார்க்கபந்துவுக்குச் சாப்பாடு கிடையாது. அவருக்குச் சனிக்கிழமை விரதம். அவன் மட்டும் கீழே





இறங்கி வந்தான். பானு மௌனமாக இலைபோட்டு அவனுக்குப் பரிமாறினாள்.

"என்னவாம் அம்மாவுக்கு?" என்றான் அவன் அலட்சியமாக.

பானுவுக்கு நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. "காய்ச்சல் கண்ணையே முழிக்கவில்லை. நூற்றுநாலு டிகிரி இருக்கிறதாம்" என்றாள்.

"ஓ..!" என்றான் ஒருமாதிரி நெளிப்புடன். அதற்கு என்ன அர்த்தம் என்பது பானுவுக்கு விளங்கவில்லை. ஆனால் அவன் சாப்பிட்டு விட்டுப் போகும் போது கூடத் தாயின் படுக்கைப் பக்கம் சென்று எதுவும் விசாரித்ததாகத் தெரியவில்லை. மாடியில் வெகு நேரம் வரை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்து போயிருந்ததை வெளியிலிருந்து பார்த்த பானு கண்டு கொண்டாள்.

மறுநாள் சுந்தரியம்மாளுக்கு, 'எக்ஸ்ரே' படம் எடுக்க வேண்டும் என்று டாக்டர் கூறியிருந்தார். எனவே மார்க்கபந்து காலை ஏழு மணிக்கே ஒரு வாடகைக் கார் கொண்டுவர, இருவரும் 'டவு'னுக்குப் போய் விட்டார்கள்.

காலையில் மணி ஒன்பதடித்தாயிற்று. அவன் கீழே இறங்கி வரவில்லை. மாடியிலேயே தண்ணீர் வசதியும் ஸ்நான அறையும் இருந்தன. என்றாலும் காப்பி வேண்டுமானால் ஒரு குரலேனும் கொடுக்க மாட்டானா? காப்பிக் கஷாயம் ஆறிக் குளிர்ந்து போய் விட்டது; பாலும் அவள் காய்ச்சாமல் எடுத்து வைத்துக் கொள்ளவில்லை. 'சுட வைத்த காப்பி ராஜாவுக்குப் பிடிக்காது. உடனே கண்டு பிடித்து விடுவான்' என்று சுந்தரியம்மாள் வேறு சொல்லியிருக்கிறாள். 'அவன் எழுந்தானா, இல்லையா? மாடிக்குக் காப்பி கொண்டு போகலாமா, கூடாதா?' என்பதே அவளுக்குப் புரியவில்லை. அவன் இரண்டு நாட்களாய் அந்தந்த வேளைக்குக் கீழே இறங்கி வந்திருக்கிறான். அவளுக்கோ, வெளியே நின்று மாடிப் பக்கம் நோக்கினால்கூட எங்கே அவன் பார்த்து விடுவானோ என்ற இனமறியாததொரு உணர்வு நெஞ்சைப் படபடக்கச் செய்தது. முனியன் மார்க்கெட்டுக்குப் போயிருந்தான். "அவன் வரட்டும், போய்ப் பார்த்து வரச் சொல்லலாம்' என்ற எண்ணத்துடன் அவள் கூடத்து வாயிற்படியருகில் வந்த போது அவன் மாடியிலிருந்துஇறங்கிவந்துகொண்டிருந்தான். உருண்டை விழிகள் சிவந்திருந்தன!

அவன் வருவதைக் கண்டதும் பானு 'சட்' டென்று பின் கட்டுக்கு நகர்ந்தாள்.

அவன் செவ்விழிகள் அகல, இதழ்களில் குறுநகை இலங்கியது.

'காப்பி ஆகிவிட்டதா?'

விர்ரென்று சமையல் அறைக்குள் புகுந்த பானுவுக்கு உடனே ஒரு பரபரப்பு. செம்பு 'டிக்காஷன்' சரிந்தது. சர்க்கரை கைநடுக்கத்தால் கீழே சிந்தியது. டவரா உருண்டு தொட்டி முற்றக் கரைக்கு ஓடியது. எப்படியோ அவள் காப்பியைக் கலந்து ஆற்றிக் கொண்டு திரும்பியபோது, அடுக்களை வாயிற்படியிலேயே அவன் வந்து நின்றான். சிவந்த விழிகள் பளிச்சிட மீண்டும் அந்தச் சிரிப்பு.

"உனக்கு ஏன் இவ்வளவு பயம்? கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன?"

பானுவுக்கு நடுக்கம் இன்னும் அதிகமாகி விட்டது!

"அடாடா? என்னிடத்திலேதான் இப்படிப் பயப்படுகிறாயா? இல்லை, எல்லோரிடத்திலுமே இப்படிப் பயப்படுவாயா?.."

கையிலிருந்த டம்ளரும் டவராவும் கீழே விழுந்து விடும் போல் அவள் கைகள் நடுங்கின. முகத்தில் குப்பென்று சூடு பரவியது. காது மடல்கள் எரிந்தன. கண்களில் நீர் வந்துவிடும் போலிருந்தது. அவன் இடி இடியென்று சிரித்து விட்டுக் காப்பியை வாங்கிக் கொண்டான்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? பயம் மனிதனை உயிரோடு கொல்லுமே? என்னைக் கண்டால் பயப்படும்படியாகவா இருக்கிறேன்?..."

பானு குனிந்த தலை நிமிரவில்லை.

"தமிழ்ப் பெண்கள் வீரமரபில் வந்தவர்கள். அநீதியை எதிர்த்துப் போராட அஞ்சாதவர்கள். மனிதனுக்கு மனிதன் பயம் ஏன்? ஏன் கோழையாக நடுங்கு

னாய்? அன்றைக்கு என் அம்மா உன்னைத்தடியால் அடித்து எழுப்பினாள். இந்த நவயுகத்தில்இன்னமும் இந்தக் கொடுமை, அதுவும் என் வீட்டில் நடக்கிறதே என்று என் உள்ளம் கொதித்தது..'' என்றான் அடித் தொண்டையைத் திறந்து.

இதை அவள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. 'இந்தக் கும்ப கருணி யாரம்மா?' என்று அவன் சிரித்துக்கொண்டு தானே கேட்டான்? உள்ளம்கொதித்ததா?அவள் திகைப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டு நிற்கையில் அவன் தொடர்ந்து பேசினான்.



திருமதி எம். கே. செல்வமணியை ஆசிரியையாகக் கொண்டு சிறப்பாக நடைபெற்று வரும் திருவல்லிக்கேணி பரத கலா நிலையத்துக்குப் பிரஞ்சு யாத்திரிகர் கோஷ்டியினர் ஜனவரி 7ல விஜயம் செய்து நிலைய மாணவிகளின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்தனர். மேலே திருமதி எம். கே. செல்வமணியையும், பிரஞ்சு யாத்திரிகர்கள் கோஷ்டியினரையும், நடனமாடிய பரத கலா நிலையக் குழந்தைகளையும் காணலாம்.

''தூங்குவது உன் பிறப்புரிமை; அதை யார் பறிக்க முடியும்? தூங்குவதற்குக்கூட ஒரு வீட்டில் உரிமை இல்லை என்றால் அது அடிமை வாழ்வு இல்லாமல் என்ன?..''

அவளுக்குப் புரியவுமில்லை, புரியவும் புரிந்தது. ஆனால் அவளுக்கு நடுக்கம் விடவில்லை இன்னமும்.

''பயப்படாதே, என்னைக் கண்டு நீ பயப்பட வேண்டிய அவசியமே கிடையாது'' என்று அவளை முதுகிலே (மறதியாகத்தான்!) தட்டினான் அவன்.

கூச்சத்திலே அவளுடைய உடல் ஆயிரம் கோணல்களாக நெளிந்தது!

அவனுக்கும் அப்போதுதான் தவறு புரிந்தது போலும்!

''ஓ....பயப்படாதே. மனிதனை மனிதன் சுரண்டும் அநீதியை, அக்கிரமத்தை அழிப்போம்; அடிமைப்படுத்தி ஆண்மையற்றவர்களாக்கும் அவமானத்தை ஒழிப்போம்; அதற்காகவே போராடுவோம். புரட்சி செய்வோம் .புரட்சி!...''

அவன் கையை வீசிக் கொண்டு கூவிய போது 'ஓங்குக!' என்ற கோஷம் எழும்பவில்லை. அப்பொழுதுதான் அவனுக்குத் தான் மேடையிலே பேசவில்லை என்பதுபுலனாயிற்று. சட்டென்றுவாயை நன்றாகக் கடித்துக் கொண்டான்.

பானு ஆச்சரியத்துடன் நின்றாள். அதிகம் படித்தவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டாள்! ''காய்கறி வாங்கி வந்து விட்டேனம்மா'' என்று நல்ல வேளையாக அப்போது முனியன் குரல் கொடுத்தான். பானு வெளியே வந்தாள். ராஜாவும் அப்போதையச் சொற்பொழிவை நிறுத்திக் கொண்டவனாக விடுவிடென்று மாடிக்கு ஏறினான்.


இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவனுக்கு அடிக்கடி தண்ணீர்த் தாகம் எடுத்தது. இருக்கலாம், புரட்டாசிக் காய்ச்சல் கடும் வெயில் அல்லவா?

சாப்பிடும் கூடத்துக்கு வந்து தண்ணீர் குடித்தவனால் சமையலறைப் பக்கம் வந்து எட்டிப் பார்க்காமல் போக முடியவில்லை. பானுவுக்கும் அவனைக் கண்டு ஏற்பட்ட நடுக்கம் மெள்ள மெள்ள நழுவிப் போயிற்று.

அன்று காலையில் பானு அம்மியில் தேங்காய் அரைத்துக் கொண்டிருக்கையில் அவன் வந்தான். காலை வெயில் முற்றத்து அழிகள் வழியாக அவள் உட்காருமிடத்தில் விழுந்திருந்ததால் அவள் முகம் செங்கொழுந்தாய்த் தெரிந்தது. வியர்வை முத்துக்கள் நெற்றியில் பூத்திருந்தன. பாதி அரைத்துக் கொண்டிருந்தவள் அப்படியே நடுவில் விட்டு விட்டு, அடுப்பில் வேகும் காயைக் கிளறிவிடப் போனாள். அவள் இப்படி வதங்குவதைக் காண ராஜாவின் மனம் இளகி விட்டது.

தண்ணீர் டம்ளருடன் அவன் அங்கு வந்து சேர்ந்தான்.

''பாவம், உன்னைப் போல் எத்தனையோ பெண்கள் இப்படி உழைக்க, பணக்காரர்கள் உல்லாச விருந்து



ஆமை: பக்கத்தில் இருக்கிற குளத்துக்குப் போய்த் திரும்பி வருவதற்குக் குறைந்தது ஒரு வாரம்தான் ஆகும். ஆனால் உனக்கு ஒரு மாதம் ஆகியிருக்கிறது!

உண்கிறார்கள்.—ஆமாம்! உன் பெயரென்னவென்று சொன்னாய்?'' இந்த எதிர்பாராத குறுக்கீட்டைச் செவியுற்ற பானு திடுக்கிட்டுக் கரண்டியும் கையுமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள். மார்க்கபந்துவும் சுந்தரியம்மாளும் கூடத்தில் இருக்கையிலே அவன் அப்படி வந்து பேசியது அவளுக்கு முன்னைவிட அச்சத்தைக் கொடுத்தது.

'' உன் பெயரென்ன ?''

'' பா...பானு...'' குரல் திக்கியது.

'' நீ இன்னும் பயத்தை விடவில்லையே? பார்த்தால் கெட்டிக்காரப் பெண்ணாயிருக்கிறாய் ?...உம், உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா, பானு ?''

தெரியும் என்பதற்கு அடையாளமாக அவள் தலையை ஆட்டினாள்.

'' அப்படி என்றால் ?...தெரியுமா ?''

'' உம்...'' என்றாள் பானு.

'' புத்தகங்கள் படிப்பாயோ ?''

'' படிப்பேன்.''

'' என்னென்ன புத்தகங்களெல்லாம் படித்திருக்கிறாய்? நீ பள்ளிக்கூடம் போயிருக்கிறாயோ ?''

பானுவுக்கு அவன் இந்தக் கேள்விகளெல்லாம் ஏன் கேட்க வேண்டுமென்று புரியவில்லை. '' உம்..'' என்றாள் அவள் மறுபடியும்.

''மூணாங்கிளாஸ்வரை படித்திருக்கிறாயாக்கும் !'' என்று அவன் சிரித்தான்.

பானுவுக்கு அவன் அப்படிக் குறைத்துச் சொன்னது ரோசமாக இருந்தது.

'' அஞ்சாவது படிச்சிருக்கேன் !''

'' ஓகோ..,...பரவாயில்லையே! அப்படியானால் சரித்திரம், பூகோளம், ஸிவிக்ஸ், அது இது எல்லாம் நன்றாகப் படித்திருப்பாய் !''

பானு இதற்குப் பதில் கூறவில்லை. ''அம்மியில் தேங்காய் உலருகிறது. வழியை விட்டால் தேவலை'' என்றாள்.

'' உலரட்டுமே? கொஞ்சம் உலர்ந்தால் கெட்டு விடுமா? நான் சில புத்தகங்கள் தருகிறேன், படி. நீங்களெல்லோரும் படிக்க வேண்டும். உங்களுக்கு உங்கள் எஜமானர்கள் இழைக்கும் அநீதியை உணரவேண்டும். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடினால் வெற்றி நிச்சயம். அதன்பிறகு தோட்டியுமில்லை, தொண்டமானுமில்லை. பாட்டாளியுமில்லை: பணக்காரருமில்லை.....''

பானு நடுவே குறுக்கிட்டாள்:] '' அப்படியென்றால்?''

'' நீ இப்படி உழைக்க வேண்டாம்; அடுப்படியோடு தேய வேண்டாம்....''

''பின்னே என்ன செய்வதாம்?''

''உன் உழைப்பின் பயன் இப்படிக் கொள்ளை போகிறதே, பானு !''

''இல்லையே? எனக்கு மாசச் சம்பளம் வேறு உண்டே?'' என்றாள் பானு.

''எவ்வளவு சம்பளம்?''

''சாப்பாடு போக மாசம் ஆறு ரூபாய்!''

''ஆ....று ரூபாய்! பூ. இவ்வளவு தானா? மாதம் முப்பது நாட்களும் ஓய்வின்றி உழைப்பவளுக்கு ஆறு ரூபாய்! என்ன அநீதி? கேவலம் ஒரு குடும்பத்துக்கு ஒரு நாள் செலவுக்குக் காணாத தொகை மாதச் சம்பளம்! விடுமுறையாவினும் உண்டா? கிடையாது. சமைக்கிறாய். சமைத்தவளுக்கு உணவு சொந்தமில்லையாம், கூலியாகக்கணக்கு! அநீதி, அக்கிரமம், உழைப்பாளியின் வயிற்றில் அடிக்கிறார்கள்...''

''இதெப்படி அநீதியாகும்? சமைத்தவளுக்குத்தான் சாப்பாடு சொந்தம் என்றால், எல்லாவற்றையும் நான் சாப்பிட முடியுமா? மாமிக்கு உடம்பு சரியில்லை. நான் வேலை செய்கிறேன். சாப்பாடு கிடைக்கிறது. எனக்கு வேறு செலவில்லை. மாசச் சம்பளத்தை மாமா பாங்கியில் கட்டுகிறார். நவராத்திரியை முன்னிட்டு எனக்கு மதுரையிலிருந்து ஒரு புடவைகூட வாங்கி வந்திருக்கிறார். எனக்கு இதற்குமேல் என்ன?'' என்று பானு திருப்பிக் கேட்டதை. கூடத்தில் நின்று கவனித்த மார்க்கபந்து உள்ளூறச் சிரித்துக் கொண்டார். பானுவின் புத்திசாலித்தனத்தை அவர் பாராட்டிக் கொண்டார்.

''பூ. உனக்குப் புரியவில்லை, பானு. நீ ஏமாந்து போகிறாய். இரு. வருகிறேன் '' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றான் ராஜா. (தொடரும்)





“சர்வம் பிரம்மம்; எல்லாம் பிரம்மத்தில் வாழ்கின்றன; பிரம்மம் எல்லாவற்றிலும் பரிமளிக்கிறது..”

இவ் வார்த்தைகளைப் படித்ததும் ராகவாச்சாரியின் மனம் கலங்கியது. தாம் மடிவதோடு பிறரையும் மடிக்க வைப்பதா? முன்னால் திடப்பட்டிருந்த மனம் இப்பொழுது இசைய மறுத்தது. தம் வாழ்வின் கடைசிப் புஸ்தகமாக இருக்கட்டுமென்று வாங்கிய வேதாந்தத் தொகுப்பை மூடினார். தளத்திலிருந்து கிளம்பும் விமானத்தின் காற்றைக் கிழிக்கும் சத்தம் பலமாகி மறைந்தது. சுவர்க் கடிகார முட்கள் 9-15 மணியைத் தாண்டி விட்டன. “எனக்கு வாழ்வு இன்னும் இரண்டுமணி நேரம்தான்” என்று எண்ணிய அவருடைய மார்பு படபடக்கவில்லை.

“விளால்டாபாஸஞ்சர் கணக்காகிவிட்டது, விமானப் போக்குவரவு. குறித்த நேரமாகியும் சென்னை செல்லும் விமானம் கிளம்பும் வழியைக் காணுமே!” என்றார் பக்கத்தில் இருந்தவர்.

“ஏன் தாமதம் என்று சொல்லித் தெரிவித்தாலாவது தேவலையே!” என்றார் அவருடன் இருந்தவர்.

“விமானத்தை முற்றிலும் சோதித்து விபத்து ஒன்றும் ஏற்படாது என்று நிச்சயப் படுத்தினபின் தான் கிளம்ப அனுமதிப்பார்கள். விளையாட்டுச் சமாசாரமா?” என்றார் மூன்றாவது பிரயாணி.

மரணம் காத்து நிற்கிறது என்று இவர்களுக்குத் தெரிந்தால் இவர்கள் இப்படி அவசரம் படுவார்களா என்று வியந்தார் சென்னைக்குச் செல்லும் ராகவாச்சாரி. பிறகு அங்கு இருப்புக்கொள்ளாது எழுந்து, “உள் நாட்டுப் பிரயாணிகள் இந்த வழி” என்று போட்டிருந்த வராந்தாவுக்கு வந்து நின்றார்.

பிசு பிசு வென்ற மழையில் நின்று கொண்டிருந்தது விமானம். அதன் வலது இறக்கையில் குடை பிடித்தொருவன் உட்கார்ந்து கீழே நின்ற வண்டியிலிருந்து வந்த பெட்ரோல் குழாயை இறக்கையில் செருகினான். பெட்ரோல் ஏற்றும் விசை இயந்திரம் முனகியது. இரண்டு இறக்கைகளிலும்





சேர்ந்து இரண்டாயிரத்து எண்ணூறு காலன் பெட்ரோல் கொள்ளும்; விமானத்தை ஊக்கும் சக்தி நீ விபத்தில் விமானத்தை ஒரே நொடியில் பஸ்மமாக்கி விடவும் கூடும். "துப்பாக்கி, வெடி மருந்து, காமிரா விமானத்தில் எடுத்துச் செல்லக்கூடாது" என்று தளவெளியில் சிவப்புப் போர்டு எச்சரித்தது.

விமானத்தின் முன் வயிற்றின் அடியிலுள்ள பொறிக் கதவைத் திறந்து உள்ளே சாமான்களை ஏற்றினார்கள். தள்ளு வண்டியிலிருந்து ஒருவன் ஏணி மூலம் பெட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்து உயர்த்த விமானத்துக் குள்ளிருந்தவன் அவற்றை இழுத்துக் கொண்டான். இரண்டு இறக்கைகளுக்கும் நடுவில் இருந்தது சாமான்கள் வைக்குமிடம்.

சாமான்கள் அறையில் இருந்தது ஒரு புதுப்பெட்டி. அதில் உறைந்த அக்னி உருவத்தில் மரணம் காத்து நின்றது.


* * *

ஒலிபெருக்கி கனைத்து விமானப் புறப்பாட்டை அறிவித்தது. "உங்கள் கவனத்தைக் கோருகிறோம். பறப்பு 307, மதராஸ் விமானம் தயாராக நிற்கிறது. பிரயாணிகள் அதில் ஏறிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

நிதானமாக நடந்து சென்று விமானத்தில் ஏறினார் ராகவாச்சாரி. படியின்மேல் விமானவாயிலில் நின்று கொண்டிருந்த ஹோஸ்டஸிடம் தம் டிக்கட்டைக் காண்பித்துவிட்டு இடதுபுறம் கடைசி இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

கதவு மூடப்பட்டது. பஞ்சடைத்த அவர் காதுகளில் என்ஜின்களின் சப்தம் இலேசாகக் கேட்டது. விமானம் அதிர்ந்து நடுங்கியது. பாதுகாப்பு பெல்டை இடுப்பின்மேல் இறுக்கிக் கொண்டு, வட்ட வடிவ நீல பிளாஸ்டிக் ஜன்னல் வழியே கீழே பார்த்தார் ராகவாச்சாரி. விமான விசிறிகள் செயற்கைப் புயல் மழைக் கதிர்களைப் பின் புறம் சுழற்றி யடித்தது. ஜன்னல் வெளிப்புறம் படர்ந்திருந்த ஈரம் காட்சியைச் சற்று உருக்குலையத் தான் செய்தது. கீழே நின்ற ஒருவன் தன் கைவிரல்களை மூடிக் கொண்டு, இரண்டு கட்டை விரல்களை மட்டும் உயர்த்தி, கைகளை மேலே தூக்கிச் சிரித்தான். விமானம் மெதுவாக நகர்ந்து புறப்படும் தளத்தின் தலைப்பில் வந்து நின்றது. நான்கு என்ஜின்களும் முழு விசையில் முடுக்கி விடப்பட்டன. வானத்தில் குதித்து எழ விமானம் துடிதுடித்தது.





அடுத்த விநாடி மேக மண்டலத்தை மீறி வெய்யிலில் மிதந்தது விமானம். ஒன்பதாயிரம் அடி உயரத்தில், மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் அது பறந்தது.

விமானத்திலிருந்த பிரயாணிகளை எண்ணினார் ராகவாச்சாரி. பதினேழு பேர்கள் இருந்தனர். சிலர் படித்துக் கொண்டிருந்தனர். ஹோஸ்டஸ், மூன்று விமானிகள், என்ஜினியர் சேர்ந்து மொத்தம் இருபத்திரண்டு பேர்.

''கடைசிப் பிரயாணம் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று பக்கத்திலிருந்தவர் ராகவாச்சாரியைப் பார்த்துச் சிரித்தார். நெடு நாட்கள் பழகிய நண்பருடையதைப் போல் அந்தரங்கமும் வாத்சல்யமும் நிரம்பியிருந்தன அச் சிரிப்பில்.

திடுக்கிட்ட ராகவாச்சாரியால் பதிலொன்றும் உடனே சொல்ல முடியவில்லை.

''உயிருடன் இதை முடித்தால்தானே அடுத்த பிரயாணம் நிச்சயம் என்று சொல்கிறீர்கள்? வாஸ்தவம்தான். இது உங்கள் முதல் விமான அனுபவம் போலிருக்கிறது. ஆகையால்தான் உங்கள் முகத்தில் பயத்தின் சாயை தெரிகிறது!'' என்றார் இன்னொருவர்.

ராகவாச்சாரிக்குப் பதற்றம் பிடித்துக் கொண்டது: கூடவே கோபமும் வந்தது. ''உங்களை எனக்கு முன்பின் தெரியாது! ஏதேதோ பேசுகிறீர்களே, அறிமுகத்துக்குக் கூடக் காத்திராமல்! நான் என்றைக்கும் எதற்கும் பயந்ததில்லை. வாழ்க்கை முடிவுக்கும் பயந்ததில்லை!'' என்றார்.

''மரணத்தைச் சந்திக்க, தைரியம் தேவையில்லை. வாழ்க்கையில் ஏற்படும் சுகதுக்கங்களை ஏற்கத்தான் தைரியம் தேவை. காலதேவனை எனக்கு நன்றாகத் தெரியும், சார். என் ஜன்ம விரோதி. நான் கட்டிலின் ஒருபுறம் நிற்கையில் மறுபுறத்திலிருந்து காலதேவன் என்னைக் கண்டு நகைப்பான். 'உனக்காச்சு, எனக்காச்சு! இந்த உயிர் இப்பொழுதில்லை உனக்கு. வயது இருபதாகிறது. வாழ்க்கையை அனுபவிக்கட்டும். படவேண்டிய கஷ்டங்களைப் படட்டும். காலாகாலத்தில் நீ இவ்வுயிரை எடுத்துச் செல்லலாம் தடையில்லாமல்' என்பேன் ஊசி ஏற்றிக்கொண்டே. 'உன் வெற்றி தாற்காலிகமானது. எப்பொழுதும் எனக்குத்தானே கடைசி வெற்றி!' என்று சிரித்துவிட்டுப் போய்விடுவான் காலதேவன். எனக்கு மூன்று வருஷங்களில் இதுதான் முதல் விடுமுறை. இந்தாருங்கள். மிட்டாய் சாப்பிடுங்கள். நான் இதுவரையில் எவரிடமும் இதுமாதிரி பேசியதேயில்லை. பேச அவகாசமில்லாத வேலை எனக்கு. இன்று என்னமோ உங்களைக் கண்டவுடன் என்னையறியாத ஒரு சக்தி என்னை இதுமாதிரி உளற வைக்கிறது. மன்னியுங்கள்.''

''என் பெயர் ராகவாச்சாரி. உங்கள் பேச்சிலிருந்து நீங்கள் ஒரு டாக்டர் என்பது நன்றாகத் தெரிகிறது.''

''தலையில் ஒரு மயிரைப் புதிதாக உற்பத்தி செய்ய முடியாத மனிதனுக்கு உயிரைப் பற்றி அலட்சியமாகப் பேசக் கூட உரிமை கிடையாது. நினைத்த மாத்திரத்தில் ஒரு உயிரை நம்மால் படைக்க முடியுமா? நாடி நிற்கும் வரை உயிருக்காகப் போராடுவதே கடவுள் என்னைப் போலிருப்பவர்களுக்கு வகுத்த வேலை என்று நம்புகிறேன். நான்... நான் யார் என்று சொல்லாமல் மேலே பேசிக் கொண்டே போகிறேனே! என் பெயர் கர்மாம்ஷு.....''

ராகவாச்சாரிக்குத் தலைசுழன்றது. டாக்டர் கர்மாம்ஷுவா? 'மனிதன் தெய்வத்தின் அம்சம் என்பதற்கு உதாரணம் டாக்டர் கர்மாம்ஷு' என்று போற்றப்பட்ட அவரையா விதி இவ்விமானத்தில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்?

விசேஷ இலக்காகக் கொண்டு தம்மைப் பிறவி முதல் வதைத்த விதி இப்பொழுது கூடவா ஏளனம் செய்ய வேண்டும்?

வாழ்க்கையில் அடிபட்டு, உதைபட்டு, எடுத்தது எதிலும் வெற்றியே காணாது ஏமாந்து ஏமாந்து நசிந்துவிட்ட மனம் கொண்டவர் ராகவாச்சாரி. வீட்டில் தாண்டவமாடிய வறுமையும், பெற்றோர்களுக்குள் எப்பொழுதும் புகைந்து விகாரமாக அடிக்கடி வெளிப்பட்ட மன வித்தியாசமும் அவரை நினைவு தெரிந்த நாளிலேயே பாதித்து விட்டன. இளவாழ்க்கையின் இன்னல்களை மறக்கப் படிப்பில் மூழ்கிய பையன் வகுப்பில் முதலாவதாக நின்றான். சரஸ்வதியின் அனுக்கிரகம் பெற்றவனைத் தங்கைபுறக்கணித்தாள். கலாசாலைப் படிப்பு எட்டாத உயரத்தில் இருந்தது. எப்படியோ ஒரு வேலை தேடிக் கொண்டு உழைத்ததில் உடல் தேய்வுதான் பலன். அதிக வேலைதான் பலன். உலகத்தை வென்றுவிடக் கனவுகண்ட இளைஞனை உலகம் கால்பந்தாக உதைத்து விளையாடியது. வேறு வேலை தேடும் முயற்சி யெல்லாம் வியர்த்தம். பேட்டிக்குச் சில சமயம் அழைக்கப்பட்டுச் சென்றால், வேறு எவனாவது பெரிய மனிதர் வீட்டுப் பையன், சிபாரிசுள்ளவன், மேல் படிப்புப் படித்தவன் வேலையைத் தட்டிக் கொண்டு போவதைத்தான் பார்க்கலாம். எதிலும் ஏமாற்றமே பங்கு. வாழ்க்கையில் ஒரு தரமே நிகழக் கூடிய அதிசய சம்பவம் - கவிதை உலகத்தைச் சார்ந்த காதல்-நிகழ்ந்தது. ராகவாச்சாரியை வதக்கி வாட்டி எடுத்தது. அவள் செல்வந்தர் வீட்டு மகள். பெரிய பங்களா, இரண்டு கார்கள், நிலம், ஆஸ்திக்கு வாரிசு. ஆனால் பணத்தின் மமதை தெரியாது அன்பு பெரிதெனக் கருதி வாழ்க்கையில் பங்கு வேண்டினாள். ''உறுதுணை ஒருவருக்கொருவர்'' என்று வாதாடினாள்.

ராகவாச்சாரியின் வறுமை அன்பையும் நிரித்து விட்டது: ''வீண் கனவு. நான் விஷம். என்னால் உனக்குக் கஷ்டமும் துக்கமும் தான் கிடைக்கும். என் காற்று பட்டால் கூட உன்னால் சுகம் காணமுடியாது'' என்று அன்பைக் கொலை செய்தார். எனவே, மனமுடைந்த செல்வம் செல்வத்தைக் கைப்பிடித்துக் கொலுப் பொம்மையாயிற்று.

பல வருஷங்களுக்குப் பிறகு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக ராகவாச்சாரி ஒரு ஏழைப் பெண்ணைக் கைப்பிடித்தார். நீண்ட நாக்கு அவள் பிரதான அம்சம். எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவள் மனப்பான்மையில் எளிமை இடம் பெறவில்லை. அதுவேண்டும் இதுவேண்டும் என்று எப்பொழுதும் குறைப்


தரத்திற்கும் உறுதிக்கும்-இணையற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்தரவாதமுள்ள
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உபயோகித்து, கழுவி துடைத்து நோக்குங்கள்.
என்ன செய்தாலும் அதன் பளபளப்பு நிலைத்து நிற்கும்
ஹத்திபாய் துளசிதாஸ்
பம்பாய்-2.

பட்டு, தன் நாக்கிலும் ராகவாச்சாரியைச் சுட்டெரித்தான். வீடு பெயரளவில்: உண்மையில் புத்தகாலயம். இரண்டு குழந்தைகள் பிறந்து தக்காமல் போய் விட்டன. அவருக்கு மனச் சிக்கல்கள் அதிகரித்தன. மூன்றாவது பையன் பிறந்து ஐந்து வயதிருக்கும் பொழுது இனம் தெரியாத வியாதி வந்தது. சென்னையில் உள்ள பல நிபுணர்களிடம் காண்பித்து ஏமாற்றமடைந்தார். பிறகு யாரோ சொன்னதின் பேரில் டாக்டர் கர்மாம்ஷுவுக்குக் கடிதம் எழுதினார் ராகவாச்சாரி. வியாதியை விவரித்துப் பல டாக்டர்களின்பரிசோதனை ரிப்போர்ட்டுகளும், எக்ஸ்—ரே புகைப்படங்களும் அனுப்பினார். மறு தபாலில் வந்தது டாக்டர் கர்மாம்ஷுவின் பதில். அதன்படி செய்த சிகிச்சையில் பையன் பிழைத்தான். எங்கும் கடன்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்த ராகவாச்சாரி நன்றியின் காணிக்கையாக ஏதோ கஷ்டப்பட்டு அனுப்பிய பணத்தைத் திருப்பி யனுப்பி விட்டார் கர்மாம்ஷு. ''மருந்தும் சிகிச்சையும் மனித யத்தனமும் நூறில் ஒரு பங்கு. மற்றது கடவுள் சித்தத்தைப் பொறுத்தது'' என்று ஒரு தாளில் கிறுக்கி அனுப்பியிருந்தார் கர்மாம்ஷு.

இது பல வருஷங்களுக்கு முன் நடந்தது. பிறகு குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. தம்மைச் சார்ந்தவர்களுக்குத் தம் கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாது கஷ்டப்பட்டார் ராகவாச்சாரி.

"கல்கத்தா சென்று வரவேண்டும். சாமான்களைக்கூட எடுத்துக்கொண்டு நாளை மெயிலில் போங்கள். திரும்பி வரும்பொழுது விமானத்திலேயே வந்து விடுங்கள்'' என்றார் முதலாளி காரியாலயத்தில்.

ராகவாச்சாரிக்கு வியப்பு உண்டாயிற்று.

''மிகவும் முக்கியமான காரியம். கிருஷ்ணன் லீவில் போய் விட்டான். உங்களை அனுப்ப வேண்டியிருக்கிறது.''

''அதற்கென்ன? நான் போய்வருகிறேன்.''

அவர் முப்பது வருஷங்களில் விடுமுறை எடுத்ததில்லை. சென்னையை விட்டு அவர் வெளியே சென்றதில்லை.

''இன்னொரு முக்கிய விஷயம், மிஸ்டர் ராகவாச்சாரி. முப்பது வருஷங்கள் உழைத்தவர்களை ரிடையர் செய்வது என்று தீர்மானித்திருக்கிறோம். வாலிபர்களுக்கு அப்பொழுது தானே முன்னேறச் சந்தர்ப்பம் கிடைக்கும்? நீங்கள் அடுத்த ஆகஸ்டு மாதம் விலக வேண்டி வரும்...''

கல்கத்தாவிலிருந்து திரும்பி விமானத்தில் வர ஏற்பாடு செய்த காரியாலயத்தார் அவர் உயிரைப் பத்து ரூபாய் கட்டி ஒரு லட்ச ரூபாய்க்குப் பிரயாண விபத்து இன்ஷுரன்ஸ் செய்திருந்தார்கள்.

முப்பது வருஷங்கள் உண்மையாக உழைத்ததின் பலன் பிராவிடண்ட் பண்டில் ஆறாயிரம் ரூபாய். அதில் பாதி கடன் வாங்கியாகி விட்டது. லாட்டரியையும் திடீர் அதிருஷ்டத்தையும் பற்றிக் கனவு காணும் வர்க்கத்தைச் சாராத ராகவாச்சாரியின் மனம் இன்ஷுரன்ஸ் தொகையைக் கண்டவுடன் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. உயிருடன் இருந்தால் ஒரு தம்பிடி மதிப்பில்லை. விமான



கண் வைத்தியரிடம் வந்தவர்:—நீங்கள் கொடுத்த கண்ணாடி இவ்வளவு அருகில் வைத்துக் கொண்டால்தான் கொஞ்சம் தெரிகிறது!

வைத்தியர்:—போதும்! போதும்! உங்கள் மூக்கு வெளியில் எனக்குத் தெரிகிறது!

விபத்தில் இறந்தாலோ குடும்பத்துக்காவது உபயோகமாகும். வாழ்க்கையில் தோல்வியே கண்டவர் மரணத்தில் வெற்றி காணுவதற்குத் துணிந்து விட்டார்.

புறப்பட்ட இரண்டு மணியில் தீப்பிடித்து விமானம் விபத்துக்குள்ளாக ஏற்பாடு செய்தார். ஒரு சிறு பெட்டியில் துணியால் மூடப்பட்ட பாஸ்பரஸ், கந்தகம், கரித்தூள், வெடியுப்பு, பெட்ரோல் புட்டி இரண்டு இவைகளைச் சேகரித்துத் தயாரித்தார். பாஸ்பரஸ் இத்தனை நேரத்தில் சாணியை எரித்து மற்றச் சாமான்களுக்குப் பரவிவிடும் என்று கணக்கு. அபாயகரமான இப் பெட்டி இறக்கைகளுக்கு நடுவில் விமானத்தின் முன் வயிற்றின் அடியில் இருந்த மற்றப் பெட்டிகளைப் போல் ஹானியற்றதாகத்தான் இருந்தது பார்ப்பதற்கு.

அவர் மடிவது மட்டுமன்றி, கூடப் பல பேர்களை மாய்ப்பதும் பாபம்தான். அப்பொழுதிருந்த வாழ்க்கை, வெறுப்பு நிறைந்த மனம் அதற்குத் துணிந்து விட்டது. அணுகுண்டைப் போட்டு ஒரே விநாடியில் நூறாயிரம் உயிர்களைக் கொன்றதற்கு மன்னிப்புண்டானால் தம் செய்கைக்கும் மன்னிப்புண்டு என்று அவர் குதர்க்கவாதம் செய்தார்.

தம்மைப் போல் எவ்வளவோ பெற்றோர்களுக்கு வயிற்றில் பால் வார்த்த குழந்தை நிபுணர் டாக்டர் கர்மாம்ஷுவைக் கண்டவுடன் ராகவாச்சாரியின் உறுதி குலைந்தது.

'' ஒன்றும் பேசாமல் என்ன யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்?'' என்றார் டாக்டர்.

''விளையாட்டுக்காக ஒரு கேள்வி, டாக்டர்! இந்த விமானம் இன்னும் கொஞ்ச நேரத்தில்

ஒரு விபத்துக்குள்ளாகி இருப்பவர்களெல்லாரும் கோர மரணத்தை அடைவார்கள் என்று தெரிந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

டாக்டர் இரண்டு நிமிஷம் பேசவில்லை. ராகவாச்சாரியை உற்றுப் பார்த்துச் சொன்னார்: ''இது விளையாட்டான கேள்வியில்லை. மற்றவர்களைக் காப்பாற்ற வழி தேட வேண்டும், நீங்கள் சொல்வது உண்மையானால்!''

''மற்றவர்களைக் காப்பாற்ற!'' என்ற வார்த்தைகள் ராகவாச்சாரியைக் குத்தின.

''உங்களைப் பற்றிக் கவலை....''

''நான் போனாலும் பரவாயில்லை, சார். பாவம், இவர்களை....''

பிறருக்காக உயிரைத் துறந்தால் மரணத்தில் வெற்றி உண்டு. தன்னுயிரையே பிறர் நலனுக்காகப் பணயம் வைத்த ஏகநாதரும், காந்தி மகானும் மரணத்திலும் வெற்றி கண்டனர். அதைப்போல்தான் டாக்டரும் என்று ராகவாச்சாரிக்குப் பட்டது.

உயிருடனிருந்தால் டாக்டர் கர்மாம்ஷு எதிர்காலத்தில் எவ்வளவு ஆயிரமாயிரம் குழந்தைகளுக்குப் புத்துயிர் அளிக்கக்கூடும்? தம் பிள்ளையைக் காப்பாற்றிய டாக்டருக்குப் பிரதி பலன்...? அகால மரணம்!

'வாழ்க்கையை எதிர்க்கத்தான் தைரியம் அவசியம் என்றாரே டாக்டர். தாம் செய்த இந்தக் காரியம் எந்தத் தைரியத்தைச் சேர்ந்தது?' ஏதோ ஒருவித பைத்தியம் பிடித்துத்தான் இந்தப் பாதகக் காரியத்தைத் தாம் செய்து விட்டதாக அவருக்குத் தோன்றியது.

என்ன செய்வது என்று வகையறியாது குழப்ப மடைந்த ராகவாச்சாரி கண்களை மூடிப் பிரார்த்தித்தார். மனம் தெளிந்தது. தெளிந்த மனம் சொல்லியது. ''நீ தேடியது வெற்றியல்ல. வாழ்க்கை சலிக்காது தோல்வியையல்லவா ஒப்புக் கொண்டாய்? மனிதன் சூழ்நிலை சந்தர்ப்பங்களால் முறிக்கப்படலாம்; ஆனால் தோற்கப்பட மாட்டான். உடலில் ஒரு துளி சக்தியுள்ள வரை தன் கடமையை நிறைவேற்ற முயற்சி செய்தே தீருவான்.''

மகத்தான வெற்றி காணவும் தீர்மானித்தார். எங்கிருந்தோ ஒரு புது நிதானம் அவருள் சுரந்தது. மனப் பதட்டத்துடன் உடல் பதட்டமும் மறைய, ''மன்னிக்கவும்'' என்று டாக்டரிடம் சொல்லிவிட்டு விமானிகள் அறைக்குச் சென்றார்.

''தயவு செய்து வெளியே போங்கள்'' என்று சொல்லவிருந்த தலைமை விமானி அவர் முகக்குறியைக் கண்டு தயங்கினார்.

விஷயத்தைச் சொன்னார்.

''விளையாடாதீர்கள்.''

''சத்தியமாகச் சொல்கிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் அது எரிய ஆரம்பித்து விடும்'' என்றார் ராகவாச்சாரி.

''உங்களை இந்தக் குற்றத்துக்குத் தூக்கி விடுவார்கள், தெரியுமா?''

''அதற்கும் தயாராக இருக்கிறேன். நீங்கள் அந்தப் பெட்டியை எடுக்காது இப்படிப் பேசிக் கொண்டே இருக்கிறீர்களே!''

விமானிகளின் அறைக்குப் பின் ஒரு சிறு சதுரப் பலகை விமானத்தின் தரையில் ஆணிகளால் பொருத்தப்பட்டிருந்தது. 'ஸ்க்ரு டிரைவ'ரை வைத்துத் திருகி அப்பலகையைக் கழற்றினார்கள்; கீழே இருந்தது சாமான் வைக்குமிடம். இவர் லக்கேஜ் டிக்கெட் நம்பரை வாங்கி, அந்த நம்பர் உள்ள பெட்டியை வெளியே எடுத்தான் தலைமை விமானியின் சிப்பந்தி.

''இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கிறது என் கணக்குப்படி. பெட்டியை அப்படியே தூர எறிந்து விடுங்கள்'' என்றார் ராகவாச்சாரி.

தலைமை விமானி ஒன்றும் பேசவில்லை. பெட்டியைத் திறந்து அதிலிருந்த பாஸ்பரஸ் பந்தை எடுத்து முக்கால் தண்ணீர் நிறைந்த ஒரு கிளாஸில் போட்டு மூடினார். பெட்டியை மூடித் திரும்ப வைத்துச் சாமான் அறைப் பலகையைப் பொருத்தும்படி சிப்பந்திக்குக் கட்டளை யிட்டார்.

''பிரயாணிகள் எவருக்கும் இந்தச் சமாசாரம் தெரியக் கூடாது'' என்று உத்தரவிட்டார் விமானி.

அவர் முகத்திலிருந்து வியர்வை கொட்டியது. இரண்டாவது மகா யுத்தத்தில் அவர் ஓட்டிச் சென்ற பாம்பர் விமானம் இறக்கையில் சுடப்பட்டுப் பிரான்ஸில் விழுந்தது ஞாபகம் வந்தது. தெய்வாதீனமாக உயிர் தப்பியவர் அந்த விமானி ஒருவர்தான். அவருடன் இருந்த ஏழு விமானிகள் மடிந்தனர். ''என் நண்பர்கள் போக நான் மட்டும் தப்புவானேன்? அவர்களுடன் நானும் மடிந்திருக்கக் கூடாதா?'' என்று புலம்பிய இவருக்கு அடைக்கலம் கொடுத்துத் தப்பிக்க உதவி செய்தார் பிரஞ்சு பாதிரி ஒருவர். ''குண்டு வீச்சால் மடிந்த எதிரிகளுக்கும் நீ வருந்த வேண்டும். இந்த யுத்தத்தில் உயிர் பலிக்கும் சேதத்துக்கும் எந்த ஒருவனும் பொறுப்பில்லை. மனித வர்க்கத்தின் மடமைதான் காரணம்'' என்று பாதிரி சொன்னது நினைவுக்கு வந்தது. ''ஆனால் தனி மனிதன் ஒவ்வொருவரும் மற்றவர் குற்றங்களுக்குக் கூடப் பிராயசித்தம் செய்ய வேண்டும்.''

விமானம் இடது பக்கம் திரும்பியது.

விமானம் விசையுடன் செல்ல ஐந்து நிமிஷத்தில் கீழே தரை மறைந்து வெயிலில் ஜ்வலிக்கும் நீலக்கடல் தெரிந்தது.

கதவைத் திறந்தார் விமானி. உள்ளே காற்று விசையுடன் அடித்தது. கிளாஸைக் கீழே சாய்த்தார். பாஸ்பரஸ் கடலை நோக்கி விரைந்தது.

''சென்னை சென்றவுடன் உமது பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் வெடி மருந்தை வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாக எரித்து விடுங்கள்'' என்றார் விமானி.

''என்மேல் நீங்கள் புகார் செய்யப் போவதில்லையா?'' என்றார் ராகவாச்சாரி.

''உண்மையைச் சொல்லி, செய்யவிருந்த பாதகத்தைத் தவிர்த்தீர்கள். தைரியசாலி நீங்கள்! உங்கள் மேல் புகார் ஏன்?''

திரும்பத் தம் இடத்தில் வந்து உட்கார்ந்தார் ராகவாச்சாரி. மனக் குழப்பங்கள் அமிழ்ந்து உண்மை வெற்றி கண்ட மகிழ்ச்சி அவர் உடல் எங்கும் நிரம்பியது. அவர் வாய் அவரை யறியாமலே 'அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி'ப் பாடியது. மற்றப் பிரயாணிகள் அவர் குதூகலத்தைக் கண்டு வியப்புடன் பார்த்தனர்.

சென்னையை நோக்கி விமானம் விரைந்தது

கிணற்றடியிலிருந்து அப்பொழுதுதான் திரும்பினாள் பவளக்கொடி. வீட்டுக்குள் நுழையப் போனவள், நிலைப்படியிலேயே நின்றாள். நெஞ்சில் இருந்த பாரம், இடுப்பிலிருந்த தண்ணீர்க் குடத்தின் சுமையைக் குறைத்து விட்டது போலும்! புதைந்த நினைவுகள் புத்துயிர் பெற்றன. பவளக்கொடிக்குத் தன்நினைவு சிலிர்த்தெழுந்தது. குடத்தை இறக்கிக் கீழ்க் கோடித் திண்ணையில் வைத்தாள்; மண் பானை ஒரு நிலைப்படவில்லை. 'பிரிமனை'யை அணை கொடுத்தாள். ஒரு சுமை குறைந்து விட்டது. ஆனால் மற்றுமொரு சுமைமட்டும் குறையவில்லை. எவ்வாறு குறையும்? எண்ணியவுடனேயே குறைந்து விடுமா? மனச் சுமை ஆயிற்றே அது!

சுவரில் பதிந்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடி அவளது பார்வையில் தென்பட்டது. நடந்தாள். முகம் தெரிந்தது. சாந்துப்பொட்டைச் சுற்றிலும் வியர்வைத் துளிகள் புள்ளிக்கோலம் இட்டிருந்தன. கங்கடிச் சேலையின் நுனியில் தொங்கிய விலைச்சீட்டு அவளுடைய நுனிவிரலில் சிக்கியது. அதை அப்படியே பிய்த்தெறிந்தாள். பிறகு, 'முந்தானை'யால் வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். வியர்வை முத்துக்கள் ஓடி விட்டன. ஆனால், அதற்குப் பதிலாக இப்போது கண்களிலே கண்ணீர் முத்துக்கள் மின்னத் தொடங்கின.

பவளக்கொடி கிழக்கு நோக்கித் திரும்பினாள். கருத்தில் பதிந்தகாட்சி கண்ணிடைத் தெரிந்தது. தொலைவிலே, அய்யனார் குதிரையின் கட்டுக் காவலுடன் 'மாரி ஆத்தாள்' காட்சி தந்து கொண்டிருந்தாள். அவள் சிரம் தாழ்த்தினாள்; கரம் கூப்பினாள். ''தாயே, உன்னைத்தான் இந்தத் தடவையும் மலைபோலே நம்பிக்கிட் டிருக்கேன். என்னைச் சோதிக்காமல், என் வேண்டுதலுக்கு மனசு இரங்கி, நல்ல வழிகாட்டு. போன தடவை நான் உன்னை மனசிலே நினைத்து வேண்டிக் கொண்டேன். என்னையும் மச்சானையும் மணவறையிலே ஒண்ணடி மண்ணடியாக உட்கார வைத்து விட்டாய்..! இந்தத் தடவை என் மச்சானையும் என்அப்பனையும் ராசி பண்ணி விடு, தாயே! அப்பாவின் அறுபதாம் நிறைவுக் கல்யாணத்திலே மச்சானையும் என்னையும் கலந்துக்கிடச் செஞ்சிப்பிடு....! மேலைக்குத் தேரோட்டத் தன்றைக்கு மாவிளக்கு போடறேன், மாரியாத்தா!'' என்று உள்ளம் உருக, ஊன் உருக வேண்டிக்கொண்டாள் பவளக்கொடி.

''ஏ, பவளக் கொடி!'' என்று வாசலிலிருந்து குரல் கொடுத்தான் மாணிக்கம். வாசலில் அவன் மொட்டை வண்டியில் வந்து நின்றான்.

''மச்சான்....மச்சான்! வண்டி குடை சாய்ந்துவிடப் போவுது. இருங்க.... நான் வண்டி நுகத்தடியைப் பிடிச்சுக்கிடறேன்.... நீங்க கதிர்க்கட்டு எல்லாத்தையும் தரையிலே புரட்டிப் போடுங்க!..'' என்று கத்தினாள் பவளக்கொடி.

''அம்மாடி!..'' என்று நீண்ட பெருமூச்சு விடலானான் மாணிக்கம். தலையில் கட்டியிருந்த 'முண்டாசை' அவிழ்த்துத் தோளில்





அறுபதுக்கு அறுபது

கார்த்திகை பாலன்

போட்டபடி, காளைகளைப் பிடித்துக்கொண்டு போய்த் தண்ணீர்த் தொட்டியில் விட்டான். பிறகு பவளக்கொடி பேரன்புடன் கொண்டு வந்து கொடுத்த நீராகாரத்தைச் சாப்பிட்ட பிறகு, பலமாக ஏப்பம் விட்டான் மாணிக்கம். தலையை நிமிர்த்திய போது, அவனது கண்கள் பவளக் கொடியின் மீது ஊர்ந்து, அவளுடைய புத்தம் புதிய சுங்கடிப் புடவையில் படரலாயின.

''ஏது புதுசா யிருக்குதே சேலை?''

'கோடி வீட்டுக் கோவிந்தம்மா இது கணக்கிலே ஒண்ணு எடுத்துக்க....எனக்கும் ஆசையா வந்துச்சு....கருக்குப் பையிலே சேர்த்து வைச்சிருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்தேன். சொல்லி வைத்தாற் போல ஐந்து ரூபாயா இருந்துச்சு....! நழுவாமக் கொள்ளாமல் இதை வாங்கிக் கொண்டேன்...''

''பலே, பலே!'' என்று நற்சாட்சிப் பத்திரம் வழங்கினான் கொண்டவன்.

போன உயிர் மீண்டது—அவளுக்கு!

விழி சிமிட்டும் நேரம், பவளக்கொடியின் உயிர்ப் பறவை துடித்த துடிப்பினை மாணிக்கம் எப்படி அறிவான்?

''யாரு, கோவிந்தம்மாவா?'' என்று வினவியவாறே, திரும்பிப் பார்த்தாள் பவளக்கொடி.

'' ஆமாம், அக்கா!''

''நல்ல வேளையாகப் போச்சு! தேடிப்போன மூலிகை காலிலே சிக்கின மாதிரிதான்..!''

''என்ன அக்கா, நீங்கள் என்னையா தேடிக் கொண்டு வர இருந்தீங்க?'' என்று கேட்டாள் கோவிந்தம்மா.

'' ஆமாம், தங்கச்சி!''

'' என்ன சங்கதி, அக்கா?''


''சொல்லுகிறேன்..'' என்று பதிலளித்துக் கொண்டே சுற்று முற்றும்பார்த்தாள் பவளக் கொடி. ஈ, காக்கை ஒன்றும் இல்லை. கையில் பிடித்திருந்த 'வாங்கரிவாளை'த் தரையில் போட்டாள்; வேப்ப இலைத் துளிர்கள் சில அவளது தலையில் சிதறி விழுந்தன. அவற்றை எடுத்து வீசியவாறே, கோவிந்தம்மாவை அண்டினாள் பவளக்கொடி.

''தங்கச்சி, நேற்று எனக்கு ஒரு கண்டம் தப்பிடுச்சு.... அப்பா எனக்கு ரகசியமாக வாங்கித் தந்த சுங்கடிச் சேலையைக் கட்டிக் கிட்டிருந்தேன். என் மச்சான் இது ஏது என்று கேட்டது. வைச்சிருந்த பணத்திலே வாங்கினதென்றும் உன்னுடைய புடவையைப் பார்த்துவிட்டு ஆசைப்பட்டு வாங்கினதாகவும் சொல்லி வைச்சிருக்கேன். ஒரு வேளை மச்சான் உன்னைக் கூப்பிட்டு 'என்ன தங்கச்சி'ன்னு துப்பு விசாரிச்சாலும் விசாரிக்கும். சேதியை வெளிக் காட்டிப்பிடாதே'' என்றாள் பவளக்கொடி.

''ஆகட்டும், அக்கா! வருகிற கிழமைக்குத் தேவருக்கு அறுபதுக்கு அறுபதாமே?.... இன்னமுமா உங்க மச்சான் மனசு மாறல்லே? நீங்களாவது சொல்லப் படாதா?..''

''கோவிந்தம்மா, நான் மச்சானிடம் கெஞ்சாத கெஞ்சலில்லே.... சமயம் பார்த்துச் சொல்லிப் பார்த்தேன். அதற்குக் கிடைச்ச பரிசுதான் இந்தக் காயம்'' என்று கூறித் தன் வலது கை மணிக்கட்டைக் காட்டினாள் பவளக்கொடி.

''சரி, நான் போய் விட்டு வரேன்...எங்க அப்பாவுக்கு உடல் சுகமில்லே. மச்சான் வயல்காட்டுக்குப் போயிருக்குது.... கஞ்சி வேறே கொண்டு போகணும்... நான் போய் வரட்டுமா, அக்கா!'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டாள் கோவிந்தம்மா.



நிலவு பிறை வானத்தில் இலேசாக அசைந்தாடிச் சிரித்துக் கொண்டிருந்தது.

பவளக்கொடி ஐயனார் குதிரையையே இமை பாவாமல் பார்த்த வண்ணம் இருந்தாள். அவள் மனம், பன்னிரண்டு மாதங்களைத் தாண்டிச் சென்றது.

அந்த நாட்கள்...!

பவளக்கொடி என்றால் பூவைமா நகரத்திலே



ஆலயப் பிரவேசம் அனைவரின் உரிமை...

"ஆலயப் பிரவேசம் என்ற ஒரு புனிதச் செயல்தான் "தீண்டாதவர்"களுக்கு சுதந்திர உரிமையையும், ஆண்டவனின் முன்னிலையில் தாங்கள் புறக்கணிக்கப் படாதவர்கள் என்ற உறுதியையும் அளிக்கிறது."

—மகாத்மா காந்தி.

இந்திய அரசியல் சட்டம் தீண்டாமையை ஒழித்து எல்லோருக்கும் சம நீதியான சமூக பிரஜா உரிமைகளை அளிக்கிறது.

ஒரே தர்மத்தைப் பின்பற்றும் மற்றவர்கள் பிரவேசிக்கக்கூடிய எந்தவொரு—பொதுஜன பிரார்த்தனை சன்னதியிலும் பிரவேசிப்பதையோ அல்லது ஒரே தர்மத்தைப் பின்பற்றும் மற்றவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதே முறையில் அதே அளவில் எந்தவொரு பிரார்த்தனை சன்னதியிலும் தர்மச் சடங்குகளை நடத்துவதையோ அல்லது பிரார்த்தனை செய்வதையோ அல்லது வழிபடுவதையோ யாரும் எவரையும் தடுக்க முடியாது.

தீண்டாமையை ஒழித்துக் கட்டுங்கள் —
சமத்துவத்தை நிலை நாட்டுங்கள்.

DA-54/208TM



மயிலாப்பூர் தியாகராஜ வித்வத் சமாஜத்தினரும், தியாகராய நகர் கிருஷ்ணகான சபையாரும் சென்ற 20—1—57 அன்று சங்கீத மூர்த்தி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 110வது ஆராதனை மகோத்சவத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். மயிலை வித்வத் சமாஜத்தின் விழாவை 'சுயராஜ்யா' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ காசா சுப்பாராவ் ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ முடிகொண்டான் வெங்கடராமய்யர் விழாவுக்குத் தலைமை வகித்தார். கிருஷ்ணகான சபையார் பல சங்கீதக் கச்சேரிகளோடு உபந்நியாச நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.

இளவட்டங்களின் மத்தியிலே ஒரு மயக்கம். காரணம், அவள் அழகு அப்படி. அவள் காட்டுரோஜா. பட்டிக்காட்டுப் பக்கங்களில் வெகு அபூர்வமாகக் காணப்படும் சிவப்பு நிறம் அவளது மேனியில் தஞ்சம் புகுந்திருந்தது. நிறம் என்றால், அழகான ரோஜாப்பூ நிறம். அவள் அழகைக் கண்டு மனத்தைப் பறி கொடுத்தவர்களில் மாணிக்கமும் ஒருவன். பவளக்கொடிக்கும் அவன் மீது அளவற்ற பிரேமை. அவன் நாலு எழுத்துப் படித்தவன்; அழகு அவனிடம் மிகுந்திருந்தது. அதோடு, அக்கரைச்சீமை அவன் மேனியில் பூசியிருந்த நாகரிக மெருகு வேறு. பவளக்கொடியையே தன் ஆசைக்கிளியாக ஆக்கிக் கொள்ள முயன்றான். பவளக்கொடியின் தந்தை மாசிமலைத்தேவர் எப்போதுமே பணத்துக்கு அதிக மதிப்புத் தருபவர். ஆகவே, அவர் எதிர்பார்த்த 'பசை' மாணிக்கத்திடம் இல்லாதது கண்டு தட்டிக் கழிக்கப் பார்த்தார்.

பாவம், பவளக்கொடி மெழுகாக உருகிப் போய் விட்டாள். முதல் பிரார்த்தனையாக மாரியம்மனிடம் வேண்டுதல் விடுத்தாள். அப்புறம், பூவத்தக்குடிப் பிரமுகர் சங்கரலிங்கம் அம்பலத்தினிடம் தன் கனவைப் பற்றிச் சொன்னான். தேவரின் பிடிவாதம் தளராத நிலையில், அம்பலம் ரொக்கமாக ஐந்நூறு ரூபாய் கொடுத்து, அதை மாணிக்கத்தின் சொந்தப் பணமாக்கி, அதைக் கொண்டு பவளக்கொடிக்கு நகை நட்டுக்கள் செய்யச் சொல்லி ஏற்பாடு செய்தார். கிராம வழக்கப்படி, திருமணச் செலவை, தேவர் ஏற்று நடத்த வேண்டுமென்று இசையவும் செய்தார். ஆக, அம்பலத்தின் திரைமறைவுச் செயல்களினால், பவளக்கொடி மாணிக்கத்தின் கரம் பற்றினாள்.

ஊர் சுற்றித் திரிந்துகொண்டிருந்த அவன் தன் பொறுப்புக்களை உணரலானான். அம்பலத்திடம் வாங்கிய கடன் அவன் உள்ளத்தை நெருஞ்சில் முள்ளாகத் தைத்தது.

மேலும், அவனோ தாய் தந்தை இல்லாத அனாதை. தன் பெயருக்கு இருந்த இருநூறு குழி பரப்புள்ள தென்னம்பிள்ளைக் கொல்லையைச் சீராக்கி, அதில் வேர்க்கடலை போட்டான். இரவு பகல் உழைத்தான். பலன் கிடைத்தது. கடன் கழிந்தது. அடுத்திருந்த அலஞ்சிறங் காட்டுப் பகுதியில் ஒரு துண்டு நஞ்சை நிலத்தை வாங்கினான். ஒரு போகம் விளைச்சல் உருப்படியாக அமைந்தது. அக்கரைச் சீமைக்குப் போக முடியாத சூழ்நிலையில் அவதிப்பட்ட மனத்துக்கு ஓரளவு தேறுதல் உண்டாயிற்று. நாலு பேர்கள், ''வா, தம்பி!'' என்றார்கள். ''சுகமுங்களா, தம்பி!'' என்று குசலம் விசாரித்தார்கள். சொந்தத்தில் காளை இரண்டு வாங்கினான். அதில் ஐந்நூறு ரூபாய் முடங்கி விட்டது. ஆனால், அவனுடைய பொல்லாத அந்த ஜோடிக் காளைகளில் ஒன்று கோமாரி நோய் வந்து இறந்து விட்டது. அப்பொழுது வெள்ளாமைக் காலம். இறந்த காளைக்குப் பதிலாகப் புதிய காளை ஒன்றைத் தேடிப் பிடித்தான். விலைகூட 'தகைந்து' விட்டது. ஆனால் பணத்தைத்தான் சமாளிக்க முடியவில்லை. தன் மனைவியிடம் சொல்லி, அவளுடைய தந்தையிடம் கடன் கேட்டுவரச் சொன்னான் மாணிக்கம். தேவரோ மறுத்து விட்டார்.

அதிலிருந்து தன் மாமன் என்றால் அவனுக்கு ஒரு வெறுப்பு.

மாமனும் மாப்பிள்ளையும் பேச்சு வார்த்தைகளைக் கூடக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களானார்கள். ஒரு நாள் மாசிமலைத் தேவர் 'படுக்கையில் விழுந்து' விட்டார். அவருக்கு வியாதி ரொம்பவும் அதிகமாகப் போயிற்று. நாட்டு வைத்தியர் சோமசுந்தரம் ஒருபக்கம் நாடி பார்த்துச் 'சூரணம்' குழைத்துக்கொடுத்தார்; கிராமத்தின் 'தலைக்கட்டு'க் காரர்கள் வந்து தேவரைப் பார்த்துப் போனார்கள். ஆனால், உரிமை கொண்டாட வேண்டிய மாப்பிள்ளை மாணிக்கம் மாத்திரம் அந்தப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை. அத்துடன் தன் மனைவியையும் பாசத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி உத்தரவு பிறப்பித்தான். ஒருநாள் மாசிமலைத் தேவர், "என்னமோ, மாரியாத்தாவுக்கு நான் எடுத்துப் போட்ட பூ நல்ல பூ; பிழைச்சு எழுந்திருந்து விட்டேன்!" என்று சொல்லி மறு பிறவி எடுத்து உட்கார்ந்து விட்டார்.

நாட்கள் கழிந்தன. ஒருநாள் முறை வைத்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சிய போது, மாணிக்கம் தூங்கிப் போகவே, கால எல்லையைக் கடந்து அவனுடைய வயலுக்குத் தண்ணீர் பாய்ந்து வழிந்ததைக் கண்டார் தேவர். ஆத்திரம் கொண்டார்; திட்டினார். மாமனுக்கும் மருமகனுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. தேவர் தம் மருமகப்பிள்ளை பேரில் வழக்குப் போட்டார். மாணிக்கம் நூறு ரூபாய் அபராதம் கட்ட வேண்டியவனானான்.

இச்சம்பவம் நடந்து இன்னும் அறுபது நாட்கள்கூடப் பூர்த்தி பெறவில்லை. அதற்குள் தேவரின் சஷ்டியப்த பூர்த்தி விழா வீட்டு வாசலுக்கு வந்து விட்டது.

"இனி இந்தப் பிறப்பிலே அந்த ஆள் வீட்டு வாசலிலே அடி எடுத்து வைக்கக் கூடாது. அவருக்கு அறுபதுக்கு அறுபது வரட்டும், இல்லே எழுபதுக்கு எழுபது வரட்டுமே, எனக்கென்ன?....என் மானம் பறிபோகச் செய்த அவர் என் மட்டுக்கும் ஒரு துரும்பு கணக்கேதான்!" என்று தீர்மானமாகப் பேசினான் மாணிக்கம்.

தந்தையின் ஆத்திரத்துக்கும் கணவனின் வேதனைக்கும் இடையில் பவளக்கொடி காற்றில் அகப்பட்ட கொடியாகத் துவண்டாடிக் கொண்டிருந்தாள்.

"ஆமாம், இதுதான் தக்க சமயம். மச்சான் அறந்தாங்கி செவ்வாய்ச் சந்தைக்குப் போனவங்க திரும்புவதற்கு எப்படியும் ராத்திரியாகி விடும். இந்தக் கிழமைதான் பொங்கல் சந்தை வேறு. ஆகவே, இன்னும் கொஞ்சம் நேரமானாலும்கூட ஆகும். இப்பொழுதே அம்மாவைக் கண்டு பேசணும். நாளை விடிந்தால் அப்பனுக்கு அறுபதாம் நிறைவுக் கல்யாணம்....அம்மா காலிலே விழுந்தாவது அப்பாவைச் சமாதானப்படுத்தி மச்சானை அழைக்க ஏற்பாடு செய்தால்தான் மச்சானுடைய மனசும் ஆறுதல்படும்; அவரும் விசேஷத்துக்கு வருவாரு. இல்லாத போனால், அவரும் போக இயலாது; அதோடு நானும் பிறந்த வீட்டுக்கு அடியெடுத்து வைக்க விட

மாட்டாரு..! மாரியம்மாதான் மனசு வைச்சு எல்லாத்தையும் சுமுகமாக்க வேணும். இவ்வளவு பெரிய விசேஷத்துக்கு நாங்க ஒண்ணு கூட முடியல்லேன்னு, பிறகு உறவு முறையே விட்டுப் போய்விட வேண்டியதுதான்..!'' என்று பலவாறு எண்ணமிட்டவளாக நடந்தாள் பவளக்கொடி. தன் தந்தை வீடு அடைவதற்குள் அவளுக்கு வேர்த்து விட்டது. தேவர் வீட்டில் இல்லை.

''அம்மா..'' என்று அழைத்தாள். அஞ்சலை வந்தாள். அவளுடைய முகம் வீங்கிக் கிடந்தது. என்னமோ ஏதோவென்று பயந்தவளாக, முதலிலேயே தன் நோக்கத்தைத் தாயிடம் வெளியிட்டாள் பவளக்கொடி. ''பவளம், உனக்கு முந்திக் கொண்டு நானே உன் அப்பாவிடம் காலையிலே சொன்னேன், மாப்பிள்ளையைப் போய்க் கூப்பிடுங்கன்னு. அதற்கு அவரு ஒரேயடியாகச் சத்தம் போட்டு என்னைக் கன்னத்திலே வேறே அறைஞ்சிட்டுப் போயிட்டாரு! விசேஷத்துக்கு இன்னும் ஒருபொழுதுதான் இருக்குது...எனக்குத்தான் வயிறு பற்றி எரியுது!...திக்கும் புரியவில்லை. இங்கே உங்க அப்பாரு வைராக்கியக்காரங்களாக யிருக்காங்க; அங்கே உன் வீட்டுக்காரங்க வைராக்கியமாகிக் குந்திக்கிட்டிருக்காங்க... மாரியாத்தாள் பார்த்துத்தான் ஏதாவது ஒரு வழி காட்ட வேண்டும்!'' என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் சொல்லி நிறுத்தினாள் பவளக்கொடியைப் பெற்ற அஞ்சலை.

ஏமாற்றம்! தாயார் அன்புடன் தந்த விருந்துப் பலகாரங்களைக்கூட மறுத்து விட்டுத் தன் வீடு திரும்பினாள் பவளக்கொடி!

பூவைமா நகரத்தின் இருதயத்தில் நாதசுரத்தின் இனிய ஜீவநாதம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

கண்களைத் நீட்டிக் கொண்டு பார்த்தான் மாணிக்கம். நகரத்தார்கள், செட்டிமார்கள், அம்பலக்காரர்கள், தேவர்மார்கள் இப்படி அங்கங்கே வடக்குக் கோடிப்பக்கம் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆமாம்; மாசிமலைத் தேவரின் அறுபதாண்டுப் பூர்த்தி விழாவில் கலந்து கொள்ளத்தான்!

அப்போது, தண்ணீர்க் குடத்துடன் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தாள் பவளக்கொடி. அவளுடைய காதுகளில் ஒலித்த 'தவுல் அடி' அப்லை உள்ளத்தில் இடியாக இடித்தது. கண்ணீர் முட்டி மோதிக் கொண்டு வந்தது. சற்று முன் கிணற்றடியில் அவளிடம் தன் தோழிகள் கேட்ட கேள்விகளை நினைவுப் படுத்திக் கொண்டாள். ''பாவம், நீயும் உன் மச்சானும் தேவருடைய அறுபதாம் கல்யாணத்துக்குப் போகப் போறதில்லையா?'' என்று கேட்ட அந்த ஒரே கேள்விக்கு அவளால் எவ்வாறு பதில் சொல்ல முடியும்?

''பவளம், உன் அப்பனோ, அம்மாவோ யாரு ஆள் அனுப்பினாலும் நீ அந்தப் பக்கம் காலெடுத்து வைக்கடாதே!... நீ அங்கே போனாயோ, பிறகு நான் மனுசனாயிருக்க மாட்டேன்... ஆமாம், சொல்லி விட்டேன்! உன் அப்பன் எனக்குப் பண்ணின மானக் குறைச்சலுக்கு நானாக அவரு வீடு தேடிப் போய் விசேஷத்திலே கலந்துக்கிடணுமாம்; அவரு வந்து என்னை அழைக்கவே மாட்டாராமே! ....ம்...... எல்லாம் பணம்



ராமேசுவரம் கோவில் மண்டபத்தில் சமீபத்தில் குமாரி நளினியின் நடனவிருந்து வெகு விமரிசையாக நடந்தேறியது. இவ் வைபவத்துக்கு மக்கள் திரளாக விஜயம்செய்து நடனத்தைக் கண்டு களித்தனர்.

பண்ணுகிற வேலே!..பார்க்கலாம், எங்க இரண்டு பேரின் வைராக்கியத்திலே யாருடையது ஜெயிக்குதுன்னு!....வயசுக் காலத்திலே தேவருக்கு ஒரு ஆபத்து சம்பத்துன்னு யாரு ஓடி உதவுறாங்களோ, பார்க்கலாம்!....ம், எல்லாப் பணத்தையும் அவரு சாகறப்போ அள்ளிக்கிட்டா போகப் போகிறாரு?...." என்று கோபம் பொங்கப் பேசினான் மாணிக்கம்.

அடித்து வைத்த பொற்சிலையானாள் பவளக் கொடி. 'ஐயோ, இன்னும் ஒரு நாழிகை கழிஞ்சா அறுபதுக்கு அறுபது நடந்து விடுமே!..அதுக்குள்ளே நாங்கள் ராசி ஆக வில்லேன்னா, அப்புறம் இந்தப் பிறப்பிலே இனி ஒட்டுதலே ஏற்படாதே..தாயே, மாரி யாத்தா!' என்று விம்மினாள்.

"பவளக் கொடி! பவளக் கொடி!.... உங்க அப்பாரு தண்ணி மொள்ளுகிறபோது கிணற்றிலே தவறி விழுந்து விட்டாராம்.... வீடே இமிலோகப்படுகிறது!.." என்று ஓடோடி வந்து அலறினாள் கோவிந்தம்மா.

"ஆ!" என்று அலறினாள் பவளக் கொடி. அவள் விம்மினாள்.

"என்ன, தேவரு கிணற்றிலே விழுந்துவிட்டாரா?" என்று வினவினான் மாணிக்கம்.

ஒருகணம் நின்றான்; நிதானித்தான். மறுகணம், "பவளம், ஓடிவா..நான் முன்னாலே ஓடுகிறேன்" என்று சொல்லி வேகமாக ஓடத் தொடங்கினான் மாணிக்கம், மாசிமலைத் தேவர் வீட்டை நாடி.

வழியில் மாணிக்கம் கண்ட காட்சி அவனை மலைக்கச் செய்தது. எதிரே மாசிமலைத் தேவர்-மாப்பிள்ளைக் கோலத்துடன் இருந்த தேவர், பதைபதைக்க ஓடி வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவரது துணைவி அஞ்சலை ஓடி வந்துகொண்டிருந்தாள்.

மாப்பிள்ளையும் மாமனும் அந்த இடத்தில்— இளைஞர் சங்கத்தின் முன்னே-சந்தித்தார்கள்.

"மாப்பிள்ளை! நீங்க தீயிலேயிருந்து தப்பி விட்டீர்களா? உங்கள் வைக்கோல் போரிலே தீப் பிடிச்சு, நீங்கள் நெருப்பிலே அகப்பட்டுக் கொண்டு விட்டதாகக் கோவிந்தம்மா சொன்னாள். ஓடோடி வந்தேனே! மாரியாத்தாள் என் மகளின் மஞ்சள் கயிற்றைக் காப்பாற்றி விட்டாள்! நான் பிழைச்சேன்!" என்று தம்மை மறந்து கண்ணீர் வடித்தார் கிழவர்-அல்ல, அறுபது வயது இளைஞர்.

மாணிக்கம் நெற்றியில் தேங்கிய கேள்விக் குறிக்கு விடைகாணாமல் நின்றான். "நாளுவது தீயிலே அகப்பட்டுக் கிட்டேனாவது?" என்று எண்ணியவன் வாய் திறந்து பேசினான்:

"மாமா! நீங்கள் கிணற்றிலே விழுந்து விட்டீங்கன்னு சேதி கேட்டேன். ஓடி வரேன்...ஒன்னும் காயம் கீயம் இல்லையே?"

"நான் கிணற்றிலே விழுந்தேனா?" என்று அதிசயத்துடன் கேட்ட தேவர், தம் மாப்பிள்ளையை நோக்கினார்.

மாமனும் மாப்பிள்ளையும் ஒருவரை ஒருவர் அதிசயத்துடன் பார்த்துக் கொண்டார்கள்! அருகில் நின்ற பவளக்கொடி கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுதுகோவிந்தம்மா குறுக்கிட்டுப் பேசினாள்: "நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க, பெரியப்பா. மாணிக்க அத்தான்! நீங்களும்காதுகொடுத்துக்கேளுங்க. நீங்க இரண்டு பேரும் கொண்டிருந்த வைராக்கியமும் விடாப்பிடியும் கொஞ்சங் கூட 'டிக்கிரி' குறையலே காணும். பாவம், பவளக் கொடி அக்காளின் பாடு தான் ரொம்பக் கவலையாகப் போச்சு. உங்க இரண்டு பேரையும் ராசி பண்ணி வைக்க ஊர்க்காரர்கள் நடந்த நடையும் வீணாகிப் போச்சு! இந்த அறுபதுக்கு அறுபதிலேகூட மாமனும் மாப்பிள்ளையும் சேர்ந்து ஒரு பந்திச் சோறு உண்ணலேன்னா, சொந்தம் முறிஞ்சு போயிட வேண்டியதுதான். அதனாலேதான் ஒரு யோசனை செய்தேன். அதன் பலன்தான் இது! மாணிக்கம் அத்தான் தீயிலே மாட்டிக்கிட்டாரென்று நான் பெரியப்பாவிடம் சொன்னதும், மணவறையிலே இருந்தவங்க விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தாங்க! அதே கணத்திலே தேவரய்யா கிணற்றிலே விழுந்து விட்டார் என்று தகவல் தெரிவித்ததும், மாணிக்கம் மச்சான் பதைச்சுப் போய் ஓடி வந்தாங்க! ஆக என் ஆசை நிறைவேறிவிட்டது! அத்தான், பெரியப்பா! என்னை மன்னிச்சுடுங்க!" என்றாள்.

மாசிமலைத் தேவர் புன்னகை புரிந்தார்; மாணிக்கம் சிரித்தான்.

"மாப்பிள்ளை! வாங்க என் வீட்டுக்கு. முகூர்த்தத்துக்கு நேரமாயிடுச்சு! என்னை மன்னிச்சிடுங்க. மாரியாத்தாள் இப்பொழுது தான் என் கண்ணைத் திறந்து விட்டாள்! நீங்களும் பவளமும்தானே என் உயிர்! வாங்க. வா, பவளம்!" என்று வேண்டினார் தேவர். ஜரிகை துப்பட்டாவினால் கண்களைத் துடைத்துக் கொண்டார் அவர்.

* * *

பவளக் கொடி மாரியம்மன் சந்நிதியில் வந்து நின்றாள்.

"ஆத்தா! ஏழையின் பிரசாதத்தை ஏற்றுக்கணும்! தாயே, இந்த உறவும் ஒட்டுதலும் எங்க குடும்பத்திலே எப்போதும் இருக்க அருள் செய், மாரியத்தா!"

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited. Managing Editor: T. Sadasivam.


அண்டை வீட்டுக் குழந்தையைப் பற்றி எனக்கு ஒரே கவலை
இப்படியா ஒரு குழந்தை அழுதுகொண்டேயிருக்கும்! என்னை தூங்கவிடாமல் பாடுபடுத்துகிறது. சாயங்காலம் வெளியே போகும் ஆயாவுக்கு அவனைச் சமாளிப்பது பெரும்பாடு. எப்போ பார்! அவன் சிடுமூஞ்சி. ஒரே அடம்பண்ணுகிறான். எனக்கு க்ளாக்ஸோ கொடுக்க ஆரம்பிப்பதற்கு முன் நானும் இப்படித்தான் பாடுபடுத்திக்கொண்டிருந்தேன். பாவம்! அடுத்த வீட்டு அம்மாவிடம் குழந்தைக்கு புஷ்டி தரும் க்ளாக்ஸோவையே கொடுக்கும்படி எங்கம்மா ஏன் இன்னும் சொல்லவில்லை? க்ளாக்ஸோவில் எலும்புகளும், பற்களும் உறுதிபெற விடமின்-டியும் இரத்த புஷ்டிக்கு வேண்டிய இரும்பு சத்தும் கலந்திருக்கின்றன.
நான் சிபாரிசு செய்வது க்ளாக்ஸோ
Glaxo
குழந்தைகளின் பரிசுத்தமான பால் உணவு
SUNSHINE
Glaxo
க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (பிரைவேட்) லிட்., பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

